24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 24
விலை: 30

சுடர் 34 கதிர் 87 மாசி 10ஆம் நாள் வெள்ளிக்கிழமை 22 பெப்ரவரி 2019 வள்ளுவர் ஆண்டு 2050

# போர்க்குற்றம் இழைக்கப்பட்டிருந்தாலும் இராணுவத்தைத் தண்டிக்க இடமளியேன்



## மைத்திரி இறுமாப்பு; காட்டிக் கொடுப்போருக்கு வரலாறு தக்க பாடம் புகட்டும் என்றும் மிரட்டல்

கொழும்பு, பெப்ரவரி 22

இறுதிப் போரில் இராணுவத்தினர் போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லை என்பதுதான் எனது நிலைப்பாடு. எனினும், அவர்கள் போர்க்குற்றங்களில் ஈடுபட்டார்கள் என்று எவராலும் சொல்லப்பட்டாலும் இராணுவத்தைத் தண்டிக்க இடமளிக்கமாட்டேன். நான் ஆட்சியில் இருக்கும் வரை இதற்கு ஒருபோதும் அனுமதியளிக்கமாட்டேன். அது ஒருபோதும் நடவாது. இவ்வாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். >> 21

## கேப்பாபிலவிலும் மனிதப் புதைகுழி

*படையினர் காணியை விடுவிக்க மறுப்பதன் மர்மம் அதுவேதான் என்கின்றனர் மக்கள்*

முல்லைத்தீவு, பெப். 22

மன்னார் மனிதப் புதைகுழி போன்று கேப்பாபிலவிலும் மனிதப் புதைகுழிகள் இருக்கலாம் என்று கேப்பாபிலவு மக்கள் தெரிவித்துள்ளனர். நில மீட்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள கேப்பாபிலவு மக்களை சுவிஸ் தூதரக அதிகாரிகள் நேற்றுச் சந்தித்தனர். >> 21

## அத்துமீறி மீன்பிடித்த இந்திய மீனவர்களின் படகும் ஏனைய பொருள்களும் அரசுடைமை

கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றம் நேற்று அதிரடி

கிளிநொச்சி, பெப். 22

பூநகரிக் கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்கள் பதினொரு பேரின் படகு, இயந்திரம், வலைகள் ஆகியவற்றை அரசுடமையாக்கி நேற்று அதிரடி அறிவிப்பை வெளியிட்டது கிளிநொச்சி நீதிவான் நீதிமன்றம். ஜனவரி மாதம் 11ஆம் திகதி பூநகரி - கிராஞ்சி கடற்பரப்புக்குள் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டின் கீழ் குறித்த மீனவர்கள் கைது செய்யப்பட்டனர். ஜனவரி 13ஆம் திகதி கிளிநொச்சி நீரியல் வளத் திணைக்களத்தின் >> 21




## ஒரு பூங்காவுக்கு இரு திறப்புவிழா

கிளி. பசுமைப்பூங்காவுக்கு நேர்ந்தது இந்த நிலமை

கிளிநொச்சி, பெப். 22

கிளிநொச்சி டிப்போச் சந்தியில் அமைந்துள்ள பசுமைப் பூங்கா இன்று மீண்டும் திறந்து >> 21

## அரசமைப்பு பேரவையில் முழு அரசியல் தலையீடு

*மைத்திரி கொதிப்பு*

கொழும்பு, பெப். 22

அரசமைப்புப் பேரவை முழுமையான அரசியல் தலையீட்டில் மட்டுமே செயற்பட்டு வருகின்றது. நிறைவேற்று அதிகாரத்தையும், அரசமைப்பையும், நீதிமன்றத்தையும் முழுமையாகக் கட்டுப்படுத்தும் வகையிலேயே அரசமைப்புப் பேரவை செயற்படுகின்றது என அரச தலைவர் >> 21

## முல்லை. கடற்பரப்பில் தென்னிலங்கை மீனவர்களுக்கு தொழில்புரிய அனுமதி!

அந்தப் பகுதி மீனவர்கள் ஆவேசம்; கண்டனம்

முல்லைத்தீவு, பெப். 22

முல்லைத்தீவு கடற்பரப்பில் கடற்தொழிலில் ஈடுபடுவதற்கு தென்னிலங்கை மீனவர்களுக்கு அனுமதி கொடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் தத்தமது கடும் கண்டனத்தை முல்லைத்தீவு மீனவ அமைப்புக்கள் பதிவுசெய்தன.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

தென்னிலங்கையைச் சேர்ந்த படகுகள் சில முல்லைத்தீவு சாலை கடற்பரப்பில் கடற்தொழிலில் >> 21

*யாழ்ப்பாணத்தில்*

## 250 மில்லியன் செலவில் தகவல் பேணும் வர்த்தக மையம்

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ்ப்பாணத்தில் 250 மில்லியன் ரூபா செலவில் தகவல் தொழில்நுட்ப விருத்திக்கான தகவல் பேணும் வர்த்தக மைய >> 21

## அரசமைப்புப் பேரவையில் குறைபாடுகள் இருப்பின் அதைப் புதுப்பிக்க வேண்டும்: நிராகரிக்கக் கூடாது!

லக்ஸ்மன் கிரியெல்ல காட்டம்

கொழும்பு, பெப். 22

அரசமைப்புப் பேரவையில் குறைபாடுகள் இருப்பின் அதனைப் புதுப்பித்து நீதித்துறையைச் சுயாதீனப்படுத்த வேண்டுமே தவிர அரசமைப்புச் சபையை நிராகரிக்கக்கூடாது என்று தெரிவித்தார் லக்ஸ்மன் கிரியெல்ல. நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை எதிர்க்கட்சியால் >> 21

## வாகனங்களை தீக்கிரையாக்கினரென நால்வர் கூரிய ஆயுதங்களுடன் கைது!

யாழ்ப்பாணம், பெப். 22

யாழ்ப்பாணம் கொக்குவிலில் வீடு மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தி வாகனங்களைத் தீக்கிரையாக்கினர் என்ற குற்றச்சாட்டில் 4 பேர் கைதுசெய்யப்பட்டனர் என்று கோப்பாய்ப் பொலிஸார் தெரிவித்தனர். அவர்களிடமிருந்து வாள்கள் உட்பட கூரிய ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன.



கொழும்பில் தலைமறைவாகியுள்ள மற்றொருவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் பொலிஸார் தெரிவித்தனர். (விரிவு பக். 09)

DFCC வங்கி தரும்
அதிகூடிய வட்டி
12.5%
6 மாத நிலையான வைப்பிற்கு
ஆ.ச.வ. 12.89%
DFCC நிலையான வைப்பு
சிரேஷ்ட பிரஜைகளுக்கு 13% வட்டி. ஆ.ச.வ. 13.42%
24 மணிநேர அழைப்பு நிலையம்: 0112 350000
www.dfcc.lk
DFCC வங்கி

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# தனக்குத் தனக்கென்றால்..!

படையினருக்கு எதிராகத் தாக்குதல் தொடுத்த தமிழீழ விடுதலைப் புலிகள் மன்னிக்கப்பட்டனர், நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதில் சிங்கள மக்கள் தமது கடமையைச் சரிவர நிறைவேற்றியுள்ளார்கள், தமிழர்கள் தரப்பிலிருந்துதான் கூடுதல் பங்களிப்பு அவசியமாக உள்ளது.

இப்படித் தெரிவித்திருக்கிறார் வான்படையின் முன்னாள் தளபதி எயார் சீவ் மார்சல் ரொசான் குணதிலக்க. கொழும்பில் நேற்றுமுன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்தபோது அவர் இதனைத் தெரிவித்திருந்தார்.

இலங்கைத் தரைப் படையின் மூத்த, முக்கிய தளபதியாக இருந்தவரான தயாரத்நாயக்க, கடற்படையின் முக்கிய தளபதியாக இருந்தவரான அட்மிரல் திசார சமரசிங்க ஆகியோரும் இந்தச் சந்திப்பில் உடனடிருந்தனர். இவர்கள் மூவருமே இறுதிப் போர்க் காலத்தில் அதனை வழிநடத்திய பொறுப்புமிக்க பதவிகளில் இருந்தவர்கள்.

படையினர், புலிகள் ஆகிய இரு தரப்பினருமே போர்க்குற்றம் புரிந்தனர் அவற்றை மறப்போம்; மன்னிப்போம் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க வடக்கில் ஆற்றிய உரை தெற்கில் கடும் வாதப் பிரதிவாதங்களை உருவாக்கியுள்ள நிலையில் ரணிலின் கருத்துக்குப் பதிலளிக்கும் விதத்திலேயே இந்தப் படைத் தளபதிகள் மூவரும் செய்தியாளர்களைச் சந்தித்தனர்.

அவர்களது செய்தியாளர் சந்திப்பின் சாராம்சத்தை ஒரு சில வார்த்தைகளில் முடித்துவிடலாம். சிங்களப் படையினருக்கு எதிராகப் போராடிய தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் விடுவிக்கப்பட்டுவிட்டனர். அவர்களைச் சிங்கள மக்கள் மன்னித்துவிட்டார்கள். எனவே தமிழ் மக்களும் சிங்களப் படையினரை மன்னித்துவிட வேண்டும் என்பதுதான்.

இது ஒரு நகைப்புக்கிடமான வாதமாக இருக்கின்றது. எப்படி இத்தகைய ஒரு கருத்தைப் அப்பட்டமாக இவர்களால் பொது வெளியில் வைக்க முடிகிறது என்பதே ஆச்சரியத்துக்குரியதாக இருக்கின்றது. அரச படையினரும் தமிழீழ விடுதலைப் புலிகளும் போரில் ஈடுபட்ட இரு தரப்பினராவர். போர் முடிந்த நிலையில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் பல ஆண்டுகளாக மறுவாழ்வு என்ற பெயரில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர். படையினருக்கு எதிராகத் தாக்குதல் நடத்தியமைக்காவே அவர்களுக்கு அந்தத் தடுப்புக் காவல் தண்டனை வழங்கப்பட்டது. மறுவாழ்வு என்ற பெயரில் முன்னாள் புலிகள் எவ்வளவு தூரம் சித்திரவதை செய்யப்பட்டனர் என்பதற்கும் ஏராளமான சாட்சிகள் உண்டு.

அதுபோகட்டும், படையினருக்கு எதிராகப் போரிட்ட புலி உறுப்பினர்கள் தண்டிக்கப்பட்டதைப் போன்று புலிகளுடன் போரிட்ட படையினரைத் தண்டிக்குமாறு தமிழ் மக்கள் ஒருபோதும் கேட்கவில்லை. போரில் ஈடுபடும் இரு தரப்பினரும் கடைப்பிடிக்கவேண்டிய நெறிமுறைகள் குறித்துப் பன்னாட்டுச் சமூகம் ஏற்றுக்கொண்டுள்ள விதிகளையும் இலங்கை அரசு கையொப்பம் இட்டு ஏற்றுக்கொண்ட பன்னாட்டு மனித உரிமைகளையும் மீறிய படையினருக்கும் போரில் பன்னாட்டுச் சமூகத்தால் தடைசெய்யப்பட்ட மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்களைப் புரிந்த படையினருக்கும் எதிராகத்தான் தமிழ் மக்கள் போர்க்குற்ற விசாரணையைக் கேட்கிறார்கள்.

போரில் ஈடுபட்ட தரப்பினர் மீது அல்ல, போரில் ஈடுபடாத பொதுமக்களுக்கு எதிராக நிகழ்த்தப்பட்ட பெரும் குற்றங்களைப் புரிந்த இலங்கைப் படையினருக்கு எதிராகத்தான் விசாரணை கோரப்படுகின்றது. அத்தகைய குற்றங்களைச் செய்தவர்கள் இருக்கின்றார்கள் என்பதையும் அதற்குப் பொறுப்பும் தலைமையும் வழங்கியவர்கள் யார் என்பதையும் தலைமை அமைச்சரும் போர்க் காலத்தில் தரைப் படையின் தளபதியாக இருந்தவரான பீல்ட் மார்சல் சரத் பொன்சேகாவும் உறுதிப்படுத்தியிருக்கின்றனர். அந்தக் குற்றவாளிகள் மீதே தமிழ் மக்கள் விசாரணை கோருகின்றனர். இன்னும் சொல்லப்போனால் புலிகளோடு போரிட்ட படையினருக்கு எதிராக அல்ல, புலிகளோடு போரிடாமல் கொலைகளை மட்டுமே புரிந்த படையினருக்கு எதிராகத்தான் போர்க்குற்ற விசாரணை தேவையாக இருக்கின்றது.

படைகளின் முன்னாள் தளபதிகளுக்கு இது ஒன்றும் புரியாத விடயங்களல்ல. அதற்கு மேலாக சிங்கள மக்கள் மீது தாக்குதல் நடத்தினார்கள், லயன் ஏயார் பயணிகள் வானூர்தி மீது தாக்குதல் நடத்தினார்கள், அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் மீது தாக்குதல் நடத்தினார்கள், தலதா மாளிகையின் மீது தாக்குதல் நடத்தினார்கள் என்கிற குற்றச்சாட்டுக்களின் கீழ் கைது செய்யப்பட்ட மற்றும் பல இராணுவ முகாம்களைத் தாக்கினார்கள் என்கிற குற்றச்சாட்டுக்களின் கீழும் கைது செய்யப்பட்ட விடுதலைப் புலிகள் தண்டிக்கப்பட்டிருக்கிறார்களே தவிர அவர்களுக்கு மன்னிப்பு வழங்கப்படவில்லை. அரசியல் கைதிகளாகக் குற்றச்சாட்டுக்கள் இன்றி தடுத்து வைக்கப்பட்டவர்களுக்குக்கூட மன்னிப்பு வழங்கப்படவில்லை என்பதையும் இந்தத் தளபதிகள் மறந்துவிட்டமை ஆச்சரியம்தான். தனக்குத் தனக்கென்றால் சுளகு படக்குப் படக்கு எனுமாம் என்கிற சொலவடை ஒன்று தமிழில் உண்டு.

# கூட்டுக் குற்றவாளிகள்

சேரலாதன்



அரசியல்வாதிகளுக்கும் நாட்டில் உள்ள மோசமான குற்றவாளிகளுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதாகக் கூறப்படுகின்றமை இலங்கை எத்தகைய கீழ்நிலைக்குச் சென்றுள்ளது என்பதைத் தெளிவாகக் காட்டுகின்றது. இந்தியாவில் மாத்திரமே இத்தகைய நிலமை இருக்கின்றது என்று எண்ணிக் கொண்டிருந்த நிலையில் அது இங்கும் காணப்படுகின்றமையை எண்ணி வெட்கித் தலைகுனியவேண்டும்.

ஊடகங்கள் அனைத்தும் டுபாயில் வைத்துக் கைது செய்யப்பட்ட பிரபல போதைப்பொருள் வர்த்தகரும் பாதாள உலகக் குழுவொன்றின் தலைவருமான மதுஷ் தொடர்பான செய்திகளைப் பரபரப்புடன் வெளியிட்டு வருகின்றன. இவரை நாட்டில் வைத்துக் கைது செய்வதற்கு அரசால் முடியவில்லை. அந்த அளவுக்கு பண பலமும் அரசியல் செல்வாக்கும் மிக்க ஒருவராக மகிந்த அணியைச் சேர்ந்த ஏராளமான அரசியல்வாதிகளுக்கும் அவருக்குமிடையிலான நெருங்கிய உறவு தொடர்பான செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. அமைச்சர்களான சஜித் பிரேமதாச, ராஜித சேனாரத்ன ஆகியோரை இதைப் பகிரங்கமாக வெளியிட்டுள்ளனர்.

மகிந்த அணியில் உள்ள காடைத்தனங்களுக்குப் பெயர்போன பலர் இதில் அடங்குவதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர். இவர்களில் நாடாளுமன்ற உறுப்பினர்களும் அடங்குவதாக அவர்களிருவரும் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. நாட்டில் அரசியல் குழப்பமொன்று ஏற்பட்டபோது நாடாளுமன்றத்தில் குழப்பங்களை ஏற்படுத்தியும் அங்குள்ள சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தும் அடாவடித்தனங்களில் இறங்கியவர்கள் இத்தகைய நபர்களேயென அவர்கள் குறிப்பிட்டுள்ளனர். அதுமட்டுமல்லாது சபாநாயகரையும் தலைமை அமைச்சரையும் கொலை செய்வதற்குக்கூட இவர்கள் முயன்றார்களெனவும் பாரதூரமான குற்றச்சாட்டுக்களையும் அமைச்சர்களிருவரும் தெரிவித்துள்ளனர்.

பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு அமைச்சுக்களைத் தம்மிடம் வைத்திருக்கும் அரச தலைவரால் இவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பது நாட்டின் மோசமான தலைவிதியைக் காட்டுகின்றது.

நாட்டின் அதிகாரத்தை அரசியல்வாதிகளே கட்டுப்படுத்தி வைத்திருக்கின்றனர். தமக்கு நல்லது செய்வார்களென்ற நம்பிக்கையின் அடிப்படையிலேயே மக்கள் அரசியல்வாதிகளைத் தேர்ந்தெடுத்து அதிகார மையங்களுக்கு அனுப்பி வைக்கின்றனர். மக்களின் நம்பிக்கையைப் பாதுகாக்க வேண்டியவர்கள் மக்கள் விரோத செயற்பாடுகளில் ஈடுபடுவதை எந்த நிலையிலும் மன்னிக்க முடியாது. தாம் பணம் சம்பாதிப்பதற்காக புனிதமான அரசியலைப் பயன்படுத்துவது மகா கேவலமான காரியமாகும்.

குற்றங்களைப் புரிகின்ற மேல்தட்டு அரசியல்வாதிகளுக்கு தண்டனைகளிலிருந்து விதிவிலக்களிக்கும் ஒரு நாடாவே இலங்கை காணப்படுகின்றது. தற்போதுகூட போதைப்பொருள் வர்த்தகருடன் தொடர்புடைய அரசியல்வாதிகளுக்கு எதிராக இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்பட்டதாகத் தெரியவில்லை. அவர்கள் மகிந்த அணியைச் சேர்ந்தவர்கள் என்பதார் நீதியின் கண்களும் மூடிக்கொண்டதாகவே எண்ணத் தோன்றுகின்றது.

போதைப்பொருள்களின் பாவனை மக்கள் சமுதாயத்தை முற்றாகவே செயலிழக்கச் செய்துவிடக்கூடியது. ஒரு சிலர் கோடீஸ்வரர்களாக மாறுவதற்காக மக்களைச் சீரழிப்பதைப் பார்த்துக் கொண்டிருக்க முடியாது. ஆனால் இந்த நாட்டில் அது சாதாரண விடயமாகவே கருதப்படுகின்றது. அதுமட்டுமல்லாது குற்றவாளிகளென முத்திரை குத்தப்பட்டுவிட்டால் அனைவரையும் சமமான நிலையில் வைத்துத்தான் பார்க்கவேண்டும். அரசியல்வாதிகளுக்கும் போதைப்பொருள் வர்த்தகர்களுக்கும் பலம்மிக்க பாதாள உலகக் குழுவினருக்கும் பணமும் செல்வாக்கும் படைத்த மோசமான குற்றவாளிகளுக்கும் சிறைச்சாலைகளில் சொகுசு வாழ்க்கைக்குரிய சகல வசதிகளும் செய்து தரப்படுகின்றன. அவர்கள் சிறைத் தண்டனைக்குப் பதிலாக சொர்க்கவாழ்வையே அனுபவிக்கின்றனர்.

சிறையில் இருந்தவர்களே குற்றச்செயல்களை வழிநடத்தி வருகின்றனர். போதைப்பொருள் வர்த்தகமும் இவ்வாறே அமோகமாக இடம்பெறுவதாகக் கூறப்படுகின்றது. இதற்குச் சிறையதிகாரிகளும் உடந்தையாகச் செயற்படுவதாகக் கூறப்படுகின்றது. நிலைமை இவ்வாறு இருக்கும்போது நாட்டில் குற்றச் செயல்களை எவ்வாறு கட்டுப்படுத்த முடியும்?

சில தென்னமெரிக்க நாடுகளே போதைப்பொருள் வர்த்தகத்தில் கொடிகட்டிப் பறந்தன. சில வகையான கொடிய போதைப்பொருள்கள் குறிப்பிட்ட ஆசிய நாடுகள் சிலவற்றில் உற்பத்தி செய்யப்படுகின்றன. அந்த நாடுகளின் வருமானத்தை ஈட்டக்கூடிய தொழிலாகவும் இதுவரை விளங்குகின்றது. இந்தப் பொருள்கள் பல நாடுகளின் ஊடாக தென்னமெரிக்க நாடுகளைச் சென்றடைகின்றன.

இலங்கையிலும் அவ்வாறானதொரு நிலை காணப்படுவதை எந்தவகையிலும் அனுமதிக்க முடியாது. இது நாட்டின் நற்பெயருக்கு மட்டுமல்லாது மக்களுக்கும் பங்கத்தை ஏற்படுத்திவிடும். அதிலும் அரசியல்வாதிகள் இதில் ஈடுபடுவது பெரும் பாதகமான விளைவுகளை ஏற்படுத்தி விடும்.

ஆகவே இத்தகையவர்கள் மீது எதுவித தாமதமுமின்றி உடனடியாகவே நடவடிக்கை எடுக்கப்படல்வேண்டும். இவர்கள் தொடர்ந்தும் அரசியலில் ஈடுபடும்போது அரசியலில் புனிதத் தன்மையே மாசுபடுத்தப்பட்டுவிடும்.

அரச தலைவர் எதுவித அச்சமுமின்றித் தமது கடமைகளை முன்னெடுத்துச் செல்ல வேண்டும். இதில் பக்கச் சார்பு என்பதற்கே இடமிருக்கக்கூடாது. மகிந்தவுக்கு ஒரு முகமும் ரணிலுக்கு வேறொருமுகமும் காட்டுவதை அவர்கள் உடனடியாகவே நிறுத்திக்கொள்ள வேண்டும்.

குற்றங்களைப் புரிகின்ற அரசியல்வாதிகள் தராதரம் பார்க்காது தண்டிக்கப்படவேண்டும். அப்போதுதான் அரசு மீதும் நம்பிக்கை ஏற்படும்.

பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்கு அமைச்சுக்களைத் தம்மிடம் வைத்திருக்கும் அரச தலைவரால் இவர்களைக் கட்டுப்படுத்த முடியவில்லை என்பது நாட்டின் மோசமான தலைவிதியைக் காட்டுகின்றது.



# மறப்போம் மன்னிப்போம் என்ற பேச்சுக்கு இடமில்லை நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன் நேற்றுக் காட்டம்!



கொழும்பு, பெப். 22

இலங்கையில் பெரும்பான்மையான சிங்கள இனம் தமிழினத்தை இன அழிப்புச் செய்துள்ளது. இந்த நிலையில் மறப்போம் மன்னிப்போம் என தலைமை அமைச்சர் கூறுகின்றார். நாம் அரசுக்கு ஆதரவளிக்கின்றோம் என்பதற்காக எல்லாவற்றையும் செய்து விடலாம், சொல்லிவிடலாம் என நினைக்க வேண்டாம் என்று தெரிவித்தார் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன்.

நாடாளுமன்றத்தில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்ற அரசமைப்புப் பேரவை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை பிரேரணை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மையில் வடக்குக்குப் பயணம் செய்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கடந்தகால சம்பவங்களை மறப்போம் மன்னிப்போம் எனக் கூறினார். அதேபோல் இந்த நாட்டின் எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ச இந்தியாவில் ஓர் ஊடக சந்திப்பில் பிரபாகரனின் மகனான சிறுவன் பாலச்சந்திரன் விடுதலைப்புலிகள் உறுப்பினர். அவருக்கு 5 பேர் பாதுகாப்பு வழங்கியிருந்தனர். இசைப்பிரியா ஒரு ஊடகவியலாளர் அல்லர். அவரும் ஒரு புலி உறுப்பினர் எனக் கூறி அவர்கள் கொல்லப்பட்டதை நியாயப்படுத்தியுள்ளார். அதேபோல் யாழ்ப்பாணம் சென்ற அமைச்சர் ராஜித சேனாரத்ன, தமிழ் மக்கள் அதிகாரப் பகிர்வைக் கேட்கவில்லை அபிவிருத்தியையே கேட்கின்றனர் என்ற கருத்தை கூறியுள்ளார். என்ன நோக்கத்தில் இவ்வாறான கருத்துக்களை எமது மண்ணில் விதைக்கின்றனர். தமிழர்களின் 100 வருட உரிமைப் போராட்டத்தை அவிவிருத்தி என்ற சொல்லுக்குள் மறைக்க வேண்டாம். இலங்கையில் இடம்பெற்ற குற்றங்களில் நீதி நிலைநாட்டப்பட்டால் மட்டுமே அடுத்த கட்டம் நோக்கிச் சிந்திக்க முடியும் என்றார். (ம-61)


நெஞ்சம் மறவாத
6ஆம் ஆண்டு நினைவுகள்



அன்னை மடியில் 12 . 05 . 1989
ஆண்டவன் அடியில் 22 . 02 . 2013

இராஜகுமார் ரவிராஜ்

புன்னகை பூத்த மலரொன்று
பூமியில் விதைக்கப்பட்ட நாள்....
கள்ளமற்ற மழலை ஒன்று
காணாமல் போன நாள்.....
அமைதியான ஏவுகணை ஒன்று
அனைவரையும் அழவைத்த நாள்......

என்றும் உன் நினைவுகளுடன் :
அம்மா, அண்ணா, தம்பி.

(CS 23463)(14.17)


## மரண அறிவித்தல்

### திருமதி கலாநந்தி வரதராசா



கிளிநொச்சியைப் பிறப்பிடமாகவும் இல. 07, கனகபுரம் முதலாம் பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கலாநந்தி வரதராசா நேற்று (21.02.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் வரதராசாவின் அன்பு மனைவியும் குலசேகரம்பிள்ளை காலஞ்சென்ற கமலாதேவி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற பரமேஸ்வரன் - சந்தணம் தம்பதிகளின் அன்பு மருமகளும் டிவேதாவின் அன்புத் தாயாரும் குகாநந்தி காலஞ்சென்ற சத்தியானந்தன், தேவானந்தன் (கரைச்சி தெற்கு பலநோக்குக் கூ. சங்கம் கிளிநொச்சி), தயானந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சகுந்தலாதேவி, சத்தியவதி, ரங்கநாதன் (அவுஸ்திரேலியா), உமாசுதன் (கனடா), பரராஜசிங்கம் (கனடா), சன்முகதேவன் (சுற்றாடல் ஆணையாளர் - யாழ்ப்பாணம்) கிரிசா, புவனேஸ்வரராசா (அடிவானம் பல்பொருள்வாணிபம்) ஆகியோரின் மைத்துனியும், கந்தசாமி, காலஞ்சென்ற சுப்பிரமணியம் (என். ரி. எம். ஸ்ரோர்ஸ் பரந்தன்), கிருபாநந்தன், சுபாசினி, உசா, செல்வராசா ஆகியோரின் சகலியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரது இல்லத்தில் இன்று (22.02.2019) வெள்ளிக்கிழமை பி. ப. ஒரு மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரிகைகளுக்காக கந்தன்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**


பதினாறாம் ஆண்டு நினைவலைகள்
22.02.2019



தோற்றம் 30 . 01 . 1939
மறைவு 19 . 02 . 2003

அமரர் கா.சந்திரராசா S.L.A.S

ஓய்வு நிலை பிரதேச செயலர் வலி.மேற்கு சங்கானை
/ நிகழ்ச்சித்திட்ட இணைப்பாளர் U.N.H.C.R

திதி : திருதியை

ஆண்டுகள் பதினாறு ஆகியே சென்றதப்பா
ஆனாலும் உம் நினைவு அகலவே இல்லையப்பா
வாழ்ந்த நாளில் எமை வாஞ்சையுடன் சீராட்டி
வாழக் கல்வியினை வளமாகக் கற்கவைத்தீர்
நீண்ட புகழ் கூற நிறையரச பணிதனை நீரும்
நேர்மையுடன் ஆற்றி நிலையான பேர் பெற்றீர்
ஆண்டவனும் விரும்பியோ அழைத்தானே தன்னடிக்கு
ஐயாவே உமை என்றும் மறவோம் மறவோமே

ஓம் சாந்தி ! சாந்தி ! சாந்தி !

உங்கள் ஆத்மா சாந்தியடைப் பிரார்த்திக்கும்

பறாளாய் வீதி,
சுழிபுரம்.

குடும்பத்தினர்.

(CS 23475)(14.17)


## மரண அறிவித்தல்

### தம்பிராசா ஸ்ரீஸ்கந்தராஜா



பிறப்பு 23.12.1964 இறப்பு 21.02.2019

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் கல்வயலை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பிராஜா ஸ்ரீஸ்கந்தராஜா நேற்று (21.02.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற தம்பிராஜா - பாக்கியம்தம்பதிகளின்அன்புமகனும்கணேசன் காலஞ்சென்ற இசை ஆசிரியை மோகனாம்பிகை தம்பதிகளின் அன்பு மருமகனும் சுபத்திராதேவியின் (யா/சாவகச்சேரி மகளிர்கல்லூரி - இசை ஆசிரியை) அன்புக்கணவரும் ஆதிரை, ஆர்த்தியா ஆகியோரின் பாசமிகு தந்தையும் மலர், சரோஜினிதேவி, கலைமதி, செந்திருமதி (கொலண்ட்) திருவருட்செல்வம் தருமர் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சோமராஜா, ராஜகுலசேகரம், துரைரட்ணசிங்கம், நகுலேஸ்வரன் (கொலண்ட்), கனி, துர்க்காதேவி தவராஜா, மதுராதேவி, மகேந்திரராஜா, ஸ்ரீமாயவன்வதனி, காலஞ்சென்ற செந்தூரன், ஆகியோரின் அன்பு மைத்துனரும், பிரணவன் (கனடா), பிரதீப் (லண்டன்), பிரஸ்மி (லண்டன்), பிரசோபிதா (கனடா), நீறுஜா (லண்டன்), நிர்மலன் (லண்டன்), நிரூபன் (கொழும்பு), ஜிந்துஜன், சிவமங்கை, சீரழகி ஆகியோரின் அன்பு மாமனாரும் கௌசிகன், கேசிகா, வத்சலா ஆகியோரின் சித்தப்பாவும் ஷபரினியின் பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (22.02.2019) வெள்ளிக்கிழமை மாலை 4.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**077 667 9557 (செல்வம்),**
**077 161 2883 (மதுரா)**
**077 974 3927 (மலர்)**

**தகவல்**
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

### பொன்னம்பலம் விநாயகமூர்த்தி திருநாவுக்கரசு

**(மண்டைதீவு திருவெண்காடு சித்தி விநாயகர் ஆலய தர்மகர்த்தா)**



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னம்பலம் விநாயகமூர்த்தி திருநாவுக்கரசு நேற்று (21.02.2019) வியாழக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**



# தொட்டில் பழக்கம்

பீர்ப்பால் அரசரான அக்பரின் நெருங்கிய நண்பர். மிகுந்த புத்திரிசாலியும் கூட. பீர்ப்பால் ஒருநாள் அரசரைக் காண்பதற்கு அரண்மனைக்குப் புறப் பட்டார். அவரது ஐந்து வயது நிரம்பிய மகளும் அவளுடன் அரண்மனை செல்ல அடம்பிடித்தாள். அவளோ சரியான குறும்புக்காரப் பெண். சுட்டித் தனம் கூடியவள். அரண்மனையில் அரசன் அவள் குளப்படி செய்துவிடுவாள் என நினைத்து பீர்பால் கூடியவரை அவளை அங்கு அழைத்துச் செல்வத விரும்பவில்லை. இறுதியாக அவர் பரிந் துரையில் அவளை அழைத்துச் செல்ல சம்மதித் தார். தன் மகளோ இதவரை அரண்மனைப் பக் கம் சென்றதில்லை. அரசரையும் பார்த்ததில்லை. அங்கு என்ன நடக்கப் போகிறதோ என்று சிந்தித்த படி பீர்ப்பால் அரண்மனையை அடைந்தார்.

அரண்மனையில் பீர்ப்பால் அரசரை வணங்கி னார். அவரது மகளும் தந்தை வணங்கியது போலவே அரசரை வணங்கிவிட்டு அமைதியா கத் தனது தந்தையின் பக்கத்தில் நின்று கொண் டிருந்தாள்.

அரசர் சிறுமியை மிகப் பிரியத்தோடு தன் அருகில் அழைத்தார். பீர்ப்பால் யோசித்தார். அவள் துடிப் பான பெண். அசரது பெரிய தடித்த மீசையை இழுத்துப் பார்த்து விடுவாளே எனப் பயந்தார்.. அப்படி எதுவும் நடக்கவில்லை. சிறுமி அரசர் அருகில் சென்றாள். "குழந்தாய் ஏதேனும் பேச முடியுமா உன்னால்?" என்றார். சிறமி மௌன மாக நின்றாள். "மறுபடியும் அரசர் "குழந்தாய் நீ ஏதாவது பேசுவாயா?" என்றார்.

சிறுமி "அரசரே என்னை மன்னியுங்கள். நான் இப்போது குழந்தை இல்லை" என்றாள் பணி வாக. அரசர் ஆச்சரியமடைந்தார். "சரி குழந்தை யில்லை. அப்படியானால் நீ யார்?" என்று வின வினார்.

"நான் இதோ நிற்கிறாரே என் அப்பா இவரின் மகள். என்னைச் சிறுமி என்றே கூறுவார்கள் என்றார்.

அரசர் தொடர்ந்தார் சரி என் முன் நிற்கும் சிறுமி பேசுவாவா?" என்றார். மரியாதையுடன் ஓ... நான் நிறையவும் பேசுவேன். குறையவும் பேசு வேன்" என்றாள் சிறுமி. சரி குறையவும் நிறைய வும் என்றால் என்ன அர்த்தம்?" அரசர் மீண்டும் வினவினார். பீர்ப்பால் நடப்பதையெல்லாம் அதி சயத்துடன் பார்த்துக் கொண்டு நின்றார். சிறு மியோ குறைவாகப் பேசுதல் என்றால் பெரியோர் முன் நாம் குறைவாகப் பேச வேண்டும். என் னோடு ஒத்த சிறுமிகளிடம் நிறையப் பேச வேண் டும்" என்றார். அரசர் தனக்குள் வியந்தபடி "ஏன் பெரியோரிடம் குறையப் பேச வேண்டும் என்று கூறு பார்க்கலாம்?" என்றார். பெரியவர்கள் நிறைய காலம் வாழ்ந்து வருபவர்கள். அதனால் நல்ல அறிவுரைகள் கூறுவார்கள். அவர்களிடம் நாம் குறைவாகப் பேசினால் தான் அவர்கள் கூறும் அறிவுரைகளைக் காதால் நிறைய கவன மாகக் கேட்க முடியும்?" என்றாள்.

அரசர் சிறுமியைக் கட்டி முத்தமிட்டு புத்திசாலிப் பெண் புலிக்குப் பிறந்தது பூனையாகாதே தந்தை யைப் போல மகளும் என்று இரவரையும் புகழ்ந்து பாராட்டியதோடு சிறுமிக்குப் பரிசுகளும் அளித்து மகிந்தார்.



# ஆங்கிலம் கற்போம்



**சில ஆச்சரிய உணர்சிகள்** (Exclamation):

Marvelous ! ஓஹோ ! ஆஹா
Well Done ! சபாஷ்
Beautiful ! என்ன அழகு
Hey ! ஏய்
Wow ! அடடே
My/oh god அட கடவுளே
Wonderful பிராமாதம்
Of course சந்தேகமில்லாமல்
Thank You நன்றி
By god grace கடவுள் அருள்
May god bless you ! கடவுள் உங்களுக்கு ஆசி வழங்கட்டும்
Same to you ! உங்களுக்கும் அப்படியே ஆகட்டும்
Excellent ! மிகவும் சிறப்பு
How sad ! அட பாவமே
That is good news ! மிகவும் சந்தோசமான விஷயம்
What a great victory ! என்ன பிரமாதமான வெற்றி
Good heavens ! அட தெய்வமே
Hello ! Liston ! ஐய்யா சற்று கவனிக்கவும்
Hurry up Please ! சீக்கிரம் செல்லுங்கள்
How terrible ! எவ்வளவு பயங்கரம்
How disgraceful ! எவ்வளவு மானக்கேடு
How Absurd ! எவ்வளவு மோசம்
How dare he ! அவனுக்கு என்ன துணிச்சல்
How Sweet ! எவ்வளவு இனிமை
How lovely ! எவ்வளவு அழகு
How dare you say that ! அப்படி சொல்ல உனக்கு என்ன தைரியம்
Oh dear ! என் கண்ணே
Hurry up ! சீக்கிரம்
Quit please / Please keep quit ! தயவு செய்து அமைதியாக / நிசப்தமாக இருக்கவும்
Yes it is ! ஆமாம் அப்படிதான்
Really ! உண்மையாகவா
Is it ! அப்படியா
Thanks ! நன்றி
Thank You ! உங்களுக்கு நன்றி
Thank god ! கடவுளுக்கு நன்றி



# உயர்ந்திடு



அன்புக்கனியே மணியே!
அழகுத் தமிழை பழகிடு
சின்னக் கண்ணைச் சிமிட்டியே
சிரித்துப் பேசி கவர்த்திடு

அன்னக் கிளியே அமுதே
அறிஞன் என்றே பெயரெடு
கண்ணே மணியே முத்தே
கலைஞன் என்று பெயரெடு

பொன்னே மணியே பூவே
பொருள் ஈட்டிப் புகழ் பெறு
பெற்றவள் சொல் கேட்டிடு
பெருந்தலைவராய் உயர்ந்திடு

YOG DNA

# இளையோர் ஒலிம்பிக்

1. 120 வருட ஒலிம்பிக் வரலாற்றில் இளையோர்களுக்கு அறிமுகம் செய் யப்பட்டது தான் இளையோர் ஒலிம் பிக்.

2. 2010ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் ஆசிய நாடான சிங்கப்பூர் நாட்டில் முதல் முதலாக நடைபெற்றது.

3. 14 வயது முதல் 18வயது வரை உள்ள விளையாட்டு வீரவீராங்கனைகள் இதில் பங்கேற்க முடியும்.


4. பன்னாட்டு ஒலிம்பிக்கில் இவர்ளது திறமைகள் வெளிப்பட சந்தர்ப்பம் கிடைக்காததால் இளையோர் ஒலிம் பிக் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

5. சிங்கப்பூரில் நடைபெற்ற போட்டிகளில் 170 நாடுகளின் வீரர்கள் 26 வகை யான விளையாட்டுக்களில் பங்கேற் றனர்.

6. மொத்தம் 201 தங்கப்பதக்கம் வழங் கப்பட்டது. பதக்கப் பட்டியலின் படி முதல் இடங்களைப் பெற்ற நாடுகள் வருமாறு
சீனா- 01 ஆம் இடம்
ரஷ்யா- 02ஆம் இடம்
தென்கொரியா- 03ஆம் இடம்



# வழிகாட்டுவோம்





நெல்சன் மண்டேலா

ஒரு வேலையைச் செய்து
முடிக்கும் வரை
அது சாத்தியமற்றதாகவே
தோற்றமளிக்கும்

## மணமகள் தேவை

யாழ். கௌரவ குடும்பம். R.C. 33 வயது, உயரம் 5' 3", தொழில் Hotel காசாளர் ஆக பணிபுரியும் மகனுக்கு தாயார் தகுந்த மண மகளை எதிர்பார்க்கின்றார்.

தொடர்பு - 076 104 0340

## பதவி வெற்றிடம்

01. முன்பள்ளி அனுபவமுள்ள ஆங்கில ஆசிரியை
02. கணினி அறிவுள்ள அலுவலக உதவியாளர்

தேவை (பெண்கள் மட்டும்)

077 386 7458, 0212216933

## துன்பம் தீர்க்கும் கலியுக தெய்வம் நாகபூசணி அம்பாள்

வெள்ளவத்தையில் அமைந்துள்ள நாகபூசணி அம்மன் ஆலயத்தில் அருள்வாக்கு கூறும் ஞானகணேஸ்வரி அம்மன் அவர்கள் இன்று சனிக்கிழமையில் இருந்து திங்கட்கிழமை வரை (23.24.25) ஆகிய திகதிகளில் ஞானவைரவர் ஆலயம் கலாசாலை வீதி, 2 ஆம் ஒழுங்கை, திருநெல்வேலி வடக்கு யாழ்ப்பாணத்தில் அருள்வாக்கு கூறுவார். 25.02.2019 அன்னதானம் வழங்கப்படும். அடியவர்கள் வந்து இறையருள் பெற்றுச்செல்க.

**அருள்வாக்கின் மூலம் திருமணத்தடை, கல்வித்தடை, வெளிநாட்டு பயணத்தடை, குழந்தை பேறு, குடும்பப்பிரச்சினை ஆகியவற்றுக்கு தீர்வினை பெற்றுத்தருவார்.**

**பூஜை நேரம் - காலை 10.00 மணி, மாலை 5.00 மணி**

குறிப்பு - கலாசார உடையுடன் வருகை தரவும்.
தொடர்பு - 021 221 9127, 077 801 2226

## துயர் பகிர்கின்றோம்



எமது கல்லூரியின் ஆசிரியர் **திருமதி சுபத்திராதேவி ஸ்கந்தராசா** அவர்களின் பாசமிகு கணவர்

**தம்பிராசா ஸ்கந்தராசா**


அவர்கள் நேற்று (21.02.2019) வியாழக்கிழமை இறைபதம் அடைந்ததையிட்டு துயருறும் குடும்பத்தினரின் துயரில் நாமும் பகிர்ந்து கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**சேவையாளர்சங்கம்**
**யா/சாவகச்சேரி மகளிர் கல்லூரி**

(IN/9458)(11)

## பிறந்த நாள் வாழ்த்துக்கள்

அகவை 70
(22.02.2019)
ஓய்வு நிலை ஆசிரியர்
**திரு. மா. தங்கேஸ்வரன்**



இன்று தனது எழுபதாவது பிறந்தநாளை மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகளான அனிஷ், அரோன், ஷப்தீவ், ஆகியோருடன் குதூகலமாக கொண்டாடுகிறார். உடன் பிறப்புக்களான தியாகேஸ்வரன் (ஜேர்மனி), சிறீதரன் (கண்டி), பாஸ்கரன் ( ஹொலண்ட்), திருமதி. சுகணா சிவபாலன் (நோர்வே), திருமதி. வனிதா இன்பகுமாரன் ஆகியோர் நீண்ட காலம் வாழ வாழ்த்துகிறார்கள்


## MAJESTIC CINEPLEX




| Jaffna Bronze | Jaffna Silver |
|---|---|
| 10.15AM | 1.45PM \| 7.45PM |




Jaffna Silver
10.45AM | 4.45PM




Jaffna Platinum
10.00AM | 1.00PM | 4.15PM | 7.30PM







| Jaffna Bronze | Jaffna Bronze |
|---|---|
| 7.15PM | 1.15PM \| 4.15PM |

மேலதிக விபரங்கள் தொடர்பாக அழையுங்கள்
011 5 999 999

CEYLON THEATRES Since 1928
www.ceylontheatres.lk
MajesticCineplexSL

## E.S Printers

மக் பிரிண்ட் (MUG) 450/=
357, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 492 7471, 021 492 7472
esprintersjaffna@gmail.com

# ரண் கெகுளு புலமைப்பரிசில்களை வென்ற 2000 மாணவர்களை கௌரவிக்கும் நாள் இன்றாகும்




5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் 2018

5ஆம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சையில் உயர்ந்த சித்தியை பெற்ற இலங்கை வங்கியின் ரண் கெகுளு கணக்குரிமையாளர்களுக்கான புலமைப்பரிசில் பகிர்ந்தளிப்பு விழா இன்று பி.ப 2.00 மணிக்கு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் ( BMICH ) நிகழ்கிறது.

அவ்வாறே அனைத்து மாகாணங்களுக்குமான பரிசளிப்பு விழாக்களும் கீழுள்ளவாறு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது

| மாகாணம் | இடம் | நேரம் |
|---|---|---|
| ஊவா மாகாணம் | ரிவர்சைட் ஹோட்டல், பதுளை | 9.00 மு.ப |
| கிழக்கு மாகாணம் | மட்டக்களப்பு வின்சென்ட் பெண்கள் உயர்நிலை பள்ளி, மட்டக்களப்பு | 2.00 பி.ப |
| சபரகமுவ மாகாணம் | நூலக ஆடிட்டோரியம், நியூ டவுன், இரத்தினபுரி | 2.00 பி.ப |
| தென் மாகாணம் | த கிராண்ட் நவ்ரோ ஹோட்டல், மாத்தர | 2.00 பி.ப |
| மத்திய மாகாணம் | மத்திய மாகாண இந்து கலாசார நிலையம், கண்டி | 2.00 பி.ப |
| மேல் மாகாணம் – வடக்கு | பிஷப்ஸ் கல்லூரி ஆடிட்டோரியம், கொழும்பு | 2.00 பி.ப |
| மேல் மாகாணம் – தெற்கு | பண்டாரநாயக்கா ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் (BMICH) | 2.00 பி.ப |
| வட மாகாணம் | கிரீன் கிராஸ் ஹோட்டல், யாழ்ப்பாணம் | 2.30 பி.ப |
| | ஓவியா ஹோட்டல், வவுனியா | 2.00 பி.ப |
| வட மத்திய மாகாணம் | அனுராதபுரம் இளைஞர் மையம், அனுராதபுரம் | 2.00 பி.ப |
| வட மேல் மாகாணம் | சலூட் ஹொட்டேல், போயகனே, குருநாகல | 2.00 பி.ப |

புலமைப்பரிசில்களை வென்ற அனைத்து மாணவருக்கும் இலங்கை வங்கியின் மனப்பூர்வமான வாழ்த்துக்கள்

www.boc.lk
1975 BOC
தலைமைக் காரியாலயம் "இலங்கை வங்கி சதுக்கம்" இலக்கம் 1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.
இலங்கைவங்கி BOC தேசத்தின் வங்கியாளர்

## Edlocate "Study Abroad" Day in Jaffna on 23rd February 2019

Have you sat the August 2018 A/L exam? Have you completed a Diploma, HND, Bachelor or a Masters degree? Get an internationally recognized Quality education overseas, Let Edlocate show you how to achieve this!

We have organized an OPEN DAY for students and their parents to obtain ALL required information as to how you can undertake tertiary studies in 75 Universities, Institutions and Polytechnics in Australia, New Zealand and Malaysia which we represent.

At this event our effective & bilingual counselors will sit with you and give information on;

- Guidance to a course, pathway and institutional selection to enter the ideal career
- How the financial requirements could be met through your own finances/ assets without major financial burdens to your own family
- Step by step procedure from lodging the applications for placement to obtaining student visa – all of which we offer FOC
- Course selection for post graduate students
- Guidance for high achieving students to secure Scholarships
- Assistance to secure post study work visa in Australia or New Zealand

We are aware of the drawbacks in the North to achieve the required English score to enroll in courses overseas. We have secured the services of one of the best and well experienced lecturer who is a university academic to provide **coaching in IELTS**. These classes are conducted at IIS, we offer very competitive rates and on enrolling in a course we will refund 50% of the fee paid once student has obtained student visa.

Edlocate has its fully fledged office in Jaffna and our counselors will handle all the formalities from lodging application to obtaining visa in Jaffna.

**The Study Abroad Day will be held at Tilko Jaffna City hotel from 10.00 am to 4 pm**. Entry is free. Register for the event by contacting Abarna or Neelanjalie on 0772223178 or email jaffna1@edlocate.lk

(C/32412)

## இந்திய குடியரசு தின கொண்டாட்டங்கள் மிகவும் கோலாகலமாக Colombo City Centre இல் கொண்டாடப்பட்டன

இந்து ஸ்ரீ லங்கா ஃபவுண்டேஷன் மற்றும் கலாசார உறவுகளுக்கான இந்தியன் கவுன்ஸில் ஆகிய நிறுவனங்கள் Colombo City Centre உடன் இணைந்து இந்தியாவின் தனித்துவமான பண்பாட்டு ஆற்றல்கள், கலை காலாசார அம்சங்கள் மற்றும் வண்ணமயமான பல்வேறு சிறப்பம்சங்களுடன் இந்திய குடியரசு தினத்தை Colombo City Centre இல் மிகவும் கோலாகலமாக கொண்டாடியது.



இந்த குடியரசு தின கொண்டாட்டங்களின்போது பார்ப்பவர்களின் மனதை வருடிய பிரதான அம்சம் யாதெனில் 'மயூர் பான்ச் சவ்' எனப்படும் செமி-கிளாசிக்கல் நடனமாகும். இந்த நடனமானது இந்தியாவின் கிழக்கு மாநில பகுதியான ஒடிசாவின் பழங்குடி மற்றும் நாட்டுப்புற மரபுகளை உள்ளடக்கிய ஒரு நடன அம்சமாகும். இந்த நடனத்தில் புகழ்பெற்ற இந்திய நாட்டுப்புற கதைகள், புனைகள், மற்றும் மத உணர்வுகளுடைய அம்சங்கள் வாழ்க்கைக்கான தத்துவத்தை உணர்த்தும் வகையில் இருந்தன. திரு. ஸ்ரீ பிபூதி பூசன் மூவன்த் அவர்களே இந்த நடன அமைப்பை ஒருங்கமைத்து இயற்றியிருந்தார். மேலும் இவர் இவ்வாறான நடனங்களை ஐக்கிய ராஜ்யம், இந்தோனேஷியா, சிங்கப்பூர் உள்ளிட்ட மேலும் பல நாடுகளில் இயற்றி மக்கள் மனங்களுக்கு விருந்தளித்துள்ளார்.

Colombo City Centre கூட்டுத் திட்டமானது, முதலீட்டு வாரியத்தின் அனுமதியைப் பெற்றுள்ள இலங்கையின் முதலாவது கூட்டுத் திட்டமாகும். 180 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் உருவாக்கப்பட்டுவரும் இந்த கூட்டுத் திட்டத்தை அபான்ஸ் நிறுவனம் மற்றும் சிங்கப்பூரின் Next Story Group ஆகிய நிறுவனங்கள் கூட்டிணைந்து உருவாக்கி வருகின்றன. அன்மைக் காலமாக இல்ங்கையில் உருவாக்கப் பட்டு வரும் பிரம்மாண்ட முதலீட்டுத் திட்டமான இது 47 அடுக்கு மாடிகளுடன் கொழும்பின் மையப் பகுதியில் மிகவும் பிரம்மாண்டமாக அமைந்துள்ளது.

புகழ்பெற்ற வணிக இதழான Asia One Magazine இனால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆசிய விருதுகள் மற்றும் தலைமைத்து விருது வழங்கும் விழாவில் 'ஆசியாவின் மிகச்சிறந்த விற்பனை நாமம்" மற்றும் "வருடத்தின் மிகச்சிறந்த கூட்டுத்திட்டம்" என்ற விருதினையும். கோல்டன் குளோப் டைகர்ஸ் Brand Excellence விருதினையும், சிறப்பம்சங்களுக்காக சிங்கப்பூரில் இடம்பெற்ற CMO ஆசிய விருது வழங்கும் விழாவில் உயர் மதிப்புமிக்க நாளைய எதிர்ப்பார்ப்பிற்கான கூட்டுத் திட்டத்திற்கான விருதினையும் Colombo City Centre தனதாக்கிக்கொண்டது. உலகின் தலை சிறந்த நகரங்களில் காணக்கூடிய சௌகரியத்தையும், சொகுசையும் இலங்கையின் தலைநகருக்கு Colombo City Centre தந்திடும் என்பதனை மிகவும் உறுதியாக சொல்ல முடியும்.

உலகின் தலைசிறந்த முன்னணி 'விற்பனை நாமங்களை உள்ளடக்கிய கடைத்தொகுதிகள், 192 அதிசொகுசு குடியிருப்புகள், உயர் தரத்திலான உணவகங்கள், சிறுவர் பொழுது போக்கு அம்சங்களை உள்ளடக்கிய வளாகம், சுதந்திரமாகவும், அமைதியாகவும் நேரத்தை செலவிட கூடிய வ்ளாகங்களுடன், அதிக வாகனங்களை நிறுத்தக்கூடிய வசதி இங்குள்ளது. அதேபோல் கொழும்பில் வசிப்பவர்களை போன்று நாடளாவிய சகலருக்கும் Colombo City Centre இல் மறக்க முடியாத அனுபவங்களை பெற்றுக்கொள்ள முடியும்.

(C 32413)

யா/புனித ஹென்றியரசர் கல்லூரி
பழைய மாணவர் சங்கம் இளவாலை

## வருடாந்த பொதுக் கூட்டம்

**இடம்** :- கல்லூரிமண்டபம்


**காலம்** :- 24.02.2019 (ஞாயிற்றுக்கிழமை)

மு.ப. 11.00 மணி

எமது கல்லூரி பழையமாணவர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

**தலைவர்**

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



### அமரர் சிவகுரு காசிநாதன்

திதி: அபரபக்க திருதியை (22.02.2019)

தோற்றம் 16.09.1941 — மறைவு 04.03.2018

இமைகள் மூடித் திறப்பதற்குள்
ஓராண்டு கழிந்தது
நாம் வாழும் நாள்களில் நீங்கா
உம் நினைவுகள்.........
உம்முடன் என்றென்றும்
நீங்காது நிலைத்து வாழும்.

மில் லேன்,
மல்லாகம்.

உங்கள் பிரிவால் துயருறும்
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



### திருமதி சரஸ்வதிதேவி பரமேஸ்வரலிங்கம்

தாவடி தெற்கு, பத்திரகாளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதிதேவி பரமேஸ்வரலிங்கம் நேற்று (21.02.2019) வியாழக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் வலிகாமம் தெற்கு பிரதேச சபை உபதவிசாளர் பரமேஸ்வரலிங்கத்தின் (சமாதான நீதவான்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை - அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான இராசையா - நல்லம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும் இலங்கைநாதன் (கனடா), பேரின்பநாயகம் (கனடா), காலஞ்சென்றவர்களான கமலாதேவி, திவநேசன் (சோதி - கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: (கணவர்)
**இ.பரமேஸ்வரலிங்கம்**

(CS 23511/15/18)


ES Printers

அனைத்தும்
தனித்துவமான
கணினி வடிவமைப்புடன்







பனர் பிரிண்ட் (Banner).
வியாபார மற்றும்
ஏனைய நிறுவனங்களுக்கான
பெயர் பலகைகள் (Name Board).
மக் பிரிண்ட், ரீ-சேட்,
புத்தகங்கள்,
கையேடு (Handbills).
நோட்டிஸ் (Notice) மற்றும்
அனைத்து ஓவ்செற், டிஜிற்றல் அச்சக வேலைகள்
சகல நிறுவனங்களுக்குமான பட்டியலேடு (Bill Book)
காபன் பிரதி மற்றும் காபன் பிரதி அற்ற, வர்ண மற்றும்
கறுப்பு வெள்ளை நிறத்தில்,
விரும்பிய அளவுகளில்
குறித்த நேரத்தில்
குறைந்த விலையில்
தரமாக செய்துதரப்படும்.

Flyers Print DESIGNE Scanning Posters Business cards Booklet Binding

மக் பிரிண்ட் (MUG) 450/=



021 492 7471,
021 492 7472
esprintersjaffna@gmail.com
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.


E S Printers
மணியம் கபே
Maniyam Cafe
075 054 3823
GVS
MEMORABILIA
பனர் பிரிண்ட்
(Banner),
35/=
குறைந்த விலையில்
உங்களுடைய சகல அச்சக வேலைகளையும்
செய்து பெற்றுக்கொள்ள இன்றே நாடுங்கள்...
மக் பிரிண்ட்
(MUG)
450/=
பனர் பிரிண்ட் (Banner), வியாபார மற்றும்
ஏனைய நிறுவனங்களுக்கான பெயர் பலகைகள் (Name Board),
மக் பிரிண்ட், ரீ-சேட், புத்தகங்கள், கையேடு (Handbills),
நோட்டிஸ் (Notice) மற்றும் அனைத்து ஓவ்செற்,
டிஜிற்றல் அச்சக வேலைகள் சகல நிறுவனங்களுக்குமான
பட்டியலேடு ( Bill Book) காபன் பிரதி மற்றும் காபன்
பிரதி அற்ற, வர்ண மற்றும் கறுப்பு வெள்ளை நிறத்தில்,
விரும்பிய அளவுகளில் குறித்த நேரத்தில்
குறைந்த விலையில் தரமாக செய்துதரப்படும்.
357, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
நவீன சந்தை, முதலாம் மாடி, சாவகச்சேரி.
021 222 7432
021 492 7454 / 021 492 7471 / 021 492 7472
esprintersjaffna@gmail.com
www.esprinters.com

# உதயன் நடத்தும்

# சிறுவர் மகிழ்களம் - 2019



**காலம் : 23.02.2019 சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணி**
**இடம்: சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி**

**தலைமை**

**உயர்திரு. செ.பிரதாப்** (ஆசிரியர்-சிவப்பிரகாச மகாவித்தியாலயம்)

**முதன்மை அதிதிகள்**

**கௌரவ. மாவை.சோ.சேனாதிராசா (பா.உ)** (தலைவர்-இலங்கை தமிழ் அரசுக் கட்சி)

**கௌரவ ஈ.சரவணபவன் (பா.உ)** (தலைவர் - உதயன் குழுமம்)

**சிறப்பு அதிதிகள்**

**கௌரவ. இ. சிவமங்கை**
(தவிசாளர்-சாவகச்சேரி நகர சபை)

**கௌரவ. க. வாமதேவன்**
(தவிசாளர்-சாவகச்சேரி பிரதேச சபை)

**உயர்திரு வி.சு.துரைராஜா**
(தலைவர்-கனடா தமிழ் கல்லூரி)

**கௌரவ அதிதிகள்**

**திருமதி அ. சரோசாதேவி** (உதவிக்கல்வி பணிப்பாளர்-முன்பள்ளி)

**உயர்திரு. செ. பேரின்பநாதன்** (அதிபர்-சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி)

**உயர்திரு. க. குணாளன்**
(நிர்வாக பணிப்பாளர்-சோபிகன் இன்ஜினியரிங் அன் கொன்ஸ்ரக்சன்)

**உயர்திரு. இ. ஜனதன்** (ஆசிரியர் - யாழ் மத்திய கல்லூரி.
இதழாசிரியர் - ஒளிஅரசி, புலமைச்சுடர்)

**அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்**

உதயன்


# நெஞ்சைவிட்டு நீங்காத முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 08 12 1942

உதிர்வு 05 03 2018



## அமரர் நடராசா செல்வரத்தினம்

திதி:- அபரபக்க சதுர்த்தி (22.02.2019)

"மறைந்து போனாலும் மறந்து போகாத
உமது அன்பு மொழிகளை மறக்க முடியுமா
ஓராண்டு காலமல்ல நூறாண்டுகள் கடந்து
போனாலும் உமது நினைவுகளை இழக்க முடியுமா?
உங்கள் ஆத்ம சாந்திக்காக என்றென்றும் ஆண்டவனைப்
பிரார்த்திக்கின்றோம்"

என்றும் மறவாத

**அன்பு மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.**

**கந்த சுவாமி கோயிலடி, இணுவில் மேற்கு, இணுவில்.**

(C8/23505)(11.17)


விளம்பர தொடர்புகளுக்கு
advt@uthayan.com,
0214931111
உதயன்


## கண்ணீர் அஞ்சலி

தென்மராட்சி பிரதேச செயலகத்தில்
பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தராகக்
கடமையாற்றும் **நடராசா சுதர்சன்** அவர்களின்
பாசமிகு தந்தையார்

**முருகேசு நடராசா**

அவர்கள் நேற்று (21.02.2019) வியாழக்கிழமை காலமானார்.
அன்னாரின் பிரிவினால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது
ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன்
ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்கம்,**
**தென்மராட்சி சாவகச்சேரி.**

(IN/9456)(11)

## மரண அறிவித்தல்

# திருமதி நேசம்மா நடராசா



தோற்றம் 06.07.1943 மறைவு 20.02.2019

சித்தன்கேணியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நேசம்மா நடராசா 20.02.2019 புதன் கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி - இரத்தினம் தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், நடராசாவின் பாசமிகு அன்பு மனைவியும், காலஞ்சென்ற அழகம்மா மற்றும் துரைராசா, நவரத்தினம் (இத்தாலி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், மஞ்சுளா, கவிதா (மலேசியா), பிரபாகரன் (இத்தாலி), பிரதீபன் (இத்தாலி) ஆகியோரின் அன்புத் தாயும், தவராசா (லண்டன்), தியாகசீலன் (மலேசியா), உதர்சனா (இத்தாலி), அஜித்தா (இத்தாலி) ஆகியோரின் மாமியும், கஜேந்தினி (லண்டன்), சரண்யா, லக்ஸ்மன், தாரணி, கியன் (மலேசியா), அக்ஷரா, அஷ்வியா, அகிஷ், அபிர்ணா, அபிஷ்சா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 24.02.2019 ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணியளவில் பண்டத்தரிப்பு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**கீரிமலை றோட், சித்தன்கேணி.**

**தகவல் குடும்பத்தினர்.**

077 132 4978

# பருத்தித்துறையில் அகலம் குறைந்த வீதிகளைத் திருத்த தீர்மானம்

## நகர சபையில் நிறைவேற்றப்பட்டது

பருத்தித்துறை, பெப்.22
பருத்தித்துறை நகர எல்லைக்குள் திருத்தங்கள் இன்றி காணப்படும் அகலம் குறைந்த வீதிகளைத்திருத்தி அமைக்க புதிய சட்ட விதிகளுக்கான அனுமதியைப் பெறுவது என்று பருத்தித்துறை நகர சபையில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.
சபையின் மாதாந்த கூட்டம் தலைவர் யோசப் இருதயராசா தலைமையில் அண்மையில் நடைபெற்றது. இதன்போது இதற்கான தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.
இலங்கையில் உள்ள சில நகரங்களில் 12 அடிக்கு குறைவான அகலம் கொண்ட வீதிகள் உள்ளன. அவை காலத்துக்கு காலம் திருத்தியமைக்கப்பட்டு பயன்படுத்தப்பட்டு வருகின்றன. எமது சபை எல்லைக்குள் உள்ள வீதிகளில் அதிகமானவை அகலம் குறைந்தவையாகும். அவற்றையும் நாங்கள் சீரமைத்து நகர வரியிருப்பாளர்களின் சிரமத்தை போக்க வேண்டும் என்று சபையில் வலியுறுத்தப்பட்டது.
அகலம் குறைந்த வீதிகளை திருத்தி அமைக்க உப விதிகளில் மாற்றம் செய்யவேண்டும். அதற்குச் சபையில் தீர்மானம் எடுத்தே நடைமுறைப்படுத்த கூடிய சாத்தியம் இருப்பதால் அதற்கான தீர்மானத்தை எடுக்கவேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டது. இதற்கமைய அகலம் குறைந்த வீதிகளைத் திருத்த தீர்மானிக்கப்பட்டதுடன், இது தொடர்பாக உள்ளூராட்சி ஆணையாளருடனும் கலந்துரையாடி அனுமதி பெறுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

**தெருமூடி மடத்தினுடாக கனரக வாகனங்களுக்குத் தடை**

பருத்தித்துறை நகரில் தும்பளை வீதியில் சிவன் கோயில் அருகில் உள்ள தெருமூடி மடத்தின் மீது அண்மையில் கனரக வாகனம் மோதியதில் சிறிது சேதம் ஏற்பட்டது
அதையடுத்து தெருமூடி மடத்தினூடாகக் கனரக வாகனம் பயணிப்பதை தவிர்க்கும் முகமாக மடத்தின் இருபக்கங்களிலும் குறித்த வாகனங்கள் செல்வதற்கு தடை எனக் குறிப்பிடும் அறிவித்தல் பலகைகள் அமைப்பது என்றும் மடத்தின் நடுவே இரவு வேளையில் மின்குமிழ் ஒன்றை ஒளிரவிடுவது எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

**தரித்து நிற்கும் வாகனங்களுக்கு வரி**

பேருந்து நிலையச்சூழலில் தரித்து நிற்கும் தனியார் பேருந்துகளும் முச்சக்கர வண்டிகளுக்கும் வரிஅறிவிடுவது தொடர்பாக தனியார் பேருந்து சங்கம், முச்சங்கர வண்டிச் சங்கம் ஆகியவற்றுடன் பேசித் தீர்மானிப்பது என்று முடிவெடுக்கப்பட்டது. பேச்சுக்கு கடந்த முறை அழைப்பு விடுத்தபோது முச்சக்கர வண்டிச் சங்கத்தினர் வர மறுத்தனர். அடுத்த சந்திப்புக்கு வரத் தவறினால் பேருந்து நிலையப் பகுதியில் முச்சக்கர வண்டிகள் நிறுத்துவதற்கு தடை விதிப்பது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

**மரக்கறி விற்க செய்யத் தடை**

பருத்தித்துறை மீன் சந்தைப் பகுதியில் மரக்கறி வியாபாரம் செய்ய விண்ணப்பித்தோரின் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. நகர பொதுச் சந்தையின் மரக்கறி சந்தையிலிருந்து 500 மீற்றர் தூரத்துக்குள் வேறு மரக்கறி வியாபாரத்துக்கு அனுமதிக்கமுடியாது எனத் தெரிவித்தே விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டன. (ஜ-173)

# கொக்குவிலில் தீ வைத்து அட்டகாசம்: கூரிய ஆயுதங்களுடன் நால்வர் கைது








யாழ்ப்பாணம், பெப். 22
யாழ்ப்பாணம், கொக்குவிலில் வீடு மீது பெற்றோல் குண்டுத் தாக்குதல் நடத்தி வாகனங்களைத் தீக்கிரையாக்கினர் என்ற குற்றச்சாட்டில் 4 பேர் கைது செய்யப்பட்டனர். அவர்களிடமிருந்து வாள்கள் உட்பட கூரிய ஆயுதங்கள் மீட்கப்பட்டுள்ளன என்று கோப்பாய் பொலிஸார் தெரிவித்தனர்.

தாக்குதலை நடத்தியவர்களில் ஒருவர் கொழும்புக்குத் தப்பி ஓடிவிட்டார். அவரைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.
யாழ்ப்பாணம் கொக்குவில் கருவப்புலம் வீதியில் உள்ள வீடொன்றின் மீது கடந்த திங்கட்கிழமை இரவு பெற்றோல் குண்டு வீசித் தாக்குதல் நடத்தப்பட்டது. வீட்டின் முன்பக்கம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களும் தீக்கிரையாக்கப்பட்டன.
கோப்பாய் பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி தலைமையில் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டன. வவுனியாவிலிருந்து 50 பொலிஸார் மேலதிகமாக அழைக்கப்பட்டனர். அவர்களுடன் யாழ் மாவட்டக் குற்றத்தடுப்புப் பிரிவினரும் இணைந்து நடத்திய நடவடிக்கையில் நால்வரும் கைது செய்யப்பட்டனர்.
சம்பவம் நடைபெற்றதினம், பெற்றோல் குண்டு வீச வந்த இளைஞர்கள் பயன்படுத்திய உந்துருளிகளின் இலக்கங்கள் கருவப்புலம் வீதியில் பொருத்தப்பட்டிருந்த மறைகாணி மூலமாக அடையாளம் காணப்பட்டன. விசாரணையில் நேற்றுமுன்தினமிரவு சந்தேகத்தின் அடிப்படையில் ஒருவர் கைது செய்யப்பட்டார். அவரது வாக்குமூலத்தின் அடிப்படையில் மேலும் மூவர் அவர்களது வீடுகளில் வைத்துக் கைது செய்யப்பட்டனர். நால்வரும் மானிப்பாய், சுன்னாகம் பொலிஸ் பிரிவுகளைச் சேர்ந்தவர்கள். அவர்களிடமிருந்து 2 வாள்கள், ஒரு கோடரி, கைக் கிளிப்புகள் மற்றும் பல்சர் உந்துருளி என்பன கைப்பற்றப்பட்டன. வாள்வெட்டுக் குழுவைச் சேர்ந்த முக்கிய உறுப்பினர் ஒருவர் சம்பவ இடம்பெற்ற வீட்டில் முன்னர் வசித்தார். அவர் தற்போது அங்கு இல்லை. அவரை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டது என்று விசாரணைகளில் தெரியவந்ததாகப் பொலிஸார் தெரிவித்தனர். அவர்கள் விசாரணையின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்தப்படுவர் என்று பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (த-26,106)

# சுத்திகரிப்புப் பணிகளை விரிவாக்க வேலைநேரப் பதிவு அலுவலகங்கள்

சாவகச்சேரி, பெப் 22
சாவகச்சேரி நகரசபையினர் சுத்திகரிப்பு பணிகளை விரிவாக்குவதற்காக 3 இடங்களில் வேலை நேரப் பதிவு அலுவலகங்களைத் திறக்கவுள்ளதாக சபைத் தவிசாளர் சிவமங்கை இராமநாதன் தெரிவித்துள்ளார்.
நகரசபைக்கு குப்பை அகற்றும் வாகனம் அண்மையில் கையளிக்கப்பட்டது.
இந்த வாக னத்தின் மூலம் தினமும் பெருமளவு குப்பைகளைச் சேகரிப்பதற்கு வசதியாக சாவகச்சேரி, மீசாலை, நுணாவில் ஆகிய இடங்களில் தொழிலாளர்களின் வேலை நேரப் பதிவு அலவலகங்கள் திறக்கப்படவுள்ளன.
அந்த இடங்களிலிருந்து தொழிலாளர்களை அனுப்பி துப்பரவுப் பணிகள் மேற்கொள்ளப்படும் இடங்களுக்கு குப்பை அகற்றும் வாகனம் மூலம் ஒரே நாளில் பெருமளவு குப்பைகளை அகற்றத் திட்டமிடப்பட்டுள்ளது.
சபையில் உள்ள சுத்திகரிப்பு பணியாளர்களை மூன்று பிரிவுகளாகப் பிரித்து நேரப் பதிவு அலுவலகங்களிலிருந்து காலை 8 மணிக்கு வேலைகளை ஆரம்பிக்கப்பட்டு 10 மணிக்கு குப்பை அகற்றும் வாகனங்களை அந்தந்த இடங்களுக்கு அனுப்பி குப்பைகளை அப்புறப் படுத்தவுள்ளனர்.
தற்போது வேலை நேரப் பதிவுகள் சாவகச்சேரி நகரில் மேற்கொள்ளப்படுகிறது. அங்கிருந்து வாகனங்கள் மூலம் தொழிலாளர்களை அனுப்பி வைப்பதில் சிரமங்களை எதிர்நோக்குவதால் புதிய திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.
இதேவேளை வரியிறுப்பாளர்களின் நலன் கருதி தினமும் வட்டார ரீதியில் குப்பைகள் அகற்றும் பணிகள் ஆரம்பிக்கப்படவுள்ளதால் வரியிறுப்பாளர்கள் தமது காணிகளில் சேரும் உக்கக்கூடிய குப்பைகளை உரப்பைகளில் இட்டு வாகனம் வரும் சாலையோரங்களில் வைக்க வேண்டும்.
உக்கமுடியாத பிளாஸ்ரிக் பொருள்கள், தகரங்கள் கண்ணாடிகள் போன்றவற்றைத் தனியாக உரப்பைகளில் போட்டு சபையின் உழவு இயந்திரங்கள் வரும் வேளையில் கையளிக்க வேண்டும் என்று அவர் தெரிவித்தார். (ஜ-9)

# அரசியல் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப்.22
யாழ்ப்பாண முகாமையாளர் சம்மேளனம் ஏற்பாடுசெய்துள்ள "இலங்கை அரசியலும் எதிர்காலமும்" எனும் தலைப்பிலான அரசியல் கலந்துரையாடல் நல்லூரிலுள்ள யூரோவில் மாநாட்டு மண்டபத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு இடம்பெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
நிகழ்வில் லங்க சமசமாஜக் கட்சியின் பொதுச்செயலரும், முன்னாள் அமைச்சருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண கலந்து கொண்டு உரையாற்றவுள்ளார்.
புத்திஜீவிகள் மற்றும் பொதுமக்களால் கேட்கப்படும் பல்வேறு கேள்விகளுக்கும் இதன் போது பேரா சிரியர் பதிலளிப்பார்.
கலந்துரையாடல் நிகழ்வில் அரசியல்வாதிகள், புத்திஜீவிகள், அரசியல் சமூக ஆர்வலர்கள், ஊடகவியலாளர்கள், பொதுமக்கள் என அனைத்துத் தரப்பினரையும் கலந்து கொண்டு பயன்பெறுமாறு ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஜ)

# கூட்டுறவு உற்பத்திகளைச் சந்தைப்படுத்த வாகனம்

யாழ்ப்பாணம்,பெப் 22
வடக்கு மாகாணத்தில் கூட்டுறவு சங்கங்களின் உற்பத்திப் பொருள்களை சந்தைப்படுத்துவதற்கும் , விற்பனை செய்வதற்கும் என நடமாடும் வாகன சேவை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது என்று மாகாண கூட்டுறவு திணைக்களம் தெரிவித்துள்ளது.
கூட்டுறவு சங்கங்கள் மூலமாக உற்பத்திகளை அதிகரிப்பதன் மூலம் அந்த கிளைகளைச் சிறப்பாக கொண்டு நடத்த முடியும். அதன் அடிப்படையில் சங்கங்களை கோப் சிற்றிகளாக மாற்றும் நடவடிக்கை இடம் பெற்று வருகின்றன.
உற்பத்திகளை சந்தைப் படுத்துவதற்கு நடமாடும் வாகன சேவை ஒன்றும் ஆரம்பிக்கப்படவுள்ளது. பொது இடங்களுக்கும் இந்த வாகனம் சுழற்சி முறையில் செல்லும். இது சங்கங்களின் விற்பனையை அதிகரிக்க செய்வதுடன் கூட்டுறவு தொடர்பான விழிப்புணர்வாகவும் அமையும். 2019ஆம் ஆண்டுக்கான மாகாண கூட்டுறவு திணைக் களத்தின் செயற் திட்டத்தில் இதுவும் உள்ளடக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டது. (ஜ-7)

# விவசாயிகளுக்கு கழிவு நடைமுறை இல்லாமல் செய்கின்றது நகர சபை

வடமராட்சி, பெப்.22

வல்வெட்டித்துறை நகரசபைக்குட்பட்ட சந்தைகளில் மரக்கறிகளுக்கு இனி கழிவுகள் கிடையாது என்ற தீர்மானம் சபையால் கொண்டுவரப்பட்டு ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது. விவசாயிகள் மகிழ்சியடைந்துள்ளனர். வல்வெட்டித்துறை நகரசபையின் மாதாந்த அமர்வு கடந்த திங்கட்கிழமை வல்வெட்டித்துறை நகர சபை மண்டபத்தில் நகரபிதா கோ.கருணாணந்தராசா தலைமையில் இடம்பெற்றது.

விவசாயிகள் உற்பத்தி செய்யும் பொருள்களைச் சந்தைப்படுத்தும் போது 10 கிலோவுக்கு ஒரு கிலோ என்ற விகிதத்தில் மரக்கறி வகைகளுக்கு கழிவு அறவிடப்படுகின்றது. இந்த விகிதம் வடக்கு மாகாணத்தில் மட்டுமே நடைமுறையில் உள்ளது.

தென்னிலங்கையில் இல்லை. அங்கிருந்து எமது பிரதேசத்துக்கு வியாபார நோக்கில் வருபவர்களும் சரி, எமது சந்தைகளில் வியாபாரத்தில் ஈடுபடும் வியாபாரிகளும் சரி தாம் அதிக இலாபம் ஈட்ட வேண்டும் என எண்ணி விவசாயிகளிடத்தில் சூறையாடுகின்றனர்.

வல்வெட்டித்துறை நகரசபைக்குட்பட்ட சந்தைகளில் இந்த கழிவு விகிதம் இல்லாது செய்யப்படவேண்டும், சபைக்குட்பட்ட சந்தைகள் மற்றும் பொது இடங்களுக்கு அறிவித்தல் மூலம் மக்களுக்கு இந்த விடயம் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்று சபையில் உறுப்பினர் கைலாஜினி தீர்மானம் ஒன்றைக் கொண்டுவந்தார்.

அந்தத் தீர்மானம் சபையில் ஏகமனதாக நிறைவேறியது.

வடக்கு மாகாணத்தின் பல சந்தைகளில் இன்றுவரை கழிவு நடைமுறை உள்ளது என்று கவலை தெரிவித்த விவசாயிகள் அதை இல்லாது செய்வதற்கு அனைவரும் முயற்சிக்க வேண்டும் என்றும் கோரியிருந்தனர்.

கடன்பட்டு, பாடுபட்டு, வெயில், மழை என்று பாராது தோட்டங்களில் மரக்கறிகளை அறுவடைசெய்து அதிலிருந்து வரும் பணத்தைக் கொண்டு கடன்களை அடைக்கலாம் என்று சந்தைக்கு மரக்கறிகளைக் கொண்டுவந்தால் சந்தைகளில் கழிவு வைக்கின்றனர் என்று விவசாயிகள் குற்றம் சாட்டியிருந்தனர்.

இது தொடர்பில் யாழ்ப்பாண மாவட்ட கமக்கார அமைப்புக்களின் தலைவர் க.தியாகலிங்கம் அரச தலைவருக்கு கடிதம் ஒன்றையும் அனுப்பிவைத்தார். (ஐ-21,26)

## பெருந் திருவிழா

யாழ்ப்பாணம்,பெப்.22

யாழ்ப்பாணம்வண்ணை சிறிமத்வாலம்பிகாசமேத வைத்திஸ்வர சுவாமி ஆலயத்தின் பெருந் திருவிழா எதிர்வரும் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து 20 ஆம் திகதி புதன்கிழமை தேர்த்திருவிழாவும், மறுநாள் தீர்த்தத்திருவிழாவும் இடம்பெறும் என்று ஆலய தர்மகத்தாக.வைத்தியலிங்கம் செட்டியார் அறிவித்துள்ளார். (ஐ)

## பொதுக் கூட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.22

யாழ்ப்பாணம்கொக்குவில் சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் நிலைய மண்டபத்தில் நாளைமறுதினம் ஞாயிற்றுக்கிழமை மாலை 5.30 மணிக்கு நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டது.

## காசநோய் தினத்தை முன்னிட்டு போட்டிகள்

யாழ்ப்பாணம்,பெப்.22

உலககாசநோய்தினத்தை முன்னிட்டு வட இலங்கைக் காசநோய்த் தடுப்புச் சங்கம் பாடசாலை மாணவர்களுக்கான கட்டுரை, கவிதை, ஓவியப் போட்டிகளை நடத்தவுள்ளது.

"காசம் களையும் காலமிது"என்ற தலைப்பில் கீழ்ப்பிரிவு, மேற்பிரிவு ஆகிய பிரிவுகளாக இடம்பெறவுள்ளது.

மாணவர்கள் ஆக்கங்களை பாடசாலை பொறுப்பாசிரியரின் கையொப்பத்துடன் பெயர்,வயது,பாடசாலையின் முகவரி என்பனவற்றை இட்டு எதிர்வரும் 12 ஆம் திகதிக்கு முன்னர் வட இலங்கைக் காசநோய்த் தடுப்புச் சங்கம், மார்பு நோய் சிகிச்சை நிலையம் பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம்,பெப்.22

பேராசிரியர் கலாநிதி கா. குகபாலனின் 'இலங்கைத் தமிழர் புலம்பெயர்வு கனடாவில் அவர்கள் வாழ்வியல்' நூல் வெளியீடுயாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சபாலிங்கம் கலையரங்கில் நாளை மறுதினம் ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9.30 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி பொ.பாலசுந்தரம்பிள்ளை தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சோ.சேனாதிராசா கலந்துகொள்வார்.

ஆசியுரையை கலாநிதி ஆறுதிருமுருகன், வாழ்த்துரையை வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் இ.இளங்கோவன், யாழ்ப்பாண பல்கலைக்கழக பீடாதிபதி க.சுதாகர், யாழ்ப்பாண இந்துக் கல்லூரி அதிபர் சதா நிமலன் ஆகியோர் நிகழ்த்துவர். (ஐ)

## நெல் கொள்வனவு ஆரம்பம்

யாழ்ப்பாணம்,பெப்.22

யாழ்ப்பாண மாவட்டத்தில் தற்போது அறுவடை செய்யப்படுகின்ற நெல், சம்பா ரூபா 41 வீதமும், நாடு ரூபா 38 வீதமும் நெல் சந்தைப்படுத்தும் சபை மற்றும் குறிப்பிட்ட கூட்டுறவுச் சங்கங்களூடாக கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

விவசாயிகள் தமது நெல்லை விற்பனை செய்வதற்காக தாங்கள் உரத்தைப் பெற்றுக்கொண்ட கமநல சேவை நிலையத்தை தொடர்புகொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

கொள்வனவுக்கான கொடுப்பனவானது மறுநாளே மாவட்டச் செயலகத்தால் விவசாயிகளின் வங்கிக் கணக்கில் வைப்பிலிடப்படும் என்று மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் அறிவித்துள்ளார். (ஐ)



ஆவரங்கால் இந்து இளைஞர் சனசமூக மண்டபத்தில் நடைபெற்ற மாணவர்களுக்கான கற்றல் சாதனங்கள் வழங்கல் மற்றும் முதியோர் மதிப்பளிப்பு நிகழ்வு அண்மையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வு ஆவரங்கால் செ.தவராஜா தம்பதியினரால் ஏற்பாடு செய்யப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ- 11)

## இருபாலையில் மக்களைச் சந்தித்தார் சித்தார்த்தன்

யாழ்ப்பாணம், பெப்.22

கோப்பாய் பிரதேச செயலகத்துக்குட்பட்ட இருபாலை தெற்கு வேளாதோப்பு பகுதி மக்களுக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தனுக்கும் இடையே கலந்துரையாடல் நடைபெற்றுள்ளது.

இந்தக் கலந்துரையாடல் இருபாலை தெற்கு வேளாதோப்பு பொதுநோக்கு மண்டபத்தில் கடந்த 16 ஆம் திகதி தமிழ்த்தேசியக்கூட்டமைப்பின் வலி கிழக்கு பிரதேசசபை உறுப்பினர் ந.கஜேந்திரகுமார் தலைமையில் இடம்பெற்றது.

சமகால அரசியல் மற்றும் அபிவிருத்தி தொடர்பாக இதில் கலந்துரையாடப்பட்டது என்று தெரிவிக்கப்பட்டது.

வேளாதோப்பு, ஆனந்தபுரம் ஆகிய பகுதிகளின் அபிவிருத்திக்காக நாடாளுமன்ற உறுப்பினர் இந்த வருடம் முதற்கட்டமாக சுமார் 1 கோடியே 65 லட்சம் ரூபாவை ஒதுக்கியுள்ளார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

நிகழ்வில் வடமாகாணசபை முன்னாள் உறுப்பினர் பா.கஜதீபன், யாழ்ப்பாண மாநகரசபை உறுப்பினர் ப.தர்சானந், வலி.கிழக்கு (கோப்பாய்) பிரதேசசபையின் உப தவிசாளர் ம.கபிலன், உறுப்பினர்களான செ.செல்வராசா, ந.கஜேந்திரகுமார், சி.அகீபன் ,இருபாலை தெற்கு கிராம அபிவிருத்திச் சங்கத்தின் தலைவர் பிரதீபன், எனப் பலரும் கலந்துகொண்டனர். (ஐ)



## கூட்டணியின் மையக்குழு உறுப்பினர்கள் தெரிவு ஞாயிறன்று

யாழ்ப்பாணம், பெப். 22

தமிழர் விடுதலைக் கூட்டணியின் மையச் செயற்குழு உறுப்பினர்களைத் தெரிவுசெய்யும் தேர்தலுக்கான சிறப்புப் பொதுக்குழுக் கூட்டம் நாளை மறுதினம்ஞாயிற்றுக்கிழமைமுற்பகல் 10 மணிக்கு இடம்பெறவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது. காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணத்திலுள்ள கட்சியின் தலைமைச் செயலகத்தில் இது நடைபெறவுள்ளது. வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள கட்சியின் பொதுக் குழு உறுப்பினர்கள், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள், உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் கலந்துகொள்வர் என்று கட்சியின் செயலாளர் நாயகம் வீ.ஆனந்தசங்கரி விடுத்த செய்திக் குறிப்பில் உள்ளது. (த)

## விளையாட்டுப் போட்டிகள்

வடமராட்சி,பெப்.22

பருத்தித்துறை நகரசபை எல்லைக்குட்பட்ட முன்பள்ளிகளின் சிறார்களுக்கான விளையாட்டுப் போட்டிகள் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

தவிசாளர் யோசப் இருதயராசா தலைமையில் இடம்பெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக பருத்தித்துறை பிரதேச செயலர் ஆழ்வாப்பிள்ளை சிறி கலந்துகொள்வுள்ளார். (ஐ-173,9)

## உணவகத்தில் திருடினாரென மற்றொருவரும் கைதானார்

யாழ்ப்பாணம், பெப். 22

சாவகச்சேரி உணவகத்தில் 7 லட்சம் ரூபா பணம் மற்றும் 3 லட்சம் ரூபா பெறுமதியான அலைபேசி மீள்நிரப்பு அட்டைகளைத் திருடிய குற்றச்சாட்டில் மற்றொருவரும் கைது செய்யப்பட்டுள்ளார்.

அவர் முன்னர் கைதானவரின் சகோதரன் என்று சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர்.

திருட்டுக் குற்றச்சாட்டில் முதலாவது சந்தேகநபர் கடந்த திங்கட்கிழமை கைது செய்யப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் அதிகாலை மற்றையவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

திருடப்பட்ட பணத்தில் புதிதாகக் கொள்வனவு செய்யப்பட்ட உந்துருளி மற்றும் பெறுமதியான பொருள்கள் மீட்கப்பட்டுள்ளன.

மேலும் சில பொருள்கள் மீட்கப்பட வேண்டியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் வவுனியாவில் திருட்டுச் சம்பவங்களுடன் தொடர்புபட்டுள்ளனர் என்றும், கைது செய்யப்பட்டவர்கள் மட்டுவிலைச் சேர்ந்தவர்கள் என்றும் சாவகச்சேரிப் பொலிஸார் தெரிவித்தனர். (த-26)

# தீவுகளுக்குச் சென்று பணியாற்றும் ஆசிரியருக்கு சிறப்புக் கொடுப்பனவு

## இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப். 22

கடல் கடந்து தீவுகளுக்குச் சென்று பணியாற்றும் அதிபர், ஆசிரியர்களுக்கும் ஊக்கு விப்புக் கொடுப்பனவு வழங்கவேண்டும் என்ற இலங்கை ஆசிரியர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

கடந்தவாரம் யாழ்ப்பாணம் வந்திருந்த தலைமைஅமைச்சர் ரணில் விக்கிரம சிங்க தலைமையில், யாழ்ப்பாண மாவட்டச்செயலகத்தில் நடந்த கூட்டத்தில் தீவக மருத்துவர் பற்றாக்குறை பற்றிப் பேசப்பட்டது.

நெடுந்தீவில் மருத்துவர்கள் பணியாற்றத் தயக்கம் காட்டுகின்றனர். அவர்கள் அங்கு செல்வதற்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவாக 50 ஆயிரம் ரூபா வழங்கப்பட வேண்டும் என்று யாழ்ப்பாணத் தேர்தல் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் ரணில் விக்கிரமசிங்க வுக்கு ஆலோசனை கூறியிருந்தார்.

அதிகஸ்டப் பகுதிகளில் பணியாற்றுபவர்கள் சொந்த இடத்தில் பணியாற்றும்போது அனுபவிக்கக்கூடிய சலுகைகளை இழப்பதால் இந்தக் கொடுப்பனவை அவர்களுக்கு வழங்கவேண்டும் என்று அவர் குறிப்பிட்டிருந்தார். இது வரவேற்கப் படவேண்டிய விடயம்.

அவர்களைப் போன்றே கடல் கடந்த தீவுகளுக்குச் சென்று ஆசிரியர்களும் பணியாற்றுகின்றனர். அவர்களுக்கு ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்குவதோடு, மாணவர்களின் சமமான கல்வி உரிமை பாதுகாக்கப்படவும் வேண்டும் என்று எவராலும் குரல் கொடுக்கப்படவில்லை என்பது எமக்குக் கவலையளிக்கின்றது.

அதி கஸ்ட பகுதிகளுக்கு முதல் நியமனங்கள் வழங்கப்படுகின்றபோதிலும் அரசியல்வாதிகள் மற்றும் வடக்கு மாகாண அதிகாரிகளின் துணையுடன் வலயக்கல்விப் பணிப்பாளர்களுக்குத் தெரியாமலேயே பாடசாலைகள் மாற்றியமைக்கப்பட்டுள்ளன.

வடக்கு மாகாணத்தின் சில கல்வி வலயங்களுக்கு வலயக் கல்விப் பணிப்பாளர்கள் இல்லை.

யாழ்ப்பாணக் கல்வி வலயத்துக்கு வலயக்கல்விப் பணிப்பாளர் நியமனம் நேர்மையாக நடைபெற முயற்சிகள் எடுக்கப்படவில்லை.

இத்தகைய குறைபாடுகள் தொடர்பில் மாவட்டங்களின் மக்கள் பிரதிநிதிகள் ஆராயாமல், இருப்பது கவலையளிக்கிறது - என்றுள்ளது. (து)

## செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், பெப்.22

யாழ்ப்பாணம் புங்குடுதீவு மேற்கு அமெரிக்கன் மிசன் தமிழ்க்கலவன் வித்தியாலயத்தின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகள் பாடசாலை மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு அதிபர் யோ. விநாயகமூர்த்தி தலைமையில் நடைபெறும்.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக தீவகக் கல்விவலயஆரம்பக்கல்வி உதவிப் பணிப்பாளர் ஜெ.ஞானசீலன், சிறப்பு விருந்தினர்களாக தீவக வலய வழிகாட்டலும் ஆலோசனையும் ஆலோசனை ஆசிரியர் சு.அரசரட்ணம், புங்குடுதீவு உலக மையத்தலைவர் பி.சதீஸ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

★★★★

அளவெட்டி, பெப்.22

யாழ்ப்பாணம் தொல்புரம் அமெரிக்கன் மிசன் தமிழ் கலவன் பாடசாலையின் ஆரம்பபிரிவு மாணவர்களின் செயல்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகள் பொக்கணை மைதானத்தில் இன்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.30 மணிக்குஅதிபர்.க.முத்தரசன் தலைமையில். இடம் பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. நிகழ்வில்முதன்மை விருந்தி னராக சங்கானை கோட்டக் கல்விப் பணிப்பாளர் திருமதி.சு.நோபோட். உதயகுமார், மதிப்புறு விருந்தி னர்களாக யாழ்ப்பாணம் தொல்புரம் விக்னேஸ்வரா வித்தியாலய அதிபர்.ச.சதீஸ்குமார். தீவக வலய ஆரம்பக் கல்விஆசிரியர்.மு.கேசவன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ-63)

## அனுமதியின்றி மணல் ஏற்றிய சாரதிக்கு தண்டம்

சாவகச்சேரி, பெப். 22

அனுமதிப் பத்திரமின்றி மணல் ஏற்றிவந்த டிப்பர் சாரதிக்கு சாவகச்சேரி நீதிமன்று நேற்று ஒரு லட்சம் ரூபா தண்டம் விதித்தது. மணலைப் பறிமுதல் செய்யவும்உத்தரவிட்டது.

நாவற்குழியில் கடந்த 19 ஆம் திகதி பயணித்த அந்த டிப்பரின் ஆணங்களை அங்கு கடமையிலிருந்த சிறப்பு அதிரடிப் படையினர் சோதனையிட்டனர். அனுமதியின்றி மணல் ஏற்றி வரப்பட்டமை தெரியவந்தது. டிப்பருடன் சாரதியை சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். மட்டுவிலைச் சேர்ந்த சாரதி நீதிமன்றில் குற்றத்தை ஏற்றுக்கொண்டார். (து-9)

## உதயன் குழுமத்தின் ஏற்பாட்டில் முன்பள்ளி சிறார்கள் மகிழ்களம்

சாவகச்சேரி பெப் 22

உதயன் குழுமத்தினர் நடத்தும் தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளிச் சிறார்களுக்கான சிறுவர் மகிழ்களம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி மைதானத்தில் நாளை சனிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெறும்.

சிவப்பிரகாச மகா வித்தியாலய ஆசிரியர் செ.பிரதாப் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை.சோ.சேனாதிராஜா, உதயன் குழுமத் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஈ.சரவணபவன், சிறப்பு விருந்தி னர்களாக சாவகச்சேரி நகர சபை தவிசாளர் திருமதி சிவமங்கை இராமநாதன் சாவகச்சேரி பிரதேச சபைத் தவிசாளர் க.வாமதேவன், கனடா தமிழ்க் கல்லூரித் தலைவர் வீ.எஸ் துரைராசா, தென்மராட்சி கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் திருமதி ச.அரியநாயகம், சாவகச்சேரி டிறிபேக் கல்லூரி அதிபர் செ.பேரின்பநாதன் கோபிகன்,எஞ்சினியரிங் அன்ட் கொன்ஸ்ரக்ஸன் நிர்வாகப் பணிப்பாளர் க.குணாளன் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி ஆசிரியர் இ.ஜனகன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (ஐ-9)

## பணப் பையை எடுத்த பெண் மறைகாணியில் மாட்டினார்!

சாவகச்சேரி பெப் 22

மருத்துவமனையில் சிகிச்சை பெற வந்த முதியவரால் தவறவிடப்பட்ட பணப்பையை (பேர்ஸ்) எடுத்த பெண் மறைகாணியின் உதவியுடன் இனங்காணப்பட்டுள்ளார். சுகவீனமுற்றிருந்த முதியவர் ஒருவர் கடந்த ஞாயிற்றுக்கிழமை சிகிச்சைக்காக சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார்.

மருத்துவமனை விடுதியில் சேர்க்கப்பட்ட அவர் மதியம் உணவு வாங்குவதற்காக தனது பணப்பையைத் தேடியபோது அது காணாமல் போனது தெரியவந்ததது. வெளிநோயாளர் பிரிவிலும் தேடிக் காணாத நிலையில் இந்த விடயம் தொடர்பில் நிர்வாகத்துக்கு தெரிவிக்கப்பட்டது.

அங்கு பொருத்தப்பட்டிருந்த மறைகாணிகளின் பதிவுகளை சோதித்தபோது பெண்ணொருவர் வெளிநோயாளர் பிரிவில் காணப்பட்ட பணப்பையை எடுப்பது தெரியவந்துள்ளது. இது தொடர்பாக மருத்துவமனைபொலிஸார்மூலம்சாவகச்சேரி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டது . சாவகச்சேரி சங்கத்தானைப் பகுதியில் வதியும் சாவகச்சேரி சந்தை வியாபாரியான பெண்ணைப் பொலிஸார் தேடி வருகின்றனர். (ஐ-9)

## நிர்வாக சேவையின் போட்டிப் பரீட்சையில் 175 பேர் நியமனம்

வடமராட்சி,பெப்.22

இலங்கை நிர்வாக சேவையின் மூன்றாம் தரத்துக்கு திறந்த போட்டிப்பரீட்சை அடிப்படையில் 175 பேர் நியமனம் பெறவுள்ளனர். இவர்களின் பெயர் பட்டிலை அர்ச சேவைகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

பரீட்சையில் சித்தியடைந்த 220 பேர் கடந்த டிசம்பர் மாதத்தில் நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டிருந்தனர். இவர்களில் 175 பேர் நியமனத்துக்கு தெரிவாகியுள்ளனர். நியமனம் பெறுவோரில் 113 பேர் பெரும்பான்மை இனத்தையும் 62 பேர் சிறுபாண்மை இனத்தையும் சேர்ந்வர்கள். இவர்களில் 47 பேர் தமிழர்களும் 15 பேர் முஸ்லீம்களும் இடம்பெற்றுள்ளனர். நியமன தேர்வில் தேசிய மட்டடத்தில் வடமராட்சியைச் சேர்ந்த பி. குருபரன் முதல் நிலையைப் பெற்றுள்ளார். தெரிவான 47 தமிழர்களின் விபரம் வருமாறு:

பி.குருபரன்,கே. நித்தயா, ஜீ.கிருணிகா, பி. குணாலினி, பி. நிரோசினி, ஜே.ரெமின்டன், கே. சத்தியப்பிரியா .எஸ்சுகன்யா, கே. லக்ஸிகா ,எஸ்சாமி, எப.கெனிஜீட், வீ. தேவகுமாரி என். பிரணவன் ஆர். பிரசாந்தன் லி.ஏ. டென்சியா, ரி.தாரணி, எஸ் அபர்னா, ஆர்.சுவாகர், வீ.துலாஞ்சனன், ஏ. மரிக்குமார், எல். ரங்கசாமி, எம் ஜெயபமயூரன், எஸ்நிசாந், தர்சினிநிதர்சன், ஆர்.பாமா, மாதுகிசஜி, ஜீ.தாரணி, பி.பிரவணரூபன், என்.ரேவதி, கே. ரமேஸ் ராஜா, கே. கேமாசிந்துஜா, எம்.பார்த்தீபன், எம் கிருத்திகா, ரி. கென்ஸ்மான், எஸ் துர்ஷா, ஜி.ஏகாந்தன், கே. விஜயரூபன் ரி.சிறிரஜீபன், எஸ் தேசிதா, எஸ் அருண்யா, வி. டீஏ.நந்திகா எஸ் சஞ்சி வன், பி.தெய்வநாயகி., டி.என. சாமினி, வி. வனோயினி, எஸ் .மேனகா, எஸ் கெளசி கன்,

நியமனத்துக்காக தெரிவு செய்யப்பட்டுள்ள 15 முஸ்லீம்களின் விபரம் வருமாறு ஏ.கே. ரொசிந்தாஜ்.கே.ருஸ்தா, ரி.ஜெஸான், ஏம்.ஆர்.எம் .சப்ரின், என் நிலோபர்,வை.நாஸித், எம்.ஐ.. முவஹ்பிகா,யூ.ஏஸ் அஸ்லம், கே. ஸஹ்ர்ஸா, எ.ஜீ.முகமட்பசால், எம்.எஸ். பார்த்திமா, கனஸ்ஸா, எஸ் சிப்கா,எம். வை.எப் நப்லா,ஏ.எஸ் எம் அஸீம், ஏம் .எஸ் அவாஅகமட் ஆகியோரே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கை நிர்வாக சேவைக்குத்தெரிவான 175 பேருக்கும் எதிர்வரும் 5 திகதி நியமனம் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-173)

# பரு. நகர சபை அமர்விலிருந்து எதிர்க்கட்சியினர் வெளிநடப்பு

வடமராட்சி, பெப்.22

பருத்தித்துறை நகரசபைக் கூட்ட ஆரம்பத்தில் எதிர்க்கட்சிகளான தமிழ்த் தேசிய மக்கள் முன்னனி, ஈ.பி.டி.பி தமிழர் விடுதலைக் கூட்டணி, சுயேச்சைக்குழு ஆகிய கட்சிகளைச்சேர்ந்த 10 உறுப்பினர்கள் திடீரென சபையில் இருந்து வெளிநடப்பு செய்தனர். இந்தச் சம்பவம் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றுள்ளது.

சபைத்தலைவர் யோ. இருதராஜா தலைமையில் மாதாந்தக் கூட்டம் முற்பகல் 9 மணிக்கு வழமையான நடவடிக்கைளுடன்ஆரம்பமாகி சென்ற கூட்ட அறிக்கை வாசிக்கும்போதே இந்தப் பிரச்சினை ஆரம்பித்தது.

முன்னணியின் தலைமை உறுப்பினர் கே. பாலசுப்பிரமணியம் காரணம் எதுவுமே கூறாது தாங்கள் வெளிநடப்புச்செய்யப் போகிறோம் என்று தெரிவித்தார். அதையடுத்து அவரது அணியினர் சபையை விட்டுவெளி யேறினார்கள். வெளியேறிய உறுப்பினர்கள் சபைக் கூடத்தின் மண்டபத்தில் சுமார் அரை மணி நேரமாகக் குழுமி நின்றனர்.

தலைவர், உபதலைவர் உள்ளிட்ட ஆளும் கட்சி உறுப்பினர்கள் ஐந்து பேரும் சபையில் இருந்து உரையாடிக் கொண்டிருந்தனர். அரை மணி நேரத்தில் வெளிநடப்புச் செய்த உறுப்பினர்கள் சபா மண்டபத்துக்குச்சென்றனர். கூட்டம் ஆரம்பமானது. அதேவேளை தாம் வெளிநடப்புச் செய்ததற்கான காரணத்தை விளக்கி கடிதம் ஒன்றை உறுப்பினர் க.பாலசுப்பிரமணியம் தலைவரிடம் கையளித்தார். கடிதத்தைப் பெற்றுக்கொண்ட தலைவர், சட்டத்துக்கு மாறாக நான் செயற்பட விரும்பவில்லை. வெளிநடப்புச் செய்யும் போது காரணத்தைத் தெரிவித்துக் கடிதமும் தரவில்லை. அதனால் நீங்கள் தந்த கடிதத்தை அடுத்த கூட்டத்தில் வாசிக்கிறேன். மேலதிகமாக ஏதும் கதைக்கவேண்டியிருந்தால் நான் ஆலோசனை பெற்றே கதைக்கவேண்டும் - என்றார். இதன் பின் கூட்டம் சுமுகமாக இடம்பெற்றது.

தலைவரிடம் கையளிக்கப்பட்ட கடிதத்தில், வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பொருள்களில் ஊழல் புரிந்தமை, காந்தி சிலைக்கு வர்ணம் பூசுவதில் ஏற்பட்ட ஊழல் ஆகிய இரு குற்றச்சாட்டுக்கள் உட்படநான்கு குற்றச்சாட்டுக்களைஉபதவிசாளருக்கு எதிராக முன்வைத்திருந்தனர்.

சபையினதும் சபை உறுப்பினர்களினதும் மதிப்பைக் கருத்திற்கொண்டு திருமதி மதனி நெல்சன் நகரசபை உபதலைவர் பதவியிலிருந்து உடனடியாக விலக வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தச் சபையில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியில் அங்கம் வகிக்கும் 5 பேரும், ஈ.பிடி.பி, தமிழர் விடுதலைக்கூட்டணி என்பனவற்றில் தலா 2 பேரும் சுயேச்சைக் குழுவில் ஒருவரும் எதிர்க்கட்சியாகச்செயற்படுகின்றனர். (ஐ-173)

## மன்னார் மாணவன் இறப்புப் பற்றி எந்தவொரு விசாரணையும் இல்லை

### நீதி கோருகின்றனர் உறவினர்கள்

மன்னார், பெப். 22

மன்னார் மாந்தையில் உயர்தர வகுப்பு மாணவன் ஒருவர் பாடசாலைச் சீருடையுடன் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டமை தொடர்பில் எந்தவித விசாரணைகளும் இதுவரை இடம்பெறவில்லை என்று மாணவனின் உறவினர்கள் கவலை தெரிவித்தனர். இந்தச் சம்பவத்துக்குப்பாடசாலை நிர்வாகம் காரணமென்று அவர்கள் குற்றஞ்சாட்டுகின்றபோதும் அதனைப் பாடசாலை அதிபர் மறுத்துள்ளார்.

மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கருங்கண்டல் மகா வித்தியாலயத்தில் உயர் தர வகுப்பில் கற்கும் ஜே.நிர்மலன் (வயது-20) என்பவரே கடந்த வெள்ளிக்கிழமை சடலமாகமீட்கப்பட்டுள்ளார்.

இந்த மாணவனை முகச்சவரம் செய்து வருமாறு பலர் முன்னிலையில் அதிபர் பேசினார் என்றும் இல்லையேல் இனிவரக் கூடாது என்று கூறினார் என்றும் மாணவனின் உறவினர்கள் அதிபர் மீது குற்றஞ்சாட்டுகின்றனர். அதனால் மாணவன் முற்பகல் வீட்டுக்கு வந்துள்ளார். என்ன விடயம் என்று' கேட்டபோது பரீட்சை என்று கூறிவிட்டு சீருடையில் திரும்பிச் சென்றவர் வீடு திரும்பவில்லை. தேடுதல் நடத்தியபோது அன்றிரவு பாடசாலையிலிருந்து சுமார் ஒரு கிலோமீற்றர் தூரத்திலுள்ள காட்டுப் பகுதியில் அவர் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டார். அவர் பின்னர் அடக்கம் செய்யப்பட்டார் என்று தெரிவித்த மாணவனின் உறவினர், மாணவன் இற்ந்தமை பற்றி இன்றுவரை (நேற்று) எவரும் விசாரணை செய்யவில்லை. அதனால் இன்று அடம்பன் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளோம். மடு வலயக் கல்விப் பணிப்பாளர், பிரதேச செயலர், ஆயர் இல்லம் ஆகியோருக்கு இது பற்றி மனுக் கொடுத்து. . மாணவனின் இறப்புக்கு உரிய விசாரணை, நீதி வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளோம் என்றும் தெரிவித்தனர்.

இவர்களின் குற்றச்சாட்டை மறுத்த பாடசாலை அதிபர், பாடசாலைக்கு மாணவர் ஒழுக்கம் உள்ளது. அவர் "ஸ்ரைலாக" முகச்சவரம் செய்து வந்திருந்தார். அதை நீக்கி பாடசாலை ஒழுக்கத்தின்படி முகச்சவரம் செய்து வருமாறு கூறியிருந்தேன். ஒழுக்கம் அனைத்துப் பாடசாலைகளுக்கும் பொதுவானது. அவர் அங்கேயே நின்றதால் அம்மா அல்லது அப்பாவைக் கூட்டிவருமாறு கூறியிருந்தேன். அங்கிருந்த சென்றவர் பின்னர் வரவில்லை. அன்றிரவு மாணவன் தவறான முடிவெடுத்ததை அறிந்தேன் என்று தெரிவித்தார்.

கிட்டத்தட்ட இதேபோன்ற தொரு ஒழுக்க விதிமீறல் என்று கூறப்படும் சம்பவம் முல்லைத்தீவில் கடந்த நவம்பர் மாதம் இடம்பெற்றிருந்தது. இது பற்றிக் கருத்துரைத்த உளநல மருத்து நிபுணர் மருத்துவர்சு.சிவதாஸ், ஆசிரியர்கள், அதிபர்கள் மாணவர்களை அவமானப்படுத்தும் விதத்தில் தண்டனை வழங்கக்கூடாது என்று கூறியிருந்தார்.

"தவறிழைக்கும் மாணவர்களை பெற்றோரை அழைத்து எச்சரிப்பது, சில நாள்களுக்கு பாடசாலையிலிருந்து நிறுத்துவது போன்ற மனதைக் காயப்படுத்தாத தண்டனைகளின் மூலமாகத் திருத்த முயற்சிக்கவேண்டும். எந்தக் காரணம் கொண்டும் மாணவர்களை அவமானப்படுத்தும்வகையில் தண்டனை வழங்கக் கூடாது. அது பாரதூரமானது. அதுவும் கட்டிளமைப் பருவத்தை நெருங்கும் மாணவர்களுக்கு அவமானப்படுத்தும் வகையான தண்டனை மிகமோசமானவிளைவை ஏற்படுத்தும். அதிபர்களோ, ஆசிரியர் களோ இதில் கவனமாக இருத்தல் வேண்டும்'' என்றும் மருத்துவ நிபுணர் மேலும் தெரிவித்தார். (து-56)

# நானாட்டான் கால்நடைகளுக்கு கட்டுக்கரையில் மேய்ச்சல் நிலம்

மன்னார்,பெப். 22

கட்டுக்கரைக்கு மேல் பக்கம் நானாட்டான் பிரதேசத்து கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலம் வழங்கு வது என்று நானாட்டான் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. கட்டுக்கரை நீரேந்துப் பகுதிகளுக்கு பாதிப்புகள் ஏற்படாதவாறு பாதுகாக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தப்பட்டது.

நானாட்டான் பிரதேச சபையின் அமர்வு, அதன் தலைவர் திருச்செல்வம் பரஞ்சோதி தலைமையில் நேற்றுமுன்தினம்காலை9.30மணிக்குஆரம்பமானது. அதில் இந்தத்தீர்மானம்நிறைவேற்றப்பட்டது. இது தொடர்பாக தவிசாளர் மேலும் தெரிவித்ததாவது:

நானாட்டான் பிரதேசத்து கால்நடைகளுக்கு என்று சொந்தமான மேய்ச்சல் நிலங்கள் இல்லை.

இதனால் பால் உற்பத்தி குறைவதுடன், நோய்வாய்ப்பட்டு பெருமளவிலான கால்நடைகளின் இறப்பு வீதம் அதிகரிப்பதாக கால்நடைப் பண்ணையாளர்கள் தொடர்ச்சியாக முறைப்பாடு செய்து வந்தார்கள்.

அதுமட்டுமல்லாது நானாட்டான் பிரதேசத்துக் கால்நடைகளைச் செட்டிகுளம் பிரதேச சபை வெளியேற்ற உத்தரவிட்டிருந்தது. மாந்தை மேற்கு பிரதேச செயலகப்பிரிவில் உள்ள தேத்தாவாடி பகுதியில் மேய்சல் குறைவு. அதனால் நானாட்டான் பிரதேசத்து கால்நடைகளை தமது பிரதேசத்துக்குள்ளேயே மேய்சலில் ஈடுபடுத்தி வருகின்றார்கள். இங்கு முழுவதும் விவசாயநிலங்களாக உள்ளதால், கால்நடைகள் பாதிக்கப்படுகின்றன. இதனை கருத்தில் கொண்டு முருங்கன் நீர்பாசனத்திணைக்களத்தின் அனுமதியுடன், கட்டுக்கரைக்கு மேற்குப் பக்கமாக கால்நடைகளுக்கு மேய்ச்சல் நிலம் வழங்குவது என்று நானாட்டான் பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

கட்டுக்கரைக்கு மேற்கு பக்கம் காணப்படும் புல்லறுத்தான் கண்டல், கட்டைக்காடு வாச்சான் குளம், போன்ற பகுதிகளின் கிழக்கு பக்கங்களை கால்நடைகளுக்கான மேய்ச்சல் நிலமாக பயன்படுத்த முடியும் என்றும், கட்டுக்கரைக்குளத்தின் நீர் ஏந்து பகுதிகளுக்கு எந்த பாதிப்புகளும் ஏற்படாதவாறு, அவற்றைப் பயன்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்ளப்பட்டது என்றார். (க-213)

## பறிக்கப்படும் அபாயத்திலிருந்த காணிகள் கட்டணம் கட்டி மீட்பு

கிளிநொச்சி, பெப்.22



காணி மறுசீரமைப்பு ஆணைக்குழுவுக்கு கட்டணங்கள் செலுத்தாமல் பறிக்கப்படும் அபாயத்தில் இருந்த காணிகளுக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட்டு காணி அனுமதிப் பத்திரங்கள் மக்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

பச்சிலைப்பள்ளி அரசர் கேணி கிராம அலுவலர் பிரிவில் உள்ள செந்தில் நகர் பகுதியில் காணிமறுசீரமைப்பு ஆணைக்குழுவிற்கு சொந்தமான காணியில் 43 குடும்பங்கள் வசித்து வந்துள்ளனர். இவர்கள் 1987 ஆம் ஆண்டில் இருந்து ஆணைக்குழுவுக்கு பணம் செலுத்தவில்லை இதனால் அவர்களின் காணிகள் பறிக்கப்படும் நிலையில் இருந்தன.

இந்த விடயத்தை நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரனின் கவனத்துக்கு பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர், உபதவிசாளர் ஆகியோர் கொண்டு சென்றனர். அதையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் காணி ஆணைக்குழுவுக்கு செலுத்த வேண்டிய 2 இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபாயை வழங்கினார் என்று தெரிவிக்கப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை இந்தக் காணி அனுமதிப் பத்திரங்கள் மக்களிடம் நாடாளுமன்ற உறுப்பினரால் கையளிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் தவிசாளர் சு.சுரேன், உபதவிசாளர் மு.கயன், பிரதேச சபையின் உறுப்பினர்களான த.றமேஸ், வே.கோகுல்ராஜ், தமிழரசுக் கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்க.ஜெயக்குமார்,கிராம அலுவலர், கிராம அமைப்புக்களின் பிரதிநிதிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (ஐ-6)

## காலாவதியான பொருள்களை விற்றவர்களுக்குத் தண்டம்

மன்னார் ,பெப்.22

மன்னாரில் காலாவதியான பொருள்களை விற்பனை செய்த 8 வர்த்தகர்களுக்குத் தண்டம் விதிக்கப்பட்டுள்ளது.

மன்னார். கிராமப் பகுதிகளிலுள்ள கடைகளில் மன்னார் நுகர்வோர் பாதுகாப்பு சபை அலுவலர்கள் திடீர் பரிசோதனைகளை மேற்கொண்டனர்.

அங்குள்ள 8 வர்த்தக நிலையங்களில் காலாவதியான பொருள்கள் விற்பனை செய்யப்பட்டமை கண்டுபிடிக்கப்பட்டது. அந்த வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.

நேற்றுமுன்தினம் புதன்கிழமை மன்னார் மாவட்ட நுகர்வோர் பாதுகாப்பு சபை அலுவலர் மன்னார் மாவட்ட நீதிவான் நீதிமன்றில் எட்டு வர்த்தகர்களுக்கு எதிராக தனித்தனி வழக்குத் தாக்கல் செய்து சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்தினார்.

மன்னார் மாவட்ட நீதிவான் ரி.சரவணராஜா முன்னிலையில் விசாரிக்கப்பட்ட வழக்கில் எட்டு பேரும் தங்கள் மீதான குற்றச்சாட்டுக்களை ஏற்றுக் கொண்டனர். ஐந்து பேருக்குத் தலா 4ஆயிரத்து 500 ரூபா தண்டமும், மூன்று பேருக்கு தலா 6 ஆயி ரம் ரூபா தண்டமும் விதிக்கப்பட்டது. (க-60)

## வள்ளுவர் குரு பூசை தினம் கடைப்பிடிப்பு

வவுனியா,பெப்.22

திருவள்ளுவர் குரு பூசைதினமான நேற்று வவுனியா மருத்துவமனை சுற்று வட்ட வீதியில் அமைந்துள்ள திருவள்ளுவர் சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி குரு பூசைத் தினம் கடைப்பிடிக்கப்பட்டது.

வவுனியா நகர் சபையின் ஏற்பாட்டில் உப நகரபிதா சு.குமாரசாமி தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் தமிழருவி சிவகுமாரன் மற்றும் தமிழ்மணி அகளங்கன் ஆகியோர் சிறப்புரைகளை நிகழ்த்தினர்.

நிகழ்வில் நகரசபைஉறுப்பினர்கள், செயலர், ஊழியர்கள்,பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். (க-110)






# "இலட்சியங்களை விதைப்போம்" வவுனியாவில் கலாசார ஊர்வலம்

வவுனியா,பெப்.22

வவுனியா மாவட்டச்செயலகம் மற்றும் சிறுவர் செயலகம் ஆகியன இணைந்து நடத்திய "இலட்சியங்களை விதைப்போம்" எனும் தொனிப்பொருளிலான முன்பள்ளி பருவச்சிறார்களுக்கான சமூக கலாசார ஊர்வலம் நேற்று நடைபெற்றது. காலை 9 மணிக்கு வவுனியா மாவட்டச் செயலகத்திலிருந்து ஆரம்பித்த ஊர்வலம் நகரசபை கலாசார மண்டபத்தை அடைந்தது.

மேலதிக மாவட்ட செயலர் தி.திரேஸ்குமார் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில், முதன்மை விருந்தினராக மாவட்ட செயலர் எம்.கனீபா கலந்துகொண்டார். சிறப்பு விருந்தினராக மகளிர் மற்றும் சிறுவர் விவகார அமைச்சின் பணிப்பாளர் திருமதி நயனா சேனாரட்னவும், வடமாகாண கல்வி அமைச்சின் ஆரம்ப பிள்ளை அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் ஜெயா தம்பையாவும் கலந்துகொண்டனர்.

நடைபவனியில் சிறுவர்கள் விநோத உடை அணிந்து, சமயபெரியோர்கள் போல நடைபவனியாக சென்றிருந்தனர். நடைபவனி மாவட்டசெயலக முன்றலில் ஆரம்பமாகி மருத்துவமனை சுற்று வட்டத்தினூடாகச் சென்று, நகரசபை மண்டபத்தை அடைந்தது. ஏனைய நிகழ்வுகள் அனைத்தும் நகர சபை கலாச்ர மண்டபத்தில் நடைபெற்றன. நிகழ்வில் மாவட்டச் செயலக அதிகாரிகள், பிரதேச செயலர்கள், பெற்றோர்கள், பெண்கள் அமைப்புகள் எனப் பலர் கலந்துகொண்டனர். (க-110)



## பார்த்தீனிய அழிப்பு நடவடிக்கை

கிளிநொச்சி, பெப்.22

கிளிநொச்சி நகரை அண்டிய திருநகர்ப் பகுதியில் வேகமாகப் பரவிவரும், தீங்கு விளைவிக்கும் நச்சுச் செடியான பார்த்தீனியம் செடிகளை அழிக்கும் பணியில் கிளிநொச்சி அபிவிருத்தி மறுவாழ்வு நிறுவனம் ஈடுபட்டுள்ளது.

பார்த்தீனியம் செடியைச் துப்புரவுப் பணி மூலம் பிடுங்கி அழிக்கும் நடவடிக்கையை கிளிநொச்சி அபிவிருத்தி மறுவாழ்வு நிறுவனம் நேற்றுக் காலை முன்னெடுத்திருந்தது.

கிளிநொச்சியில் இயங்கி வரும், கிளிநொச்சி அபிவிருத்தி மறுவாழ்வு நிறுவனம் மக்கள் நலச் சேவைகள் பலவற்றை முன்னெடுத்துள்ளது. பார்த்தீனியத்தை முற்று முழுதாக அழிப்பதற்கான தொடர் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் என்றும், அதற்கு அனைவரும் ஒத்துழைக்க வேண்டும் என்றும் அந்த அமைப்பு கோரிக்கை விடுத்துள்ளது. (க-222)

# சட்டவிரோத மீன்பிடி முறையால் கடல் வளங்களை அழிக்கின்றனர்

## முல்லைத்தீவு மீனவர்கள் கவலை

யாழ்ப்பாணம், பெப்.22

மீன்களின் இனப் பெருக்கத்தை அழித்து எதிர்காலச் சந்ததிக்கு தொழிலை விட்டுவைக்காது அவர்களின் வாழ்வாதாரத்தையும் கேள்விக்குள்ளாக்கும் வகையில் முல்லைத்தீவு நந்திக்கடல் களப்பில் சட்டவிரோத மீன்பிடித் தொழில் நடைபெறுகிறது என்று பிரதேச மீனவர்கள் குற்றஞ்சாட்டியுள்ளனர்.

முல்லைத்தீவு நந்திக்கடல் களப்புப் பகுதியில் மீன்பிடித் தொழிலை நம்பி பல குடும்பங்கள் வாழ்கின்றனர். இங்கு இறால், நண்டு, மீன் போன்றவை அகப்படும். இரண்டு காலங்களாக வகுத்து அங்கு மீன்பிடி இடம்பெறும் பெப்ரவரி மாதம் தொடக்கம் ஜீலை வரை கடல் நீரின் அளவு குறைவாக இருக்கும். இந்தக் காலப் பகுதியில் வீச்சு வலையை பயன்படுத்தி மீன்பிடிக்கும் வழமை காலம் காலமாக இருக்கிறது. அதற்குப் பின்னர் மழையுடன் கூடிய கால நிலையில் பெரிய கண்ணுடைய வலையைப் பயன் படுத்தி மீன் பிடிக்கும் வழமை உண்டு. ஆனால் தற்போது அந்த வழக்கத்தை மாற்றி சிறிய கண்களைக் கொண்ட வலைகள் கடலில் பாய்ச்சப் படுகின்றன.

இறால் குஞ்சுகள், நண்டுக் குறுணிகள், மீன் குஞ்சுகள் என அனைத்தும் அந்த வலைகளில் சிக்குகின்றன. சிறிய மீன்களைத் தவிர்த்து பெரிய மீன்களையோ இறால்களையோ பிடிப்பதன் மூலம் சிறிய மீன் இனங்கள் வளர்ந்து இனப் பெருக்கம் அடையும். அவ்வாறு இனப் பெருக்கமடையும், அது சுழற்சி முறையில் இடம் பெறும். இதனால் கடலில் மீனினம் உற்பத்தியாகிக் கொண்டே இருக்கும்.

தற்போது சிறிய கண்வலைகளைப் பயன்படுத்தும் போது குஞ்சு பொரித்து வெளியில் வரும் போதே வலைகளில் மாட்டிக் கொள்கின்றது. இதனால் அவை வளர்ந்து இனப்பெருக்கமடையும் சூழல் அங்கு மறுக்கப்படுகிறது. இறால், நண்டுகளும் இவ்வாறே மாட்டிக் கொள்கின்றன. சிறிய மீன் குஞ்சுகளை கரைக்குக் கொண்டுவந்தும் எந்தப் பயனும் இல்லை. அவை நிலத்தில் கொட்டப் படுகின்றன. நாய்கள், காகங்களுக்கே அவை இரையாகின்றன. எமது கடல்வளம் இப்படிப்பட்ட சட்டவிரோதத் தொழிலால் அழிக்கப்படுகிறது. எமது வாழ்வாதாரம் மட்டுமன்றி எமது அடுத்த சந்ததி கடலில் இறங்கி தொழில் புரிவதற்கு இங்கு மீன்கள் இருக்கப் போவதில்லை. அதற்குச் சாத்தியமற்ற தன்மையும் காணப்படுகிறது. தொழிலுக்கு இறக்கும் சந்ததி கடல் தாவரங்களை பிடிங்கிச் செல்லும் நிலைதான் வரப் போகின்றது.

நந்திக்கடல் ஏரியில் சுமார் 300 பேர் வரையில் இந்த சட்ட விரோத தொழிலில். ஈடுபட்டு வருகின்றனர். அவர்கள் அநேகமானவர்கள் எமது மாகணத்தைச் சேர்ந்தவர்களே. ஆரம்பத்தில் இவர்க்ளுக்கு எதிராக நீதிமன்ற வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டன. ஆனால் தண்டத்தை செலுத்தி இலகுவாக வெளியே வந்து விடுவார்கள். இந்தச் சட்ட விரோத மீன் பிடியைத் தடுக்கச் சென்ற 7 பேரை தாக்கிய சம்பவமும் அண்மையில் நடைபெற்றது. இங்கு கறுப்பு நண்டு ஒரு கிலோ 3 ஆயிரம் வரையிலும், இறால் 700 ரூபா முதல் விற்பனை செய்யப் படும். இதுவே அதி கூடிய வருமானமாக இருக்கும். இனிவரும் காலங்களில் குஞ்சு இறால்களையே அதிக விலை கொடுத்து வாங்கவேண்டிய நிலை வரும். இது தொடர்பாக உரியவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்' என்று பிரதேச மீனவர்கள் கவலை வெளியிட்டனர்.

"நந்தி கடல் களப்பில் இவ்வாறு சட்டவிரோத தொழில் நடைபெறுவது தொடர்பில் அறியப்பட்டு, முல்லைத்தீவு மாவட்ட நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகளுடன் சில தினங்களுக்கு முன்னர் கலந்துரையாடல் ஒன்று நடைபெற்றது. அதில் இதற்குரிய நடவடிக்கை எடுப்பதாக அவர்கள் தெரிவித்துள்ளனர் என்று முல்லைத் தீவு மாவட்ட கிராமிய கடல் தொழில் அமைப்பின் சம்மேளனம் தெரிவித்தது. கடற்தொழில் நீரியல் வளத்திணைகத்துக்குஅழைப்பை ஏற்படுத்தியபோதும் அது பயனளிக்கவில்லை.

இறால், நண்டுகளுக்குப் பயன்படுத்தப்படும் கூட்டுத் தொழிலில் சிறிய கண் வலைகளைப் பய்ன்படுத்தக் கூடாது என்று மீன்பிடி அமைச்சு தெரிவித்திருந்தது. அந்த வலைகள் அகற்றப்பட்டு கூட்டுத் தொ்ழிலை மேற்கொண்ட குடும்பங்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாது அவர்களுக்கு தொழில் வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டிருந்தது. ஆனால் அது தொடர்பில் எந்த ஒரு நடவடிக்கையும் வடக்கு மாகாணத்தில் இடம்பெற வில்லை. வடக்கு பரவைக் கடல்கள் எங்கும் சிறிய கண்களைக் கொண்ட கூட்டுவலைகள் பயன்படுத்தப் படுகின்றன. அதிகாரிகள் மெளனமாகவேஇன்றுவரை உள்ளனர்.

(எ-21,7)



## பிக்குகள் சேர்த்த பொருள்கள் மாணவர்களிடம் கையளிப்பு

கிளிநொச்சி,பெப்.22

வெள்ளப் பாதிப்பையடுத்து தென்னிலங்கையில் பிக்குகளால் மாணவர்கள் மற்றும் மக்களிடம் சேகரிக்கப்பட்ட பொருள்கள் கிளிநொச்சி இராமநாதபுரம் மேற்கு பாடசாலை மாணவர்களிடம் நேற்றுக் கையளிக்கப்பட்டன.

காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை போன்ற பிரதேசங்களில் பிக்குகளால் சேகரிக்கப்பட்ட கற்றல் உபகரணங்கள் உள்ளிட்ட பொருள்கள் பாடசாலையில் கல்வி கற்கின்ற சுமார் 300 மாணவர்களுக்கும் கையளிக்கப்பட்டன.

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ளம் ஏற்பட்ட போது பிக்குகள் அனைவரும் ஒன்றிணைந்து பாடசாலைகள் மற்றும் சமூகத்திடம் கேசரிக்கப்பட்ட பொருள்களையே நேற்று கையளித்தனர்.

இந்த நிகழ்வில் பிக்குகள் கற்கை நிலையத்திலிருந்து வந்திருந்த முப்பதுக்கும் மேற்பட்ட பிக்குகள், கல்வி அமைச்சின் பௌத்த பிரிவுக்கான பணிப்பாளர் விஜித ஹெலகெதர, கிளிநொச்சி வலயக் கல்வி அலுவலகத்தின் சேவை கால ஆசிரியர் ஆலோசகர் திருக்குமார், ஆங்கில ஆசிரிய ஆலோசகர் சிவஞானம், பாடசாலையின் அதிபர் சுதாஸ்கரன் மற்றும் பாடசாலையின் ஆசிரியர்கள் மாணவர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-214)



## கிளி.பொதுச்சந்தைக் கட்டடம் இப்போதைக்கு சாத்தியமில்லை!

கிளிநொச்சி, பெப்.22

கிளிநொச்சி மாவட்ட பொதுச் சந்தைக்கான கட்டடம் அமைக்கப்படுவதில் உள்ள இழுபறிநிலை இன்னும் சில வருடங்கள் நீடிக்கும் என்று கூறப்படுகின்றது.

கட்டத்துக்கான நிதி ஒதுக்கீட்டாலேயே இந்த நிலை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கிளிநொச்சி மாவட்டத்தின் பொதுச் சந்தையின் நிரந்தரக் கட்டடத்துக்கு முதலில் 150 மில்லியன் ரூபாவுக்கான திட்டம் தயாரிக்கப்பட்டிருந்தது. பின்னர் அது 767 மில்லியன் ரூபா நிதிச் செலவுடனான புதிய திட்டமாக மாற்றப்பட்டிருந்தது.

சந்தைக்கான நவீன புதிய திட்டத்தை நகர அபிவிருத்தி அதிகார சபையினர் மேற்கொண்டிருந்தனர். வரையப்பட்ட புதிய திட்டம் அமைச்சரவைக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இது தொடர்பில் அமைச்சரவை நகர அபிவிருத்தி அதிகார சபையினரிடம் விளக்கம் கோரியது. இதற்கான விளக்கம் நகர அபிவிருத்தி அதிகார சபையால் அமைச்சரவைக்கு வழங்கப்பட்டு அமைச்சரவை அதனை ஏற்றுக்கொண்டாலே வரவு - செலவு திட்டத்தினூடாக நிதி ஒதுக்கப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கிளிநொச்சி மாவட்டச் செயலகத்துக்கு அண்மையில் வந்த தலைமை அமைச்சர் முன்னிலையில் இது தொடர்பான கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றிருந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் மேற்படி விளக்கம் அளிக்கப்பட்டது. நகர அபிவிருத்தி அதிகார சபையினர் 767 மில்லியனுக்கான விளக்கத்தை அமைச்சரவைக்கு அனுப்பி வைத்து அதனை அமைச்சரவை ஏற்றுக்கொண்டால் மட்டுமே அடுத்து வருகின்ற வரவு - செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு மேற்கொள்ளப்படும். அத்துடன் ஒரே வரவு-செலவு திட்டத்தில் முழுத் தொகையும் ஒதுக்கப்படாது. கிளிநொச்சி பொதுச் சந்தைக்கான நிரந்தரக் கட்டடம் என்பது இப்போதைக்கு சாத்தியமற்ற ஒன்றாகவே காணப்படுகிறது என்று பலரும் கருத்துத் தெரிவித்துள்ளனர். (எ-21,6, 214)

## தண்ணீர் பவுசர்கள் கையளிப்பு

வவுனியா,பெப்.22

தேசிய இடர் உதவி சேவைகள் நிலையத்தால் இடர் நேரங்களில் பொதுமக்களுக்கு குடிநீர் வழங்குவதற்காக இரண்டு தண்ணீர் பவுசர்கள் வவுனியா மாவட்டத்துக்கு வழங்கப்பட்டுள்ளன. பவுசர்கள் செட்டிகுளம் மற்றும் வவுனியா பிரதேச செயலர் பிரிவுகளுக்கு வழங்கப்பட்டன. வவுனியா மாவட்ட செயலர் எம்.கனீபா பிரதேச செயலர்களிடம் நேற்றுமுன்தினம் பவுசர்களைக் கையளித்தார். கடந்த வருடமும் வவுனியா வடக்கு மற்றும் வவுனியா தெற்கு சிங்கள பிரதேச செயலகபிரிவுகளுக்கு பவுசர்கள் வழங்கப்பட்டிருந்தன. நிகழ்வில் மேலதிக மாவட்ட செயலர் தி.திரேஸ்குமார், வவுனியா மற்றும் செட்டிகுளம் பிரதேச செயலர்களான கா.உதயராஜா, க.சிவகரன் ஆகியோர் கலந்துகொண்டனர். (க-110)



# உறுப்பினர்களின் கேள்விகளால் சபையை ஒத்திவைத்த தவிசாளர்

## வேலணையில் இப்படிச் சம்பவம்

யாழ்ப்பாணம், பெப். 22

சபையின் கூட்ட அறிக்கை தொடர்பில் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் சரமாரியாகக் கேள்விகளை எழுப்பினர். அத்துடன் சட்டவிரோத மதுபாவனை தொடர்பில், தவிசாளருடன் கருத்து முரண்பாடு எழுந்தது. இதனையடுத்து வேலணைப் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று ஒத்திவைக்கப்பட்டது.

ஈ.பி.டி.பியின் ஆளுகைக்கு உட்பட்ட வேலணைப் பிரதேச சபையின் நேற்றைய அமர்வு தவிசாளர் ந.கருணாகரகுருமூர்த்தி தலைமையில் இடம்பெற்றது. கடந்த கூட்ட அறிக்கை சபைச் செயலரால் வாசிக்கப்பட்டது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உள்ளிட்ட எதிர்க்கட்சி உறுப்பினர்கள், கடந்த கூட்டத்தில் சபையில் தாம் பேசிய விடயங்கள் பல அறிக்கையில் இல்லை என்று குற்றம் சுமத்தினர்.

**24 மணித்தியாலம்போதும்**

இந்தச் சபை ஆளுமையற்ற சபையாக உள்ளது என்று ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் எஸ்.பிரகலாதன் குற்றம் சுமத்தினார். பற்றைகள் அகற்றப்பட வேண்டும் என்று நிறை வேற்றப்பட்ட தீர்மானம் இன்றுவரையில் நடைமுறைப்படுத்தப்படவில்லை. சபையின் உப அலுவலகம் அமைந்துள்ள அல்லைப்பிட்டியைச் சூழவே பற்றைகள் வளந்துள்ளன. இதுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை. சட்டவிரோத கடலட்டை பண்ணைகள் மீதான நடவடிக்கை, சாட்டிக் கடற்கரை அபிவிருத்தி போன்ற விடயங்கள் தொடர்பில் திரும்பத் திரும்பச் சொல்லிக் களைத்து விட்டோம்.

இன்னமும் ஒரு வேலையும் நடைபெறவில்லை. தவிசாளர் பதவியை எனக்குத் தந்தால் 24 மணித்தியாலங்களுக்குள் அத்தனையையும் நிறைவேற்றிக் காட்டுவேன் என்று சவால் விடுத்தார் பிரகலாதன்.

**ஊடக அறிக்கை**

ஒரு வேலைத் திட்டம் ஆரம்பிக்கப்படும்போதே அது செய்து முடிவடைந்ததுபோன்று தவிசாளர் ஊடகங்களுக்கு தகவல் கொடுக்கின்றார். நிதி ஒதுக்கப்படுவதுவேறு, வேலை நடைபெற்று முடிவதுவேறு.

நடக்காத வேலைகள் தொடர்பில் ஊடகங்களுக்கு செய்தி கொடுக்க வேண்டாம் என்று எதிர்க்கட்சி உறுப்பினர்கள் ஆதாரங்களுடன் கருத்துக்களை முன்வைத்தார்கள்.

**மின்குமிழையாவது பொருத்துங்கள்**

வட்டாரத்துக்கு மின்குமிழ்கள் பொருத்தப்பட்டு வருகின்றன. அது கூட முழுமையாகச் செய்து முடிக்கப்படவில்லை என்று கூட்டமைப்பு உறுப்பினர் அசோக்குமார் தெரிவித்தார்.

வீதி போட நிதி இல்லை என்கிறார்கள். சபையால் செய்யப்படும் வீதி விளக்குப் பொருத்தும் வேலையையாவது ஒழுங்காக, முழுமையாகச் செய்யுங்கள் என்று அவர் குறிப்பிட்டார்.

**வேலையைச் செய்யுங்கள்**

தவிசாளருக்கு 50 ஆயிரம் ரூபா பணம் வரையில் பயன்படுத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டது. அவர் எந்த வேலையும் அதனைப் பயன்படுத்திச் செய்யவில்லை என்று கூட்டமைப்பு உறுப்பினர் க.நாவலன் குற்றம் சுமத்தினார்.

**முரண்பாடு**

சட்டவிரோதச் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது தொடர்பில் சபையின் கடந்த அமர்வில் எடுக்கப்பட்ட தீர்மானங்களுக்கு என்ன நடந்தது என்று கூட்டமைப்பு உறுப்பினர்கள் தவிசாளரிடம் கேள்விகளை எழுப்பினார்கள். உரிய அதிகாரிகளுக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகத் தவிசாளர் குறிப்பிட்டார்.

சட்டவிரோத சாராயம் தொடர்பிலும் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்படவேண்டும் என்று கூட்டமைப்பு உறுப்பினர் நாவலன் தெரிவித்தார்.

எல்லாவிடயமும்என்கண்ணுக்கு முன்பாக நடக்காது என்று தவிசாளர் பதிலளிக்க, நீங்கள் சாராயம் குடிக்கின்றீர்கள்தானே, உங்களுக்கு எங்கே விற்பனை செய்யப்படுகின்றது என்று தெரியாதா? என்று கூட்டமைப்பு உறுப்பினர் கேள்வி எழுப்ப, ஆளும் கட்சி ஈ.பி.டி.பி. உறுப்பினர்கள் எதிர்த்துக் கோசம் எழுப்பினர்.

சபையில் கடும் வாக்குவாதம் ஏற்பட்டது. இதனையடுத்து சபை ஒத்திவைக்கப்பட்டது. (ஒ.5.7)



## போதைப்பாவனைக்கு எதிராக மல்லாவியில் நேற்று ஊர்வலம்

முல்லைத்தீவு,பெப்.22

முல்லைத்தீவு துணுக்காய்ப் பிரதேசத்துக்கு உட்பட்ட மல்லாவி பகுதியில் அரச தலைவரின் கிராம சக்தி மக்கள் செயற் திட்டத்தின் கீழ் போதைப் பொருள் ஒழிப்பு கவனவீர்ப்பு ஊர்வலம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

நேற்றுக் காலை மல்லாவி துணுக்காய் முதன்மை வீதியில் ஒன்றுகூடிய கிராம மக்கள் முன்மை வீதி ஊடாக மங்கை குடியிருப்பு நோக்கி போதை பொருள் பாவனைக்கு எதிரான வசனங்கள் தாங்கிய பதாதைகளை கையில் ஏந்தியவாறு இந்த கவன வீர்ப்பு ஊர்வலத்தை முன்னெடுத்துள்ளார்கள்.

மல்லாவி வடக்கு மங்கை குடியிருப்பு கிராம அலுவலகம் வரை சென்றடைந்த ஊர்வலத்தில் மல்லாவி கிராம அலுவலகர் திருமதி.றாஜினி, துணுக்காய் பிரதேச அபிவிருத்தி அலுவலர் ந.தாரகை, மல்லாவி பிராந்திய சுகாதார பணிமனை அதிகாரி அரவிந்தன் ஆகியோர் கலந்து கொண்டனர். போதைப்பொருள் பாவனை தொடர்பிலான விழிப்புணர்வு கருத்துக்களையும் வழங்கியுள்ளார்கள். (க-ரி3)

## கோண்டாவில் இளையோரால் போதை ஒழிப்பு செயற்றிட்டம்

யாழ்ப்பாணம்,பெப்.22

போதைப் பாவனையை கட்டுப்படுத்தும் நோக்கிலும்,இளையோர் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கிலும் கோண்டாவில் மேற்கு பகுதி இளைஞர்கள் நேற்று விளிப்புணர்வு துண்டறிக்கைகளை வழங்கி பரப்புரையில் ஈடுபட்டனர். போதைப் பாவனையால் ஏற்படும் தீமைகளை விபரிக்கும்வகையில் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய துண்டறிக்கைகளை மக்களுக்கு வழங்கியதுடன், தெளிவுபடுத்தல்களையும் செய்தனர்.

கிராம எழுச்சித்திட்ட குழுவால் ஒழுங்கமைக்கப்பட்ட நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலக அபிவிருத்தி அலுவலர் கலந்துகொண்டார். கிராமத்து இளையோரும் கருத்தாடல்களில் கலந்துகொண்டனர். (க)




## போதை ஒழிப்பு ஊர்வலம் கைதடியில் முன்னெடுப்பு

சாவகச்சேரி, பெப். 22

அரச தலைவரின் எண்ணக்கருவில் உருவான வறுமையற்ற இலங்கையை உருவாக்குவதற்காக நாட்டில் 4 ஆயிரம் கிராம அலுவலர் பிரிவுகளில் உருவாக்கப்பட்டிருக்கும் கிராம சக்தி வேலைத் திட்ட கிராம சக்தி வாரத்தின் நான்காம் நாளான நேற்று போதை ஒழிப்பு செயற்றிட்டத்தின் கீழ் போதை ஒழிப்புத்தொடர்பான விழிப்புணர்வு பேரணி இடம்பெற்றது.

கைதடி பிரதேசத்தில் திட்டத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட கைதடி தெற்கு, நாவற்குழி, தனன்களப்பு, மறவன்புலவு, ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் போதை ஒழிப்பு தொடர்பான பதாகைகளைத் தாங்கியவண்ணம் விழிப்புணர்வுப் பேரணியை நாவற்குளி சந்தியில் ஆரம்பித்து ஏ 9 முதன்மைச் சாலை வழியாக கைதடிச் சந்தி வரை நடத்தினர். இந்த நிகழ்வில் பிரிவுகளின் கிராம மட்ட அலுவலர்கள், பிரதேச செயலக உதவித் திட்டப் பணிப்பாளர். பொது சுகாதாரப் பரிசோதகர் உட்பட பெருமளவான மக்கள் கலந்து கொண்டனர். இந்தத் திட்டத்தில் பிரதேசத்தில் தெரிவு செய்யப்பட்ட 12 கிராம அலுவலர் பிரிவுகளில் நேற்று போதை ஒழிப்பு தொடர்பான விழிப்புணர்வு நிகழ்வுகள் இடம்பெற்றன. எழுதுமட்டுவாழ் பிரிவில் 'போதையை ஒழிப்போம்' என்னும் தெரு நாடகமும் இடம்பெற்றுள்ளது. (க-9)



## போதை ஒழிப்பு ஊர்வலம்

அரசதலைவரால் செயற்படுத்தப்படும் போதைப்பொருள் ஒழிப்பு செயற்றிட்டத்தின் கீழ் விழிப்புணர்வு ஊர்வலம் ஒன்று அளவெட்டியில் நடத்தப்பட்டது. இந்த ஊர்வலம் அருணோதயக் கல்லூரி வீதி ஊடாக நடைபெற்றது. அளவெட்டிமேற்கு, அளவெட்டிதெற்கு கிராம அலுவலர்கள் பிரிவு, தெல்லிப்பழை சுகாதாரபிரிவு, அளவெட்டி, அரு ணோதயக்கல்லூரி ஆகியன இணைந்து இந்த ஊர்வ லத்தை ஏற்பாடு செய்திருந்தன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ-63)



## மணல் அகழ்ந்து ஏற்றிய சாரதிக்கு விளக்கமறியல்

கிளிநொச்சி, பெப். 22

அனுமதிப் பத்திரமின்றி மண் அகழ்ந்து ஏற்றிய சாரதியை விளக்கமறிய லில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிமன்று நேற்று உத்தரவிட்டது. மணல் அகழ்வுக்குப் பயன்படுத்திய ஜே.சி.பி வாகனம் மற்றும் டிப்பர் என்பன கைப்பற்றப்பட்டுள்ளன.

மருதங்கேணி பகுதியில் மணல் அகழ்வு இடம்பெறுவதாக சிறப்பு அதிரடிப்படையினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய நேற்று முன்தினம் அங்கு சென்று இரண்டு வாகனங்களை மடக்கினர். அவற்றை ஒரே சாரதி செலுத்தினார் என்று அவரைக் கைது செய்து பளை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைத்தனர். (து-6)

## விதி மீறிய சாரதிக்கு ரூ.15,500 தண்டம்

வவுனியா, பெப். 22

விதிமீறி உந்துருளி செலுத்திய சாரதிக்கு 15ஆயிரத்து 500ரூபா தண்டம் விதித்தது நீதிமன்று.

மதுபோதை, வாகன வரி அனுமதிப் பத்திரம், சாரதி அனுமதிப்பத்திரம் இன்றி மோட்டார் சைக்கிள் செலுத்திய நபர் ஒருவருக்கு எதிராகப் பொலிஸார் வவுனியா நீதிவான் மன்றில் நேற்று வழக்குத் தொடர்ந்தனர். அவர் குற்றத்தை ஏற்றுக்கொண்டார். அதனையடுத்து தண்டம் விதிக்கப்பட்டது. (து)

## பாதயாத்திரை

யாழ்ப்பாணம்,பெப்.22

சிவராத்திரி தினத்தை முன்னிட்டு இலங்கை உலக சைவத் திருச்சபையால் பாதயாத்திரை ஒன்று மேற்கொள்ளப்படவுள்ளது. நாளை சனிக்கிழமை காலை செல்வச் சந்நிதி ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி மாலை நல்லூர் ஆலயத்தை வந்தடையும். தொடரிந்து மறுநாள் யாத்திரை ஆரம்பமாகி எதிர்வரும் 4 ஆம் திகதி திருக்கேதீச்சரம் ஆலயத்தை சென்றடையும்.

எனவே அடியார்கள் யாத்திரையில் இணைந்துகொள்ளமுடியும் என்று சைவசமயத் தலைவர் சிவசிறி கதிர் குமாரசாமி சுமூகலிங்கம் அறிவித்துள்ளார். (ஐ)

## நீதி நூற் தொகுப்புகள் வெளியீட்டு நிகழ்வு

கொழும்பு,பெப்.22

இந்துசமய அறநெறிக் கல்வி புதிய பாடத்திட்டத்துக்கு அமைவாக வெளிவரும் நீதிநூற் தொகுப்புகள் வெளியீட்டு நிகழ்வு கொழும்பு பம்பலப்பிட்டி புதிய கதிரேசன் மண்டபத்தில் நாளை சனிக்கிழமை முற்பகல் 9 மணிக்கு நடைபெறும்.

இந்துப் பண்பாட்டு நிதியத்தின் தலைவரும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வேந்தருமான பேராசிரியர் சி.பத்மநாதன் தலைமையில் நடைபெறும் நிகழ்வில் முதன்மை விருந்தினராக தேசிய ஒருமைப்பாடு, அரச கரும மொழிகள், சமூக மேம்பாட்டு மற்றும் இந்துசமய அலுவல்கள் அமைச்சர் மனோ கணேசன், சிறப்பு விருந்தினராக அகில இலங்கைக் கம்பன் கழக அமைப்பாளர் கம்பவாரிதி இ. ஜெயராஜ் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (ஐ)

# அதி வேகமாகப் பயணிக்கும் பேருந்துகளின் அனுமதி ரத்து

## போக்குவரத்து ஆணைக்குழு அதிரடி

கொழும்பு, பெப். 22


வேகக் கட்டுப்பாட்டை மீறிப் பயணிக்கும் பேருந்துகளின் அனுமதிப் பத்திரத்தை நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பேருந்துகள் அதிக வேகமாகப் பயணிப்பதால் ஏற்படும் விபத்துக்களைக் குறைப்பதற்காக இந்த நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவின் தலைவர் ஜனக மல்லிமாரச்சி தெரிவித்தார்.

வவுனியாவிலிருந்து சில நாள்களுக்கு முன்னர் கொழும்பு நோக்கிப் பயணித்த பேருந்து ஒன்று வீதியை விட்டு விலகி மின் மாற்றி மீது மோதி விபத்துக்குள்ளாகியது. பேருந்து அதிக வேகமாகப் பயணித்தமையே விபத்துக்குக் காரணம் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

அதன்படி, அதிக வேகத்துடன்பயணிக்கும்பேருந்துகள் தொடர்பிலான முறைப்பாடுகளை 1955 என்ற இலக்கத்துக்குத் தொடர்புகொண்டு முறையிட முடியும் என்று தேசிய போக்குவரத்து ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பேருந்துகள் வேகக் கட்டுப்பாட்டை இழப்பது பேருந்து உரிமையாளர்களுக்கு மட்டும் இழப்பை ஏற்படுத்துவதல்ல, அவற்றில் நம்பிப் பயணிக்கும்பயணிகளின்உயிரும் அதில் உலை வைக்கப்படுகிறது. பயணிகள் என்ற வகையில் சாதாரண பொது மக்கள், அரச அலுவலர்கள், உயரதிகாரிகள் குழந்தைகள் என்று பலரும் உள்ளடங்குவர். அதிவேக விபத்துகளால் எத்தனையோ உயிர்கள் காவு கொள்ளப்பட்டுள்ளன. இன்னும் பலர் படுகாயமடைந்தும் அங்கவீனர்களாகியுள்ளனர். பெரும் சொத்திழப்பு ஏற்படுத்தப்படுகிறது. இந்த நிலையில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுமேற்கண்டநடவடிக்கை எடுத்துள்ளது. (கு)




# ஒட்டுக் குழு அடாவடிகளையும் விசாரிக்க வேண்டியது அவசியம்

## மாகாண முன்னாள் அமைச்சர் வலியுறுத்து

வவுனியா, பெப். 22

இராணுவம்மாத்திரமல்லாது அவர்களோடு இணைந்து துணைக் குழுக்கள் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் அனைத்தும் விசாரிக்கப்படவேண்டும் என்று வடக்கு மாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

கிளிநொச்சியில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க கூறிய, கருத்துத் தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேட்டபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

கடந்தவாரம்கிளிநொச்சிக்குப் பயணம்மேற்கொண்ட விக்கிரமசிங்க "மறப்போம் மன்னிப்போம்" என்று ஒரு வார்த்தை கூறியிருந்தார். இது அரசியல் மயப்படுத்தப்பட்ட வசனமாக வடக்கிலும், தெற்கிலும் பரிணமித்துள்ளதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

இறுதிப் போரில் மனித உரிமைமீறல்கள் இடம்பெற்றுள்ளன என்று ஐக்கிய நாடுகள் சபையும் வேறு அமைப்புக்களும் ஆதாரபூர்வமாக சொல்கின்றன. ஐ.நா.சபையில் இரு தீர்மானங்கள் கூட நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அதற்கு இலங்கை அரசு இணை அனுசரணை வழங்கியிருந்தது.

### பொறிமுறை வேண்டும்

இறுதிப்போரில் நடைபெற்ற மனித உரிமை மீறல்களை மேற்கொண்டவர்கள் யார், காணாமல்போகச் செய்யப்பட்டவர்களுக்கு என்ன நடந்தது, அதற்குப் பொறுப்புக்கூறுவது யார், போன்ற பல கேள்விகள் இன்று எழுகின்றன. இந்தக் கேள்விகளுக்கு விடை காணப்பட வேண்டும்.

அதற்கு விசாரணை நடத்தப்பட்டு, அந்த விசாரணையில் அதனைக் கண்டுபிடிப்பதுடன், மீள்நிகழாமைக்கான அடிப்படையில் அதற்கான பொறிமுறை உருவாக்கப்படவேண்டும். இழப்புக்களைச் சந்தித்தவர்களுக்கான பரிகாரங்கள் தொடர்பாக ஆராயவேண்டும். இவற்றை ஆராய்ந்த பின்னர் அவர்களைத் தண்டிப்பதா அல்லது மன்னிப்பதா என்பது தொடர்பாக நாங்கள் சிந்திக்கலாம்.

வடக்கு, கிழக்கில் போர் நடைபெற்றபோது இராணுவத்தினர் மாத்திரமல்லாது அவர்களோடு இணைந்து இயங்கிய துணைக்குழுக்களும், ஆயுதக்குழுக்களும் காணாமல் ஆக்குதல், கொலை, கொள்ளைச் சம்பவங்களில் தொடர்புபட்டிருக்கிறார்கள். இராணுவத்தினரையும் விசாரணை செய்து அவர்களோடு இணைந்து துணைக் குழுக்கள் மேற்கொண்ட மனித உரிமை மீறல்கள் தொடர்பாகவும் விசாரிக்கப்பட வேண்டும். அதற்கு யார் பொறுப்பு என்பது உறுதிசெய்யப்பட்ட பின்னர் அவர்களைத் தண்டிப்பதா, மன்னிப்பதா என்ற விடயத்தை ஆராய முடியும். தலைமைஅமைச்சரின் கருத்துக்குவடக்குகிழக்கிலும், தென்பகுதியிலும் பல அரசியல் தலைவர்கள் மிக உணர்ச்சிவசமான கருத்துக்களைச் சொல்லிவருகின்றார்கள். எமது தமிழ் அரசியல் வாதிகள் சிலர்கூட அந்தக் கூற்றை மன்னிக்க முடியாது என்று கூறிவருகின்றனர்.

விக்கிரமசிங்க கூறியவிடயம் இந்தச் சந்தர்ப்பத்தில் கூறப்படவேண்டியது அல்ல - என்றார். (கு-110)

### கொக்கெய்ன் சர்ச்சை ரஞ்சனுக்கு அழைப்பு

கொழும்பு, பெப். 22

அமைச்சர்கள் உட்பட அரசியல்வாதிகள் கொக்கெய்ன் பயன்படுத்துகின்றனர் என்று இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க கூறிய விடயம் தொடர்பில் விளக்கமளிக்க, அமைச்சர் கிரியெல்ல தலைமையிலானகுழுவில் முன்னிலையாகவேண்டும் என்று அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இன்று வெள்ளிக்கிழமை குறித்த குழுவில் முன்னிலையாகுமாறு தனக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது என்று ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு இராஜாங்க அமைச்சர் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் பயன்படுத்தும் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர் என்று இராஜாங்க அமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க தெரிவித்திருந்தமை பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியிருந்தது. (கு)

> கடந்த ஜனவரி 29 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் குறித்த ஆணைக்குழுவுக்கு 101 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. குறித்த முறைப்பாடுகளைப் பரிசீலனைக்குட்படுத்தும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

## அரச நிறுவன முறைகேடுகள் பற்றிய

# ஆணைக்குழுவின் விசாரணைக்கு சிறப்புப் பொலிஸ் குழு அமைப்பு

கொழும்பு, பெப். 22

கடந்த 4 வருடங்களில் அரச நிறுவனங்களில் இடம்பெற்ற ஊழல் முறைகேடுகள் தொடர்பில் விசாரிக்க நியமிக்கப்பட்ட அரச தலைவர் விசாரணை ஆணைக்குழுவின் ஆரம்பக்கட்ட விசாரணைக்காக சிறப்புப் பொலிஸ் குழுவொன்றை நியமிக்க வேண்டும் என்று பொலிஸ்மா அதிபருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸ் திணைக்களம் மற்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் சிறப்புத் திறமைகளுடன் கூடிய அதிகாரிகள் குழுவொன்றை நியமிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக, குறித்த ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

குறித்த குழு உதவி பொலிஸ் அத்தியட்சகர் ஒருவரின் கீழ் நியமிக்கப்படவுள்ளது. கடந்த ஜனவரி 29 ஆம் திகதி முதல் இதுவரையான காலப்பகுதியில் குறித்த ஆணைக்குழுவுக்கு 101 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளன. குறித்த முறைப்பாடுகளைப் பரிசீலனைக்குட்படுத்தும் நடவடிக்கை இடம்பெற்று வருகின்றது.

இவ்வாறு கிடைக்கப்பெற்றுள்ள முறைப்பாடுகளில் அதிகமானவை, ஆணைக்குழுவின் செயற்பாடுகளுக்குப் பொருத்தமற்றவை என அதன் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

2015 ஜனவரி மாதம் 14 ஆம் திகதி தொடக்கம் 2018 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையான காலப்பகுதியில் அரசியல்வாதிகள் மற்றும் அரச அதிகாரிகளுக்கு எதிராக முன்வைக்கப்பட்டுள்ள ஊழல் முறைகேடுகள், நம்பிக்கையைச் சீர்குலைத்தமை, சொத்துக்களை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியமை, ஏமாற்றியமை, அதிகாரம், அரச சொத்துக்கள் மற்றும் சலுகைகளை முறையற்ற விதத்தில் பயன்படுத்தியமை, அரச சொத்துக்கள் மற்றும் வருமானங்களுக்குப் பெரும் சேதம் விளைவித்தமை தொடர்பிலான உண்மைத்தன்மையைக் கண்டறிவதே ஆணைக்குழுவின் முக்கிய நடவடிக்கை.

இது தொடர்பில் எழுத்துமூலமான முறைப்பாடுகள் அல்லது தகவல்களை சிங்களம், தமிழ் அல்லது ஆங்கில மொழிகளிலும், செயலர், அரச நிறுவனங்களில் இடம்பெற்ற ஊழல் முறைகேடுகளை ஆராயும் அரசதலைவர் ஆணைக்குழு, அறை எண் 210, ப்ளொக் 02, பண்டாரநாயக்க ஞாபகார்த்த மாநாட்டு மண்டபம், பௌத்தாலோக்க மாவத்தை, கொழும்பு - 7 என்ற விலாசத்துக்கு அனுப்பமுடியும். 0112 - 66 53 82 என்ற தொலைபேசி இலக்கத்துக்குத் தகவல்கள் மற்றும் முறைப்பாடுகளை வழங்க முடியும். முறைப்பாடுகளைப் பெற்றுக்கொள்ளும் நடவடிக்கை எதிர்வரும் 7 ஆம் திகதியுடன் நிறைவடைகின்றது. (கு)

# கொக்கெய்ன் குற்றச்சாட்டுள்ள 24 எம்.பிக்களுக்கும் பரிசோதனை!

## மகிந்த நாடாளுமன்றில் வலியுறுத்து

கொழும்பு, பெப். 22

கொக்கெய்ன் பாவித்தனர் என்றுகுற்றஞ்சாட்டப்பட்டுள்ள 24 நாடாளுமன்ற உறுப்பினர்களையும் டி.என்.ஏ பரிசோதனைக்குட்படுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்சநாடாளுமன்றில்நேற்று முன்தினம் கோரிக்கை விடுத்தார்.

கொக்கெய்ன் விவகாரம் தொடர்பில் அங்கு நேற்று முன்தினம் சர்ச்சை இடம்பெற்றது. அதன்போது கருத்து வெளியிட்ட அவர், சுட்டிக்காட்டப்படும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகலரையும் டி.என்.ஏ பரிசோதனைக்கு உட்படுத்த அரசு உத்தரவிடவேண்டும். ஏனையவர்களை அந்தப் பரிசோதனைக்கு உட்படுத்தத் தேவையில்லை - என்றார்.

அங்கு உரையாற்றிய செஹான் சேமசிங்க, நாடாளுமன்ற உறுப்பினர்களை டி.என்.ஏ விசாரணைக்குட்படுத்தி கொக்கேய்ன் பயன்படுத்துவோரை அம்பலப்படுத்த வேண்டும். நாடாளுமன்ற உறுப்பினர்களின் சுயமதிப்பை பாதுகாக்க இந்த விசாரணை அவசியம். இந்தப் பிரச்சினையை துரிதமாகத் தீர்க்க வேண்டும். இது தொடர்பில் ஐ.தே.க விசாரணை நடத்த குழு நியமித்துள்ளது. ஆனால் முன்வரிசை அமைச்சர்கள் நால்வர் கூட கொக்கேய்ன் பயன் படுத்துகின்றனர் என்று ரஞ்சன் ராமநாயக்க கூறியுள்ளார். முன்வரிசையில் இருப்பவர்களை விசாரணைக் குழுவுக்கு நியமிக்கக் கூடாது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

தான் முன்வைத்த குற்றச்சாட்டுகள் உண்மை என்று ராமநாயக்க மீண்டும் கூறியுள்ளார். அது பற்றி அமைச்சர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்கள் சர்ச்சை எழுப்பியதால் ராமநாயக்கவின் கருத்துத் தொடர்பில் ஆராயக்குழு ஒன்றை நேற்று முன்தினம் தலைமை அமைச்சர் நியமித்தார். (கு)

## ஐ.நாவில் இலங்கைக்கு மீண்டும் கால அவகாசம் வழங்கக்கூடாது

### வடக்கு முன்னாள் முதலமைச்சர் வலியுறுத்து

யாழ்ப்பாணம், பெப்.22

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு இலங்கைக்கு மேலும் கால அவகாசம் வழங்கக் கூடாது. இதனை உள்நாட்டிலும், பன்னாடுகளிலும் வாழும் தமிழ் மக்கள் பன்னாடுகளுக்கும், மனித உரிமை அமைப்புக்களுக்கும் ஏகோபித்த குரலில் எடுத்துக் கூற வேண்டும். எதிர்வரும் 25ஆம் திகதி காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் நடத்தும் போராட்டத்தில் பெரும் எண்ணிக்கையான மக்கள் கலந்துகொள்ள வேண்டும்.

இவ்வாறு தமிழ் மக்கள் கூட்டணியின் செயலர் நாயகமும், முன்னாள் முதலமைச்சருமான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள செய்திக் குறிப்பிலேயே இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அதில் உள்ளதாவது:

வடக்கு கிழக்கு மாகாணங்களின் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் சங்கங்கள் ஒன்றிணைந்து நடத்தும் இந்த கவனவீர்ப்பு போராட்டத்தில் பெரும் எண்ணிக்கையில் பொதுமக்கள் கலந்துகொண்டு இலங்கைக்கு மேலதிக கால அவகாசம் வழங்கக்கூடாது என்று ஏகோபித்த குரலில் ஒலிக்கவேண்டும்.

பன்னாட்டுச் சட்டம் மற்றும் கோட்பாடுகளின் அடிப்படையில் மாற்று வழிமுறைகளை ஐ. நாசபை இலங்கை விடயத்தில் இனிமேல் கையாள வேண்டும் என்று வலியுறுத்தவேண்டும்.

ஐ நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்தை நிறைவேற்றுவதற்கு அரசு தவறியுள்ள நிலையிலும் தொடர்ந்தும் வடக்கு, கிழக்கில் மனித உரிமை மீறல்கள் நடைபெற்றுவரும் நிலையிலும் அவற்றை கண்காணிப்பதற்கு ஐ. நா. மனித உரிமைகள் சபை கட்டாயமாக அலுவலகங்களை திறக்கவேண்டும். புலம்பெயர் தமிழ் மக்களும் தம்மால் முடிந்தளவுக்கு பன்னாட்டு அரசியல் மற்றும் ராஜதந்திர மட்டங்களில் இவற்றை எடுத்துரைக்கவேண்டும்- என்றுள்ளது. (எ)

## தொடருந்துகளில் பெண்களுக்கென தனித்துவமான தொடருந்துப் பெட்டி

### மகளிர் தினமன்று நடவடிக்கை என்கிறார் போக்குவரத்து அமைச்சர்

கொழும்பு, பெப். 22

தொடருந்துப் பயணங்களின்போது பெண்கள் எதிர்கொள்ளும் பாலியல் துன்புறுத்தல்களைத் தவிர்ப்பதற்காக, தனித்துவமான தொடருந்துப் பெட்டிகளை அறிமுகம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் முதற்கட்ட நடவடிக்கை மகளிர் தினமான எதிர்வரும் மார்ச் மாதம் 8ஆம் திகதி இடம்பெறும் என்று போக்குவரத்து அமைச்சர் அர்ஜுன ரணதுங்க தெரிவித்தார். வெயாங்கொடை தொடருந்து நிலையத்தை மேற்பார்வையிட்ட அமைச்சர் நேற்று முன்தினம் சென்றிருந்தார். அங்கு ஊடகங்களிடம் மேலும் தெரிவித்ததாவது:

பெண்களுக்கென தனித்துவமான தொடருந்துப் பெட்டிகளை அறிமுகம் செய்யும் வேலைத்திட்டம், முதற்கட்டமாகப் பெரு நகரங்களை நோக்கிச் செல்லும். 5 தொடருந்துகளில் மேற்கொள்ளப்படும். வேலை நேரங்களை மையப்படுத்தி, இந்தவேலைத் திட்டம் முன்னெடுக்கப்படும்.

பெண்களின் பாதுகாப்புத் தொடர்பில் அதிக அக்கறை செலுத்த வேண்டியுள்ளது. இதனால் தொடருந்தில் பயணிக்கும் பெண்கள் பாதுகாப்பாகச் சௌகரியமாகச் செல்லமுடியும். தொடருந்து நிலையங்களின் வசதிகளை அதிகரிக்கவும் புதிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

பன்னாட்டுப் பயணிகளுக்கு அவசியம் தேவையான அதிசிறந்த வசதிகள், அனைத்து தொடருந்து நிலையங்களிலும் பெற்றுக் கொடுக்கப்படும்.

இதுதவிர, தொடருந்து நிலையங்களின் முகாமைத்துவத்தைத் தரமுயர்த்தும் நோக்கில், அதன் சுத்திகரிப்பில் தனியார் அமைப்புக்களை ஈடுபடுத்தவும் தீர்மானித்துள்ளோம். இதற்காக தொடருந்துத் திணைக்களம் தனியார் மயப்படுத்தப்பட்டிருப்பதாக, தவறாக அர்த்தம் கொள்ளக்கூடாது -என்றார். (த)

# படைகளை தண்டிப்பதால் நல்லிணக்கம் ஏற்படாதாம்!

### ஜெனரல் ரத்நாயக்க இப்படிக் கூறுகிறார்



கொழும்பு, பெப். 22

இலங்கைப் படையினரைத் தண்டிப்பதன் மூலமாக நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியாது, அவ்வாறு செய்வதன் மூலமாக நல்லிணக்கத்தை ஏற்படுத்த முயற்சித்தால், அது வெற்றி பெறாது என்று இலங்கையின் முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் தயா ரத்நாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடத்திய செய்தியாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

போரின் போது, ஆயுதப்படையினர் செய்த தியாகங்கள் புறக்கணிக்கப்படுகின்றமை வருத்தமளிக்கிறது. சட்டத்தை மீறியவர்கள் மீது உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். போரின்போது, பொதுமக்களை வேண்டுமென்றே இலக்கு வைக்க வேண்டும் என்ற நோக்கம் அரசுக்கு இருக்கவில்லை.

ஜெனிவாத் தீர்மானத்துக்குக் காரணமான பன்னாட்டு சக்திகளைத் திருப்திப்படுத்துவதற்காக இராணுவத்தை பலிக்கடா ஆக்கக் கூடாது. அரசின் மூலோபாயம், ஆயுதப்படையினரைப் பலவீனப்படுத்தும் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடும்.

பல்வேறு குற்றச்சாட்டுகளின் பேரில், இதுவரை 8 இராணுவ அதிகாரிகளும், 25 படையினரும், 7 கடற்படை அதிகாரிகளும், 10 படையினரும், கைது செய்யப்பட்டுள்ளனர். இவர்களில் 7 படையினர் இன்னமும் சிறைகளில் உள்ளனர். குற்றச்சாட்டுகளில் கைது செய்யப்பட்ட படையினர் நீண்ட காலத்துக்கு தடுத்து வைக்கப்படக் கூடாது. அவர்கள் மீதான விசாரணைகளை இழுத்தடிக்காமல், துரிதமாக மேற்கொள்ள வேண்டும்.

படையினரைத் தண்டிக்கவோ, சிறையில் அடைக்கவோ கூடாது என்று கேட்பது எமது நோக்கம் அல்ல. ஆனால் படையினரின் மதிப்பு பாதுகாக்கப்பட வேண்டும் - என்றார். (த)



அமைச்சர்களான மனோ கணேசன், ரவி கருணாநாயக்க மற்றும் மேல் மாகாண ஆளுநர் அசாத் சாலி ஆகியோர் வெலிக்கடைச் சிறைச்சாலைக்குச் நேற்றுச் சென்றிருந்தனர். நீதிமன்ற அவமதிப்புக் குற்றத்தில் சிறைத் தண்டனை அனுபவிக்கும் ஞானசார தேரர் மற்றும் கொலைக் குற்றத்தில் தண்டனை அனுபவித்து வரும் துமிந்த சில்வா, பிரபலங்கள் கொலைச்சதி முயற்சி வழங்கின் சந்தேக நபரான பிரதிப் பொலிஸ்மா அதிபர் நாலக்க சில்வா ஆகியோரை அவர்கள் சந்தித்துப் பேசினர் என்று தெரிவிக்கப்பட்டது. (த)

## அனைத்துச் சமூகங்களும் ஒன்றித்து வாழ வேண்டும்

### முன்னாள் கிரிக்கெட் வீரர் குமார் சங்ககார தெரிவிப்பு

கொழும்பு, பெப். 22

அனைத்துச் சமூகத்தினரும் ஒன்றிணைந்து வாழ்வதன் மூலமாகவே சிறந்த பலன் கிடைக்கும் என்று முன்னாள் கிரிக்கெட் வீரர் குமார் சங்கக்கார தெரிவித்துள்ளார்.

கொழும்பிலுள்ள பன்னாட்டுப் பாடசாலை ஒன்றில் நடந்த் நிகழ்வில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டில், சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்கள் வாழ்கின்றனர். நாம் அனைவரும் ஏதோ ஒரு வகையில் இணைக்கப்பட்டுள்ளோம். எவராலும் தனித்து வாழ முடியாது. அனைவருக்கும், கனவு, இலட்சியம் உள்ளன. எனவே அனைவரும் ஒன்றிணைந்து வாழ வேண்டும்.

நாட்டில் இருக்கும் மக்களில் ஒரு பகுதியினர் மட்டுமே குரல் கொடுப்பதால் எந்தவித பலனும் கிடையாது. உதாரணமாக கைதட்டும் ஓசையை எடுத்துக்கொண்டால் நான்கு விரல்களும் சேர்ந்தால் மட்டுமே ஓசை வரும் .

அதேபோல அனைத்துச் சமூகமும் ஒன்றிணைந்து வாழ்வதால்தான் சிறந்த பலன் கிடைக்கும். எனவே இந்த நிலைப்பாட்டை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்துச் செல்ல வேண்டும் - என்றார். (த)

## இந்திய திராட்சைகளுக்குத் தடை விதிக்கத் தீர்மானம்

கொழும்பு, பெப். 22

இந்தியாவிலிருந்து திராட்சை மற்றும் மாதுளம் பழங்களின் இறக்குமதியைத் தற்காலிகமாகத் தடை செய்வதற்கு இலங்கை அரசு முடிவு செய்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தியாவிலிருந்து பழங்களை இறக்குமதி செய்யும்போது, கடைப்பிடிக்க வேண்டிய தொற்றுநோய்த் தடுப்பு நடவடிக்கை தொடர்பான விதிமுறைகளைப் பூர்த்தி செய்யாத நிலையிலேயே, இந்தத் தடையை விதிக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்று தேசிய தாவர நோய்த்தடுப்பு சேவை தெரிவித்துள்ளது.

இந்தத் தடை கடந்த டிசெம்பர் 28ஆம் நாள் தொடக்கம் நடைமுறைக்கு வந்திருப்பதாக, தேசிய தாவர நோய்த் தடுப்பு சேவை மேலதிக பணிப்பாளர் விக்ரமஆராச்சி தெரிவித்தார்.

தடை தொடர்பாக கொழும்பில் உள்ள இந்தியத் தூதரகத்தின் ஊடாக, இந்திய அரசுக்கு விவசாய அமைச்சர் பி.ஹரிசன் தெரியப்படுத்தியுள்ளார்.

இந்த விவகாரம் தொடர்பாக, புதுடெல்லிக்கும், கொழும்புக்கும் இடையில் ஏற்கனவே பேச்சு நடத்தப்பட்டுள்ளன என்றும் விக்ரமஆராச்சி தெரிவித்தார். இந்தியாவில் 6 தொடக்கம் 8 வீதம் வரையான பழங்கள் மாத்திரமே இறக்குமதி செய்யப்படுகின்றன.

இந்தத் தடையால், வணிகக் கேள்வியில் பெரிய பாதிப்பு இருக்காது என்றும் அவர் கூறினார்.

அதேவேளை, சீனாவிலிருந்தே இலங்கையின் 40 வீதமான பழங்களை இறக்குமதி செய்வதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (த)

## கொக்கெய்ன் பயன்படுத்துவோரின் பெயர்ப்பட்டியல் கிடைக்கவில்லை

### சபாநாயகர் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 22

கொக்கெய்ன் போதைப்பொருள் பாவிப்பதாகக் கூறப்படும் அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் குறித்த பெயர்ப்பட்டியல் தனக்கு இன்னும் கிடைக்கவில்லை என்று சபாநாயகர் கருஜயசூரிய தெரிவித்தார்.

நாடாளுமன்றம் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு சபாநாயகர் தலைமையில் கூடியது. சபாநாயகர் அறிவிப்புவேளையிலேயே கருஜயசூரிய மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சிலர் போதைப்பொருள் பயன்படுத்துகின்றனர் என்று சபையில் நேற்று முன்தினம் கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. ரஞ்சன் ராமநாயக்க பெயர்ப்பட்டியலை வெளியிட்டார் என்றெல்லாம் கூறப்பட்டது.

இந்த நிலையில், "பெயர்ப்பட்டியல் வழங்கப்படவில்லை" என்று சபைக்குத் தலைமைவகித்த பிரதி சபாநாயகர் அறிவித்திருந்தார்.

அமைச்சர்கள் உட்பட அரசியல்வாதிகள் சிலர் கொக்கெய்ன் போதைப்பொருள் பயன்படுத்துகின்றனர் என்று ஆளுங்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரான ரஞ்சன் ராமநாயக்க அண்மையில் வெளியிட்ட கருத்து தெற்கு அரசியலில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

இதுதொடர்பில் உடனடியாக விசாரணை நடத்தப்படவேண்டும் என்றும், பெயர்ப்பட்டில் வெளியிடப்படவேண்டும் என்றும் ஆளும் மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் வலியுறுத்திவருகின்றனர். இந்தநிலையிலேயே பெயர்ப்பட்டியல் கையளிக்கப்படவில்லை என்று சபாநாயகர் நேற்றுத் தெரிவித்தார். (த)

# அரசுடன் இணைந்து கூட்டமைப்பு அபிவிருத்தியை செய்ய வேண்டும்

## அமைச்சர் சம்பிக்க அழைப்பு

கொழும்பு, பெப்.22

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசுடன் இணைந்து மக்களின் அபிவிருத்தியை முன்னெடுக்க வேண்டும் என்று அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க அழைப்பு விடுத்துள்ளார்.



யாழ்ப்பாணத்துக்கு நேற்று வந்த அமைச்சர் பாட்டலி சம்பிக்க ரணவக்க அபிவிருத்தித் திட்டங்களை ஆரம்பித்து வைத்தார். யாழ்ப்பாணம் புல்லுக்குளம் பகுதியில் தூர சேவை பஸ் தரிப்பிடக் கண்காணிப்பு நிலையத்துக்கான அடிக்கல்லை நட்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:

இங்குள்ள பிரதிநிதிகளை இணைத்துக் கொண்டு யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திகளை முன்னெடுக்கவுள்ளோம். குறிப்பாக நகரங்களை அபிவிருத்தி செய்யும் போது எமது நிதியைக் கொண்டு அபிவிருத்தி செய்வதை விட வெளிநாட்டு நிதியைப் பெற்று மூலாபாய நகரமாக அபிவிருத்தி செய்ய வேண்டிய தேவைகள் உள்ளன.

தற்போது இனங்கண்டுள்ள மூலோபாய அபிவிருத்தித் திட்டங்களில் யாழ்ப்பாணமும் இணைக்கப்பட்டுள்ளது. மூலோபாய நகர அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் யாழ்ப்பாண நகரமும் அபிவிருத்தி அடையும் என்று எதிர்பார்க்கின்றோம். எதிர்காலத்தில் ஏனைய நகரங்களையும் இணைத்துக் கொள்ளவுள்ளோம்.

அதேநேரம், இன்னுமொரு முக்கிய விடயத்தை குறிப்பிட வேண்டும். 1968 ஆம் ஆண்டில் நீலன் திருச்செல்வம் அரசியலில் நீரோட்டத்தில் இணைந்து அமைச்சராக இருந்து இந்தப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் நடவடிக்கையை முன்னெடுத்தார். அதற்குப் பிறகு பல அரசியல் கட்சிகள் இருந்தும் அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுப் பதற்கு அமைச்சர்கள் இருக்கவில்லை. ஆகவே, தான் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனிடம் ஒன்றைக் கூறி வைக்க விரும்புகின்றேன்.

இன்று அரசுடன் கைகோர்த்துக் கொண்டு இருப்பது போன்றே, எதிர்காலத்தில் அரசுடன் இணைந்துகொண்டு, இந்தப் பிரதேச மக்களின் அபிவிருத்திக்காக எங்களுடன் இணையுங்கள். - என்றார். (எ8,106,105)



இலங்கைக் கடற்படையின் வடக்குக் கட்டளைத் தளபதி றியர் அட்மிரல் எம். விக்ரமசிங்கவுக்கும், வடக்கு ஆளுநர் கலாநிதி சுரேன் ராகவனுக்குமிடையிலான சந்திப்புநேற்றுமுன் தினம் மாலை ஆளுநர் செயலகத்தில் இடம் பெற்றது. (க)

# வடக்கு வேலைத் திட்டங்கள் ஊழல்கள் இன்றி நடக்கட்டும்

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.22

வடக்கில் ஆரம்பிக்கப்படும் அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் ஜனநாயக ரீதியாகவும், ஊழல் அற்றதாகவும் அமைய வேண்டும் என வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் தெரிவித்தார்.

அமைச்சர் சம்பிக்க ரணவக்க நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவர் தூர சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துத் தரிப்பிடக் கட்டடத்துக்கான அடிக்கல்லை நட்டார். அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே வடக்கு ஆளுநர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

இரு வேறு கருத்துக்களைக் கொண்ட மக்கள் பிரதிநிதிகள் இருவர் ஒன்றாக உலங்கு வானூர்தியில் இன்று பயணித்துள்ளனர். இந்த இணைந்த பயணம் வெறும்னே அரசியலுக்காக மட்டும் அல்லது மக்கள் நலனுக்காகவும் அமைய வேண்டும். வேலைத்திட்டங்கள் ஆரம்பிக்கப்படும் போது ஜனநாயக ரீதியாக ஆரம்பிக்கப்பட வேண்டும். மக்கள் நலன் சார்ந்ததாக இருக்க வேண்டும். அது என்ன நோக்கத்துக்காக ஆரம்பிக்கப்பட்டதோ அதற்காகவே நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். இந்த திட்டங்கள் ஊழல் அற்றதாக நடைபெற வேண்டும். இவற்றைச் செய்ய நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் பங்களிப்பு அளப்பரியதாக இருக்கும் என நம்புகின்றேன் - என்றார்.

அதேவேளை, நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் சம்பிக்க ரணவக்க கூட்டமைப்பு அரசுடன் இணைந்து கொள்ள வேண்டும் என்று அழைப்பு விடுத்திருந்தார். நிகழ்வு மேடையில் இருந்த ஆளுநர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைப் பார்த்து அரசுடன் இணையத் தயாரா? என்று புன்னகையுடன் கேட்டார். அதன்பின்னர் இருவரும் பரஸ்பரம் உரையாடிக் கொண்டனர். (எ-8,106)

# ஒன்றுபட்டு வாழ விரும்பும் எம்மிடம் ஆட்சி அதிகாரம் வழங்க வேண்டும்

## சுமந்திரன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், பெப்.22

இந்த நாட்டில் நாம் ஒன்றாக வாழ விரும்புகின்றோம். எங்களின் கைகளில் ஆட்சி அதிகாரங்கள் கொடுக்கப்பட வேண்டும். அதற்கான பணியில் இந்த ஆட்சியில் ஓர் படியாவது எடுத்து வைக்க ஒத்துழைப்புத்தரவேண்டும். இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் தெரிவித்தார்.

அமைச்சர் சம்பிக்க ரணவக்க நேற்று யாழ்ப்பாணம் வந்திருந்தார். அவர் தூர சேவையில் ஈடுபடும் தனியார் பேருந்துத் தரிப்பிடக் கட்டடத்துக்கான அடிக்கல்லை நட்டார். அந்த நிகழ்வில் உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வடக்கில் செய்யப்படுகின்ற செயற்திட்டங்கள் ஜனநாயக ரீதியில் செய்யப்பட வேண்டும். அதில் ஊழல் இருக்கக் கூடாது என எனக்கு முன்னர் உரையாற்றிய வடக்கு மாகாண ஆளுநர் சுரேன் ராகவன் கூறியிருந்தார். நானும் அதனை வரவேற்கின்றேன். அப்படியான செயற்திட்டமாக இது அமையும். நாம் மக்கள் நலனை முன்னிறுத்தி செய்கின்ற ஓர் திட்டமாக இது அமையும். மக்கள் பிரதி நிதிகளை இணைத்து ஆராய்ந்தே இந்தத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன.




ஆளுநர் தான் அரசியல் வாதி இல்லை, அதனால் சில கருத்துக்களை கூற முடியும் எனக் கூறிப் பலமான அரசியல் கருத்துக்களைக் கூறிச் சென்றிருக்கின்றார். அவர் அடிக்கடி இப்படித்தான் செய்வார் போல தோன்றுகின்றது. தான் அரசியல் வாதி இல்லை எனக் கூறிக் கொண்டு அனைத்து அரசியல் கருத்துக்களையும் கூறிக் கொண்டிருக்க போகிறார் போல தெரிகின்றது. அவர் கூறியதில் ஒரு முக்கியமான விடயம் இருக்கின்றது. நானும் அமைச்சரும் கொழும்பில் இருந்து ஒரே உலங்குவானூர்தியில் ஒன்றாக பயணித்ததாக ஆளுநர் இங்கு கூறினார். ஆம் நாம் அவ்வாறு பயணித்த திசை யாழ்ப்பாணத்தை நோக்கியதாகவே இருந்தது. ஆகையால் நாம் பயணித்த திசையில் பிழைகள் கிடையாது. எமது மக்கள் நலன்கள் மேம்பட அபிவிருத்திகள் மட்டும் போதாது. ஆட்சி மாற்றத்தின் பின்னர் அபிவிருத்தி, அரசியல் உரித்து எனப் பயணிக்கின்றோம். சிறப்பாக எமது மக்களின் அரசியல் உரித்து சம்பந்தமாக பார்த்துப் பயணிக்க ஆரம்பித்து சென்று கொண்டிருக்கின்றோம். அது வெற்றிகரமாக அமைய வேண்டும். கலாசாரத்துக்கு முன்னுதாரணமாக உள்ள யாழ்ப்பாணத்தில் அமைச்சரிடம் ஓர் விண்ணப்பம் என்னவென்றால் நீங்கள் இன்னும் எம்முடன் உயிரோட்டமாக அதிகளவு பயணிக்க வேண்டும். இந்த பயணம் சரியான இடத்தில் முடிய வேண்டும். இந்த நாட்டில் நாம் ஒன்றாக வாழ விரும்பு கின்றோம். அப்படியாக வாழும் போது எங்களின் கைகளில் ஆட்சி அதிகார்ங்கள் கொடுக்கப்பட வேண்டும். இந்தப் பணியில் இந்த ஆட்சியில் ஓர் படியாவது எடுத்து வைக்க ஒத்துழைப்புத் தரவேண்டும்-என்றார். (எ-8,105)



# போதைப் பொருளோடு கைதானோருக்கு சமுதாயப் பணி உத்தரவு

சாவகச்சேரி, பெப். 22

கசிப்பு மற்றும் கஞ்சா போதைப் பொருள்களை வைத்திருந்த இருவரையும் சமூகப் பணியில் ஈடுபடுத்து மாறு சாவகச்சேரி நீதிமன்று நேற்று உத்தரவிட்டது.

கொடிகாமம் வெள்ளாம் போக்கட்டியைச் சேர்ந்தவர் கசிப்பு உடைமையில் வைத்திருந்தார் என்றும் கொடிகாமம் எருவன் பகுதியைச் சேர்ந்தவர் கஞ்சா வைத்திருந்தார் என்றும் இருவரும் தம்மீதான குற்றங்களை ஏற்றுக்கொண்டனர்.

கசிப்பு வைத்திருந்தவருக்கு 250 மணித்தியாலயமும் கஞ்சா வைத்திருந்தவருக்கு 300 மணித்தியாலயங்கள் சமூகப் பணியிலும் ஈடுபடுத்த நீதிமன்று உத்தரவிட்டது.

இதேவேளை, இந்த வருடத்தில் நேற்று வரை 25 பேர் நீதிமன்றால் சமூகப் பணியில் ஈடுபடுமாறு தண்டனை விதிக்கப்பட்டுள்ளனர். (த-9)

# 1000க்கு மேற்பட்ட வீடுகளில் நுளம்பு ஒழிப்புச் சோதனை

யாழ்ப்பாணம், பெப்.22

யாழ்ப்பாணம் மாநகரப் பிரதேசத்தில் இடம்பெற்ற சிறப்பு நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின் போது ஆயிரத்து 220 வீடுகள் சோதனையிடப்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது.



கடந்த 14, 15 ஆம் திகதிகளில் சிறப்பு நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இடம்பெற்றுள்ளன. 14 ஆம் திகதி யாழ்ப்பாண நகரில் ஜே 74, 78 ஆகிய கிராம அலுவலகர் பிரிவில் 642 வீடுகள் சோதனையிடப்பட்டன. மறுநாள் 15 அம் திகதி வண்ணார் பண்ணையில் ஜே 101 கிராம அலுவலக பிரிவிலும் நாவாந்துறையில் ஜே 87 கிராம அலுவலகர் பிரிவிலும் இடம்பெற்ற நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின் போது 578 வீடுகள் சோதனையிடப்பட்டன.

இந்த நுளம்புக் கட்டுப்பாட்டு நடவடிக்கையின் போது 499 குடியிருப்புக்கள் நுளம்பு பெருகக் கூடிய இடமாகக் காணப்பட்டன. இவற்றை விடப் போதிய சுகாதார வசதிகள் இன்றிக் காணப்பட்ட 104 குடியிருப்புகளுக்கு சிவப்பு அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன.

அதே சமயம் மாநகர பிரதேசத்தில் டெங்குகளின் தாக்கம் காணப்படும் இடங்களில் தொடர்ந்தும் அதற்கான விழிப்புணர்வுச் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாக மாநகரசபை தெரிவித்தது. (ஜ-17)

# வீட்டுத் திட்டத்தில் பக்கச்சார்பு நிலை

## நாடாளுமன்ற உறுப்பினர் நிர்மலநாதன் குற்றச்சாட்டு

யாழ்ப்பாணம், பெப். 22

**1990ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெயர்ந்தோருக்கான வீட்டு வசதி என்னும் பெயரில் 1995ஆம் ஆண்டில் பிறந்தவர்களுக்குக்கூட வீடுகள் வழங்கப்படும் நிலையில், போரால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வீடுகள் வழங்குவதில் மட்டும் புள்ளிகளின் அடிப்படையில் பட்டியலிடப்படுகிறது என்று நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது: மீள்குடியேற்ற அமைச்சின் ஊடாக நீண்டகாலம் இடம்பெயர்ந்தவர்களுக்கு வீட்டு வசதி, வாழ்வாதார வசதி மற்றும் அடிப்படை வசதிகள் எனப் பல உதவிகள் வழங்கத் திட்டமிட்டபோதே கூட்டமைப்பின் சார்பில் சில கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. அதாவது 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெயர்ந்தவர்களுக்குத்தான் இந்த விடயத்தில் முன்னுரிமை வழங்கப்படும். அதன் பின்னர் இடம்பெயர்ந்த மற்றும் போரால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு உரிய நிவாரணங்கள் வழங்கப்பட பின்னடிக்கப்படும் என்று கூட்டமைப்பு வலியுறுத்தியது.

அன்று கூட்டமைப்பு எதை எதிர்த்ததோ, எவ்வாறான மோசடி இடம்பெறும் என்று குறிப்பிட்டதோ அத்தகைய நடவடிக்கைகள் இன்று இடம்பெறுகின்றன: 1990ஆம் ஆண்டுக்கு முன்னர் இடம்பெயர்ந்தவர்களுக்கு வழங்கப்பட வேண்டிய சலுகைகள் 1993ஆம் ஆண்டு, 1994ஆம் ஆண்டுகளில் பிறந்தவர்களுக்குக்கூட வழங்கப்பட்டுள்ளன. இந்த விடயங்களில் உரிய கவனம் செலுத்தப்பட வேண்டியது அவசியம். மன்னார்,



முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் இத்தகைய முறைகேடுகள் அதிகம் இடம்பெற்று வருகின்றன - என்றார். (ம-105)

## நகரசபை உறுப்பினருக்குக் கொலை அச்சுறுத்தல் விடுத்தார் என இளைஞருக்கெதிராக முறைப்பாடு

வவுனியா, பெப். 22

வவுனியா நகரச சபை உறுப்பினருக்குக் கொலை அச்சுறுத்தல் விடுத்தார் என்று இளைஞருக்கு எதிராக வவுனியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவுசெய்யப்பட்டுள்ளது.

வவுனியா நகரசபை உறுப்பினர் திருமதி சமந்த செபநேசராணியே மேற்படி முறைப்பாட்டைப் பதிவுசெய்துள்ளார். தேக்கவத்தைப் பகுதியிலுள்ள தனது வீட்டுக்குள் இரவு 11 மணியளவில் அத்துமீறி நுழைந்து தன்னைக் கொல்ல முயற்சித்தார் என்று குறித்த முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது குறித்து நகரசபை உறுப்பினரைத் தொடர்புகொண்டு கேட்டபோது, ''எனது செயற்பாடுகள் பெண்களை மையப்படுத்தி மேற்கொள்ளப்பட்டுவருகின்றன. இதனைத்தடுக்கும் நோக்கிலும் எனக்கு அவமானத்தையும் களங்கத்தையும் ஏற்படுத்தும் விதமாகவும், என்னைக் கொலை செய்யும் எண்ணத்துடனும் குறித்த இளைஞன் வந்திருக்கலாம்" - என்றார். (ம)

## அரச தலைவர், தலைமை அமைச்சர் வேட்பாளர்கள் தயாரான நிலையில்

### ஐக்கிய தேசிய முன்னணி அதிரடி அறிவிப்பு

கொழும்பு, பெப். 22

அரச தலைவர் தேர்தலோ அல்லது நாடாளுமன்றத் தேர்தலோ எந்தத் தேர்தல் நடைபெற்றாலும் அதனை எதிர்கொள்ள ஐக்கிய தேசிய முன்னணி தயார் நிலையில் உள்ளது. அரச தலைவர், தலைமை அமைச்சர் வேட்பாளர்கள் களமிறங்கத் தயார் நிலையில் உள்ளனர். தேர்தல் அறிவிப்புகள் வெளியானவுடன் அவர்களின் பெயர்கள் வெளியிடப்படும். இவ்வாறு ஐக்கிய தேசிய முன்னணியின் அமைச்சர்களான சஜித் பிரேமதாச, ராஜித சேனாரத்ன ஆகியோர் தெரிவித்தனர்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

முதலில் எந்தத் தேர்தல் நடைபெற வேண்டும் என்பதில் அரசியல் அரங்கில் பெரும் குழப்பம் ஏற்பட்டுள்ளது. முதலில் மாகாண சபைத் தேர்தல் நடைபெற வேண்டும் என்று ஒரு சாராரும், அரசதலைவர் தேர்தல் நடைபெற வேண்டும் என்று இன்னொரு சாராரும், நாடாளுமன்றத் தேர்தல் நடைபெற வேண்டும் என்று பிறிதொரு சாராரும் கோரிக்கைகளை விடுத்து வருகின்றனர்.

ஆனால், ஐக்கிய தேசிய முன்னணி எந்தத் தேர்தலையும் எதிர்கொள்ளத் தயார் நிலையில் உள்ளது. முதலில் மாகாண சபைத் தேர்தல் நடைபெற்றால் அதில் நாம் எமது பலத்தைக் காட்டுவோம். ஐக்கிய தேசிய முன்னணியின் மாபெரும் வெற்றியை அதில் உறுதிப்படுத்துவோம்.

இதைவிடுத்து அரச தலைவர் தேர்தலோ அல்லது நாடாளுமன்றத் தேர்தலோ நடைபெற்றாலும் அதனையும் எதிர்கொள்ள ஐக்கிய தேசிய முன்னணி தயார் நிலையில் உள்ளது. அரச தலைவர், தலைமை அமைச்சர் வேட்பாளர்கள் களமிறங்கத் தயார் நிலையில் உள்ளனர். தேர்தல் அறிவிப்புகள் வெளியானவுடன் அவர்களின் பெயர்கள் வெளியிடப்படும்.

சிறுபான்மை, பெரும்பான்மை எனப் பல கட்சிகளைப் பங்காளிக் கட்சிகளாகக் கொண்டுள்ளது ஐக்கிய தேசிய முன்னணி. எதிரணியின் பொய்ப் பரப்புகளை முறியடித்து தேர்தல்களில் நாம் வரலாற்று வெற்றியைப் பெறுவோம். நாட்டு மக்கள் எங்கள் பக்கமே உள்ளனர். அவர்கள் சர்வாதிகார ஆட்சியை விரும்பவில்லை. ஜனநாயக ஆட்சியையே அவர்கள் விரும்புகின்றார்கள் - என்றனர். (ஒ.5,22)



## ஜயவர்த்தனபுர பல்கலைக் கழக முகாமைத்துவ பீடம் காலவரையின்றி மூடப்பட்டுள்ளது

கொழும்பு, பெப். 22

ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழக முகாமைத்துவ பீடம் காலவரையறையின்றிமூடப்பட்டுள்ளது என்று பல்கலைக்கழக உபவேந்தர் தெரிவித்துள்ளார். முதலாம் வருட மாணவர்கள் பகிடிவதைக்கு உட்டுத்தப்பட்டனர் என்று முன்வைக்கப்பட்ட குற்றச்சாட்டினைத் தொடர்ந்தே முகாமைத்துவ பீடம் காலவரையறையின்றி மூடப்பட்டுள்ளது. விடுதிகளில் தங்கியிருந்த மாணவர்களும் வெளியேற்றப்பட்டுள்ளனர். (ம)

## வலிந்துகாணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதிகோரி நடைபெறவுள்ள கதவடைப்புக்கு முன்னணி ஆதரவு

யாழ்ப்பாணம், பெப். 22

வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களுக்கான சங்கத்தால் தமது உறவுகளுக்கு நீதி கோரி நடத்தப்படவுள்ள கடையடைப்பு மற்றும் கவனவீர்ப்புப் பேரணிக்கு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆதரவைத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்த அமைப்பு அனுப்பி வைத்துள்ள ஊடக அறிக்கையில், கடந்த இரண்டு வருடங்களாக தமது உறவுகளைத் தேடி வீதிகளில் போராட்டம் நடத்திவரும் உறவுகளுக்கு இன்னமும் நீதி கிடைக்கவில்லை. இலங்கை அரசானது அவ்வப்போது சில கண்துடைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்வதன் மூலம் பன்னாட்டு சமூகத்தை ஏமாற்றி வருகின்றது.

இலங்கையில் இடம்பெற்ற போர்க் குற்றங்கள் மற்றும் மனிதத்துவத்திற்கு எதிரான குற்றங்கள், இனவழிப்புக் குற்றங்களை விசாரிப்பதற்காகவென ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை ராஜபக்ச அரசு மட்டுமல்ல ரணில் - மைத்திரி அரசும் கூட நடைமுறைப்படுத்தத் தயாரில்லை என்பதனை கடந்த நான்கு ஆண்டுகளில் தெளிவாக நிரூபித்துக்காட்டியுள்ளது.

எனவே இலங்கையில் இடம்பெற்ற வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்கள் உள்ளிட்ட மனிதத்துவத்திற்கு எதிரான குற்றங்கள், போர்க்குற்றங்கள், இனவழிப்புக் குற்றங்கள் தொடர்பில் பக்கச்சார்பற்ற பன்னாட்டு விசாரணைகளை ஐ.நா பாதுகாப்புச் சபை ஊடாக பன்னாட்டுக் குற்றவியல் நீதிமன்றில் முன்னெடுக்க பட வேண்டும் என வலியுத்தும் தீர்மானத்தை ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்படல் வேண்டுமென வலியுறுத்துகின்றோம் - என்றுள்ளது. (ம)

# போதைக்கு எதிரான செயற்றிட்டங்களால் பெரிய முன்னேற்றத்தை அடைய முடியும்

## இந்த வருடத்தின் நடுப்பகுதியில் சாத்தியம் என்று தெரிவித்தார் மைத்திரிபால சிறிசேன

கொழும்பு, பெப். 22

இந்த வருடத்தின் நடுப் பகுதிக்குள் போதைப் பொருளுக்கு எதிரான செயற்றிட்டங்களில் பெரிய முன்னேற்றத்தை அடைவதற்கு முடியும் என்று அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார் என அவரின் ஊடகப்பிரிவு அனுப்பி வைத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஹம்பாந்தோட்டை மாவட்ட நிர்வாக கட்டடத் தொகுதி வளாகத்தில் நேற்றுக் காலை இடம்பெற்ற கிராமசக்தி இயக்கத்தின் தென் மாகாண செயற்



குழுக் கூட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அரச தலைவர் மேற்குறிப்பிட்டவாறு தெரிவித்தார் என்று அந்த அறிக்கையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள் ளதாவது:

போதைப்பொருள் அச்சுறுத்தல் உள்ளிட்ட மக்களை வறுமை நிலைக்கு இட்டுச் செல்லும் அனைத்துச் சூழ்நிலைகள் தொடர்பிலும் கவனம் செலுத்தி பலமான பொருளாதாரத்துடன் தன்னிச்சையாக, முன்னேற்றமடைந்த ஒரு தேசத்தை உருவாக்குவதற்காக கிராமசக்தி மக்கள் இயக்கத்தினூடாக பெரிய வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. கிராமங்களில் வாழும் ஏழை மக்களுக்கு அச்சுறுத்தலாக மாறியிருக்கும் நுண்கடன் தொடர்பிலும் எதிர்காலத்தில் அரசின் தலையீடு இருக்கும். போதைப் பொருளுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளால் இந்த வருடத்தின் நடுப் பகுதிக்குள் பெரும் முன்னேற்றம் ஏற்படும் என்று அரச தலைவர் மேலும் தெரிவித்தார் - என்றுள்ளது. (ம)



# செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம் வலித்தூண்டல் றோ.க.த.க பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகள் பாடசாலை மைதானத்தில் இடம்பெற்றது.

கருகம்பனை இந்து இளைஞர் கழகத்தின் செயற்திட்டங்களின் வரிசையில் இவ் வருடத்துக்கான செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வாக இது அமைந்தது.

விளையாட்டில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு வழங்கவென 12 ஆயிரம் ரூபா பெறுமதியான பரிசில்களை கருகம்பனை இந்து இளைஞர் கழகத்தினுடாக நலன் விரும்பியான புஸ்பநாதன் வழங்கியிருந்தார். (ஜ-222)

# மெய்வன்மைப் போட்டிகள்

முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் கூழாமுறிப்பு அ.த.க பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் வித்தியாலயத்தின் மைதானத்தில் அதிபர் சபாஜிதன் தலைமையில் இடம்பெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிவமோகன், சிறப்பு விருந்தினர்களாக புதுக்குடியிருப்பு பிரதேச சபையின் உறுப்பினர்களான இ.சந்திரரூபன் .இ.சத்தியசீலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-246)









முல்லைத்தீவு தேசிய பாடசாலையான வித்தியானந்தா கல்லூரியின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் கல்லூரி அதிபர் திரு. பி.பொன்ராஜ் தலைமையில் நடைபெற்றன. நிகழ்வில் முதன்மை விருந்தினராக கல்லூரியின் பழைய மாணவனும் பொறியிலாளருமான எஸ்.சஞ்ஜீவன், சிறப்பு விருந்தினராக கப்டன் வீரக்கோன்,மதிப்புறு விருந்தினராக பழைய மாணவன் கே.பவளகாந்தன், முல்லைத்தீவு வலய உடற்கல்வி உதவிப் பணிப்பாளர் வி.சாரங்கன், ஓய்வுபெற்ற ஆசிரியர் திருமதி தவமணிதேவி ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-ரி3)

# கால்கோள் விழாவும் பொங்கல் நிகழ்வும்



யாழ்ப்பாணம் மட்டுவில் மாதுமை மழலைகள் கல்விப் பூங்கா முன்பள்ளியின் கால்கோள் விழாவும் பொங்கல் நிகழ்வும் இயக்குனர் சி.சிவகாந்தன் தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வில் விருந்தினராக சாவகச்சேரி பிரதேச சபை உபதவிசாளர் செ.மயூரன், சாவகச்சேரி பிரதேச சபை உறுப்பினர் க.சண்முகசுந்த ரம், முன்பள்ளி ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் பழைய மாணவர்கள் நலன் விரும்பிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

முன்பள்ளியின் புதுமுக மாணவர்களுக்கு பரிசில்களைவிருந்தினர்கள் வழங்கி மதிப்பளித்தனர். (ஜ-159)

யாழ்ப்பாணம் செம்பியன்பற்று றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலையின் இல்ல மெய்வன்மைப் போட்டிகள் பாடசாலை மைதானத்தில் அதிபர் பா.உதயசேகர் தலைமையில் இடம்பெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் எஸ்.சுகிர்தன் கலந்து கொண்டார். (ஜ-70)





# இனத்தின் தனித்துவத்தைக் காக்கும் பொறுப்பு ஆசிரியர்களுக்கும் உண்டு

## சிறீதரன் எம்.பி. தெரிவிப்பு



இனத்தின் தனித்துவங்களைப் பேணிக் காக்க வேண்டிய மிக முக்கியமான பொறுப்பும் எமது அடுத்த சந்ததிக்குக் கடத்த வேண்டிய கடமைப்பாடும் எங்கள் சிறார்களை வழிநடத்தும் ஆசிரியர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது.

எமது சிறார்களாவது, விடுதலை பெற்ற, அடக்குமுறைகளற்ற எமது தாயக மண்ணிலே சுதந்திரமாக வாழவேண்டும் என்பதற்காகவே எமது உரிமைகளை வலியுறுத்தி தொடர்ந்தும் செயற்பட்டு வருகின்றோம்.

இவ்வாறு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறீதரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போக்கட்டி அ.த. க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி பாடசாலை மைதானத்தில் அண்மையில் பாடசாலை அதிபர் தி.அபராஜிதன் தலைமையில் நடைபெற்றது.

அதில் முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே நாடாளுமன்ற உறுப்பினர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

தமிழர்களாகிய எமக்கென்று பண்பாடு, கலாசாரம் உள்ளன. எமக்கென்றொரு மொழி உண்டு. போற்றத்தக்க பல சிறந்த தனித்துவங்களுடன் வாழ்பவர்கள் நாம்.

எமது இனத்தின் தனித்துவங்களை அழித்து விட்டால் எமது இனத்தை அழித்துவிடலாம் என்னும் நோக்கத்திலேயே இனவாதிகள் பலர் செயற்பட்டு வருகின்றார்கள்.

அதை முறியடித்து இனத்தின் தனித்துவங்களைப் பேணிக் காக்க வேண்டிய மிக முக்கிய மான பொறுப்பும் எமது அடுத்த சந்ததிக்குக் கடத்த வேண்டிய கடமைப்பாடும் எங்கள் சிறார்களை வழிநடத்தும் ஆசிரியர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது - என்றார்.

இந்த நிகழ்வில் சிறப்பு விருந்தின ராக வடமராட்சி கிழக்கு பிரதேச செயலர் க.கனகேஸ்வரனும், மதிப்புறு விருந்தினர்களாக தென்மராட்சிக் கல்வி வலய ஆரம்பக்கல்வி உதவிக்கல்விப் பணிப்பாளர் சோ.திருக்குமரன், தென்மராட்சி அபிவிருத்தி ஒன்றிய விளையாட்டுச் செயலர் ம.சிறீதாசன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (த-426)

# செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகள்

முல்லைத்தீவு அலைகல்லுப்போட்ட குளம் அ.த.க. பாடசாலையின் செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டு நிகழ்வுகள் வித்தியாலய மைதானத்தில் அதிபர் திருமதி. சா.பாஸ்கரன் தலைமையில் நடைபெற்றன.

நிகழ்வில் முதன்மை விருந்தினர்களாக நாடாளுமன்ற உறுப்பினர் வைத்தியக் கலாநிதி சிவமோகன், வன்னிக்குரோஸ் அமைப்பின் இணைப்பாளர் ச.ரூபன், சிறப்பு விருந்தினர்களாக ஆசிரிய ஆலோகர் ஜெயக்குமார் , கூழாமுறிப்பு பங்குத் தந்தை ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-222)





## பாகிஸ்தான் கைதியைக் கற்களால் எறிந்தே சாவடித்த இந்தியக் கைதிகள்



பதுடெல்லி.பெப்.22

இந்தியாவின் ஜெய்ப்பூர் மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த பாகிஸ்தானைச் சேர்ந்த சிறைக்கைதியான ஷாக்கருல்லா என்பவர் அதே சிறையிலிருந்த இந்தியக் கைதிகளால் கொல்லப்பட்டதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. பாகிஸ்தானின் சியால்கோட்டைப் பகுதியைச் சேர்ந்த ஷாக்கருல்லா இந்தியச் சிறையில் ஆயுள் தண்டனை அனுபவித்து வந்தார். அவரை அதே சிறையிலிருந்த இந்தியக் கைதிகள் நான்கு பேர் கற்களால் எறிந்து கொன்றதாகக் கூறப்படுகிறது. கடந்த வியாழனன்று நடந்த புல்வாமா தாக்குதல் சம்பவத்தை இதனுடன் தொடர்புபடுத்திப் பலரும் விமர்சிக்கின்றனர்.

ஆனால், இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை மதியம் நடைபெற்றதாகப் பொலிஸார் தெரிவிக்கின்றனர். சிறையிலுள்ள தொலைக்காட்சியின் ஒலி தொடர்பாக இவர்களுக்கிடையே எழுந்த முரண்பாடு கொலையில் முடிந்துள்ளது என்றும் பொலிஸார் மேலும் தெரிவிக்கின்றனர்.

இந்தியாவில் தீவிரவாதத்தைப் பரப்பியதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு ஷாக்கருல்லாவுக்கு 2017ஆம் ஆண்டு ஜெய்ப்பூர் நீதிமன்றம் ஆயுள் தண்டனை விதித்தமை குறிப்பிடத்தக்கது.


## இந்திய இராணுவத்தை தாக்குவோம்

### ஜெய்ஷ்இமுகமது அமைப்பு மிரட்டல்

காஷ்மீர்.பெப்.22

புல்வாமா தாக்குதல் போன்று மீண்டும் இந்திய இராணுவம் மீது தாக்குதல் நடத்தப்படும் என்று ஹிஸ்புல் முஜாகிதீன் ஆயுத அமைப்பு மிரட்டல் விடுத்துள்ளது. இந்தத் தாக்குதல் காஷ்மீர் இளைஞர்கள் மூலம் நடத்தப்படும் என்றும் அந்த அமைப்புக் கூறியுள்ளது. காஷ்மீரில் செயற்பட்டு வரும் ஹிஸ்புல் முஜாகிதீன் இயக்கத்தின் தளபதிகளில் ஒருவரான ரியாஸ் நைகூ பேசுவதான ஒலிப்பதிவு ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. "புல்வாமா தாக்குதல் காஷ்மீர் மக்கள் மீதான அட்டூழியங்களுக்காக நடத்தப்பட்டது.

இந்திய இராணுவம் காஷ்மீரில் இருக்கும் வரை தொடர்ந்து அழுகுரல் கேட்டுகொண்டே இருக்கும். இராணுவம் இங்கு இருக்கும் வரை உங்களது சிப்பாய்களின் சவப்பெட்டிகள் நிரம்பிக் கொண்டே இருக்கும். நாங்கள் சாக இருக்கிறோம். ஆனால் உங்களை வாழ அனுமதிக்க மாட்டோம். எங்கள் உயிர்களைத் தியாகம் செய்யத் துணிந்து விட்டோம். சரண் அடைவதை விட இறப்பதற்கே நாங்கள் முன்னுரிமை கொடுக்கிறோம். இராணுவம் இங்கு இருக்கும்வரை இந்தகைய தாக்குதல் நீடிக்கும்" - என்று அந்தக் குரல் பதிவில் கூறப்பட்டுள்ளது.





# பங்களாதேஷில் பயங்கரத் தீ 69 பேர் உடல் கருகிச் சாவு

டாக்கா.பெப்.22


*பங்களாதேஷின் தலைநகர் டாக்காவி லுள்ள மாடிக் குடியிருப்பு ஒன்றில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கிய 69 பேர் உடல் கருகிச் சாவடைந்தனர். 50க்கு மேற்பட்டவர்கள் படுகாயமடைந்து சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டனர்.*

இந்த மாடிக்குடியிருப்பிலுள்ள பல வீடுகளை வேதிப்பொருள்கள், பிளாஸ்ரிக் பொருள்கள் வைத்திருக்கும் சேமிப்புக் கிட்டங்காகப் பயன்படுத்தி வந்தனர்.

அவற்றில் தோற்றம்பெற்ற தீயே குடியிருப்பு முழுவதும் பரவியதாக முதல்கட்ட விசாரணைகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

டாக்காவின் சவுக்பஜார் பகுதியில் உள்ள மசூதிக்குப் பின்புறம் அமைந்துள்ள ஹாஜி வாஹத் என்ற 4 அடுக்குகளைக் கொண்ட மாடிக் குடியி ருப்பே இவ்வாறு தீ விபத்துக்கு உள்ளாகியிருக்கிறது. இதனால் அந்தக் குடியி ருப்பில் வசிப்பவர்கள் தீயில் சிக்கி வெளியேற முடியாமல் தவித்தனர். அத்துடன் இந்த இடம் மிகவும் குறுகலான வீதியைக் கொண்டிருந்ததால் அந்தப் பகுதியில் போக்குவரத்து நெரிசலும் ஏற்பட்டது. இதனால், அங்கிருந்து தப்பிக்க முடியாமல், தீயில் பலர் கருகினார்கள். இந்த தீ விபத்தில் இதுவரை 69 பேர் சாவடைந்துள்ளனர்.

ஆனால், சாவடைந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கும் என அஞ்சப்படுகிறது. தீயை அணைக்கும் பணியும், மீட்புப் பணியும் தொடர்ந்து நடந்து வருகின்றன.



வட கொரியத் தலைவர் கிம் ஜோங் உன் தலைமுடி வெட்டியிருக்கும் வடிவத்தை ஒத்திருக்கும் விதமாக வியட்நாம், ஹனோய் நகரிலுள்ள சிகை அலங்கரிப்பு நிலையம் ஒன்றில் வியட்நாமைச் சேர்ந்த கியா ஹ்யூ என்கிற இளைஞர் தனது தலைமுடியை வடிவமைத்துள்ளார். கிம் ஜோங் உன் ட்ரம்ப் ஆகியோர் எதிர்வரும் நாள்களில் வியட்நாமில் சந்திக்க வுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## இன்றைய நாள்

**மேடம்:** தாயின் அன்பும் ஆசியும் கிடைக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு எளிதில் நிறைவேறும். உபரி வருமானம் கிடைக்கும். சுபசெய்தி வந்து சேரும். பெண்கள் புத்தாடை, ஆபரணம் வாங்குவர்.

**இடபம்:** உங்கள் செயலில் கவனச் சிதறல் ஏற்படலாம். தொழில், வியாபாரத்தில் மறைமுகப்போட்டி அதிகரிக்கும். பணவரவு பெறுவதில் தாமதம் இருக்கும். பெண்கள் நகை, பணம் இரவல் கொடுக்க வேண்டாம்.

**மிதுனம்:** எதிர்பார்ப்பு நிறைவேற தாமதமாகலாம். தொழில், வியாபாரம் சீர்பெற நவீன மாற்றம் செய்ய வேண்டியதிருக்கும். அளவான பண வரவு கிடைக்கும்.

**கடகம்:** பணிகளை நேர்த்தியுடன் செய்வீர்கள். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி இலக்கு பூர்த்தியாகும், பணப்பரிவர்த்தனை முன்னேற்றம் தரும். உடன் பிறந்தவர்களுக்கு உதவுவீர்கள்.

**சிங்கம்:** குடும்பத்தினர் மத்தியில் செல்வாக்குக் கூடும். செயல்களில் உற்சாகம் நிறைந்திருக்கும். தொழில் வளர்ச்சி பெறப் புதிய வாய்ப்பு கிடைக்கும்.

**கன்னி:** உங்களின் நற்செயலைச் சிலர் பரிகாசம் செய்யலாம். சுயகவுரவம் பாதுகாக்க முயல்வீரகள். தொழிலில் உற்பத்தி, விற்பனை சீராக இருக்கும். ஆதாயம் மிதமாகக் கிடைக்கும்.

**துலாம்:** சமயோசிதமாகச் செயல்பட்டு நன்மை காண்பீர்கள். தொழில், வியாபாரம் வளர்ச்சி பெறக் கூடுதலாக பணிபுரிவீர்கள். பணவரவு திருப்தியளிக்கும். திடீர் செலவால் சேமிப்பு கரையும்.

**விருச்சிகம்:** மங்கள நிகழ்வுகளால் இனிமை காண்பீர்கள். தொழில், வியாபாரத்தில் புதிய வளர்ச்சி ஏற்படும். இலாபம் அதிகரிக்கும். நண்பரால் உதவி உண்டு.

**தனுசு:** அடுத்தவர் நலனில் அக்கறை கொள்வீர்கள். தொழில், வியாபா ரத்தில் நிலுவைப்பணி எளிதாக நிறைவேறும்.ஆதாயம் கூடும். பெண்கள் இஷ்ட தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவர்.


**மகரம்:** வாக்குறுதி நிறைவேற்றுவதில் தாமதம் உண்டாகும். தொழிலில் உற்பத்தி விற்பனை சராசரி அளவில் இருக்கும். இலாபம் மிதமாக அமையும்.

**கும்பம்:** தன்மானத்துக்குச் சோதனை வரலாம். தொழில்சார்ந்த இடையூறுகளை தாமதமின்றிச் சரி செய்வது நல்லது. பணவரவ்வ விடச் செலவு அதிகரிக்கும்.

**மீனம்:** தைரியத்துடன் எதிலும் ஈடுபடுவீர்கள். தொழில், வியாபாரத்தில் திருப்திகரமான வளர்ச்சி உண்டாகும். உபரி வருமானம் கிடைக்கும். பெண்கள் வீட்டு பர்வனைப் பொருள் வாங்குவர்.

# வடகொரியாவுக்கு நெருக்கடி அளிக்கவில்லை

### ட்ரம்ப் தெரிவிப்பு



வோஷிங்டன்.பெப்.22

அணு ஆயுதங்களை முழுமையாகக் கைவிடுமாறு வடகொரியாவுக்கு அமெரிக்கா நெருக்கடி அளிக்கவில்லை என்று அமெரிக்க அதிபர் ட்ரம்ப் கூறியுள்ளார். அமெரிக்க அதிபர் மாளிகையில் நேற்றுமுன்தினம் பத்திரிகையாளர்களைச் சந்தித்து பேசியபோதே ட்ரம்ப் இவ்வாறு தெரிவித்தார். "வியட்நாமில் நடைபெறவுள்ள கிம் ஜோங் உன் உடனான சந்திப்பை நான் ஆவலுடன் எதிர்நோக்குகிறேன்.

இது தொடர்பாக தென்கொரிய அதிபர் மூன் ஜே இன்னைத் தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினேன். வியட்நாம் சந்திப்புக் குறித்துத் தீர்க்கமாக ஆலோசித்தோம். இந்தச் சந்திப்பில் பல விடயங்கள் வெளிவரும் என நம்புகிறேன். அணு ஆயுதங்களை முழுமையாகக் கைவிடுவதற்குக் காலக்கெடு நிர்ணயித்து வடகொரியாவுக்கு நாங்கள் நெருக்கடி கொடுக்கவில்லை. ஆனால் அது விரைவில் நடக்க வேண்டும்'எனப் பலரும் விரும்புகிறார்கள். அது நிச்சயம் நடக்கும் என்பதில் எங்களுக்கு நம்பிக்கை உள்ளது" என்று அவர் மேலும் கூறினார். அமெரிக்க அதிபர் ட்ரம்ப், வடகொரிய அதிபர் கிம் ஜோங்உன் இடையேயான 2ஆவது சந்திப்பு வியட்நாமின் ஹனோய் நகரில் எதிர்வரும் 27, 28ஆம் திகதிகளில் நடக்கவிருப்பது குறிப்பி டத்தக்கது.

## போர்க்குற்றம்...

இந்த விவகாரம் தொடர்பில் ஒரு வாரத்தின் பின்னர் அரச தலைவர், முதன் முறையாக கருத்து வெளியிட்டுள்ளார்.

வடக்குக்கு கடந்த வாரம் பயணம் மேற்கொண்டிருந்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க, போரின்போது இரு தரப்பினரும் போர்க்குற்றங்களில் ஈடுபட்டனர் எனவும், இந்தச் சம்பவங்களை மறப்போம் மன்னிப்போம் என்றும் கூறியிருந்தார். இதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் பதிலளிக்கும்போது, ரணில் விக்கிரமசிங்கவின் மறப்போம் மன்னிப்போம் என்ற கருத்தை அடியோடு நிராகரிக்கின்றோம். மறப்போம் மன்னிப்போம் என்ற பேச்சுக்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம். படையினரின் போர்க்குற்றங்களால் பாதிக்கப்பட்ட மக்கள் வன்னியில் இன்னமும் இருக்கின்றார்கள். பாதிக்கப்பட்ட மக்களுக்கும், கொன்றொழிக்கப்பட் மக்களுக்கும், காணாமல் ஆக்கப்பட்ட மக்களுக்கும் நீதி வேண்டும். பன்னாட்டு பொறிமுறை ஊடாக உண்மைகள் கண்டறியப்பட வேண்டும். குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும்' என்று குறிப்பிட்டிருந்தார்.

இது தொடர்பில் அரச தலைவரின் நிலைப்பாடு என்னவென்று அவரிடம் கொழும்புச் செய்தியாளர் ஒருவர் கேள்வி எழுப்பினார்.

'இராணுவத்தினர் எமது நாட்டின் வீரர்கள். குருதி சிந்தி நாட்டை மீட்டெடுத்த உத்தமர்கள். அவர்கள் இறுதிப் போரில் போர்க்குற்றங்களில் ஈடுபடவில்லை என்பதுதான் எனது நிலைப்பாடு. எனினும், அவர்கள் போர்க்குற்றங்களில் ஈடுபட்டார்கள் என்று எவராலும் சொல்லப்பட்டாலும் இராணுவத்தைத் தண்டிக்க இடமளிக்கமாட்டேன். நான் ஆட்சியில் இருக்கும் வரை இதற்கு ஒருபோதும் அனுமதியளிக்கமாட்டேன். இது உறுதி. இராணுவத்தை நான் பாதுகாத்தே தீருவேன். எமது இராணுவத்தினரை பன்னாட்டு நீதிமன்றத்தில் நிறுத்த சிலர் முயற்சிக்கின்றனர். இராணுவத்தினர் மீது வீண்பழியைச் சுமத்துகின்றார்கள். நாட்டைக் காட்டிக் கொடுக்கும் இவர்களுக்கு வரலாறு தக்க பாடம் புகட்டும். சில வெளிநாடுகள் எமது நாட்டின் உள்விவகாரங்களில் தேவையில்லாமல் தலையிடுகின்றன. இதற்கு இங்கிருப்பர்வர்களும் உடந்தையாக உள்ளனர். இவர்களை ஒருபோதும் திருத்த முடியாது. வரலாறு இவர்களைக் கவனிக்கும்' என்று கூறினார் அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன.

(ஒ.5,22)

## கேப்பாபிலவிலும்...

இதன்போதே அவர்கள் இவ்வாறு தெரிவித்துள்ளனர்.

'நந்திகடல் ஏரிக்கு அண்மையாகவுள்ள மக்களின் காணிகளை அபகரித்துக் கொண்டுள்ள படையினர் அந்தக் காணிகளை விடுவிக்க மறுத்து வருகின்றார்கள். போர் இறுதியாக நடைபெற்ற கரையோரப் பகுதிகளில் படையினர் நிலைகொண்டுள்ளார்கள்.

மக்களின் வாழ் இடங்களில் உள்ள பல கிணறுகளை படையினர் மூடியுள்ளார்கள். விடுவிக்கப்பட்ட காணிகளில் கிணறுகள் இருந்த இடங்கள் தெரியாதவாறு மூடப்பட்டுள்ளன. தற்போது போராட்டம் இடம்பெறும் கொட்டிலுக்கு அருகிலும் கிணறு ஒன்று இருந்தது. ஆனால் இப்போது அதுகூட இல்லை. விடுவிக்கப்பட்ட காணிகளில் இருந்த 25க்கும் மேற்பட்ட கிணறுகளை படையினர் இடம் தெரியாதவாறு மூடியுள்ளார்கள். இது எங்களுக்கு சந்கேத்தினை ஏற்படுத்தியுள்ளது. இறுதிப்போரின் போது மன்னார் மனிதப் புதைகுழிபோன்று ஏதாவது தடயங்களை கிணறுகளில் இட்டு மூடியுள்ளனரா என சந்தேகம் உள்ளது - என்று மக்கள் மேலும் தெரிவித்தனர்.

சந்திப்பில் கருத்துத் தெரிவித்த இலங்கைக்கான சுவிஸ் தூதரகத்தின் அரசியல் விவகாரங்களுக்கான அதிகாரி, நான் கடந்தமுறை கேப்பாபிலவு மக்கள் போராட்டம் நடத்தும் இடத்துக்கு வந்தவேளை இந்த மக்கள் சொந்த நிலங்களுக்குச் சென்றுவிடுவார்கள் என்ற நம்பிக்கையுடன் சென்றேன். ஓர் ஆண்டுக்குப் பின்னர் தற்போது மீண்டும் வந்துள்ளேன். எனினும் மக்களின் வாழ்க்கையில் இன்னமும் முன்னேற்றம் ஏற்படவில்லை. மக்கள் தொடர்ந்தும் போராடிக் கொண்டுதான் உள்ளனர். இது தொடர்பில் அதிருப்தியும், கவலையும் அடைகின்றேன். மக்களின் கோரிக்கைகளை உரிய இடங்களுக்கு கொண்டுசெல்வேன் - என்றார். (ம-ரி3)

## அரசமைப்புப்....

மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார். நான் உருவாக்கிய புனிதமான குழந்தையான 19ஆம் திருத்தத்தை இந்த அரசு முறைகேடாகப் பயன்படுத்திவிட்டது எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாடாளுமன்றத்தில் நேற்று எதிர்க்கட்சியால் கொண்டுவரப்பட்ட அரசமைப்புப்பேரவை மீதான விவாதத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

அரசமைப்புப் பேரவை முழுமையான அரசியல் தலையீட்டில் மட்டுமே செயற்பட்டு வருகின்றது. இது சரியானதொரு நிலையல்ல. மேலும் என்னால் உருவாக்கப்பட்ட புனிதமான குழந்தையே 19ஆம் திருத்தம். பல எதிர்பார்ப்புகளுடன் இந்தக் குழந்தையை நான் உருவாக்கினேன். இவ்வாறு எனது புனிதமான குழந்தையை காப்பாற்ற விஜயதாச ராஜபக்ச தனியாகப் போராடினார் என்பதை நான் மறக்கவில்லை. 19ஆம் திருத்தம் குறித்து சபையில் எழுப்பப்பட்ட அனைத்து கேள்விகளுக்கும் தனியாக முகங்கொடுத்து கேள்விகளுக்கு பதில்களைக் கொடுத்தார். எனினும் அவ்வாறு பெற்றெடுத்த குழந்தை ஒரு கள்ளனாக அல்லது அங்கவீனமாக பிறந்துவிட்டது. இன்று ஓர் ஊடகம் அதனை தெளிவாக எழுதியுள்ளது. ஓர் அங்கவீன குழந்தை என்ற கருத்தினை நான் முழுமையாக ஏற்றுக்கொள்கிறேன். அனாவசிய தலையீடுகள் ஏற்பட்ட காரணத்தினால் இன்று 19ஆம் திருத்தம் தவறிவிட்டது என்பதே உண்மையாகும் - என்றார். (ம-61)

## ஒரு பூங்காவுக்கு...

வைக்கப்படவுள்ளது.

நகர அபிவிருத்தி அதிகார சபையால் 40 மில்லியன் ரூபா செலவில் இந்தப் பூங்கா அமைக்கப்பட்டது. கடந்த வருடம் நவம்பர் மாதம் 26ஆம் திகதி நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரனால் இந்தப்பூங்கா ஏற்கனவே திறந்து வைக்கப்பட்டிருந்த நிலையில், திறந்த பூங்காவை மீண்டும் திறந்து வைக்கவுள்ளார் மேல்மாகாண மற்றும் மாநகர அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்க.

(ம-214)

## அரசமைப்புப்...

கொண்டுவரப்பட்ட அரசமைப்புப் பேரவை குறித்த விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அரசமைப்புப் பேரவை மிகவும் ஆரோக்கியமான ஒன்றாகும். ஆனால் அரசியல் அமைப்பு பேரவையில் குறைபாடுகள் இருக்கலாம். அதனை பேச்சு மூலமாக சரிசெய்து கொள்ள முடியும். எமது ஆட்சியை சூழ்ச்சியால் கைப்பற்றினீர்கள். பின்வாசல் வழியாக மகிந்த ராஜபக்ச ஆட்சிப்பீடம் ஏறினார். இறுதியாக நீதிமன்றம் அவர்களின் சூழ்ச்சிக்கார ஆட்சியை நிராகரித்தது. ஆகவேதான் இன்று நீதித்துறை மீது நீங்கள் கோவமாக உள்ளீர்கள். ஆனால் நியாயம் என்ற ஒன்று உள்ளது. இன்று நீதியின் சுயாதீனத்துவம் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இன்று மீண்டும் இனவாத கருத்துக்களை பரப்பும் நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றீர்கள். மத ரீதியில் நீதியரசர் நியமிக்கப்படுவதாக கூறுகின்றீர்கள். இது முழுப் பொய். உலகில் எங்கும் அவ்வாறு இடம்பெறவில்லை. எமது நாட்டில் நீதியரசர் நியமங்களை சரியாகச் செய்யவே அரசமைப்புப் பேரவை கொண்டுவரப்பட்டது. இதில் பிழை இருப்பின் முறைமையைப் புதுப்பிப்போம். அதைவிடுத்து நாம் இதனை நீக்க வேண்டாம் - என்றார். (ம-61)

## அத்துமீறி...

ஊடாக அவர்கள் மன்றில் முன்னிலைப் படுத்தப்பட்டனர். ரி அவர்களை ஜனவரி 21ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி ம.கணேசராசா உத்தரவிட்டார். மீனவர்கள் ஜனவரி 21ஆம் திகதியன்று கடும் எச்சரிக்கையுடன் விடுதலை செய்யப்பட்டனர். படகின் உரிமையாளரை பெப்ரவரி 21ஆம் திகதி (நேற்று) மன்றில் முன்னிலையாகுமாறு உத்தரவிடப்பட்டது. வாதங்கள், பிரதிவாதங்களைத் தொடர்ந்து மீன்பிடியில் ஈடுபடுத்தப்பட்ட படகு, இயந்திரம் உள்ளிட்ட ஏனைய பொருள்களை அரசுடமையாக்குமாறு கிளிநொச்சி நீதிவான் நீதிமன்ற நீதிபதி நேற்றுத் தீர்ப்பிட்டார். (ம-6,105)

## முல்லை...

ஈடுபட்டுவருகின்றமை முல்லைத்தீவு மீனவர்களால் நேற்றுமுன்தினம் அவதானிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து முல்லைத்தீவு மீனவ அமைப்புக்கள் ஊடாக விடயம் முல்லைத்தீவு மாவட்ட நீரியல்வளத் திணைக்களத்துக்குத் தெரிவிக்கப்பட்டு அதன் அதிகாரிகள் சம்பவ இடத்துக்கு நேற்றுமாலை சென்று விடயத்தை ஆராய்ந்துள்ளனர். இதன்போது, கடற்றொழில் நீரியல்வளத் திணைக்கள பணிப்பாளர் நாயகத்தால் நேரடியாக 18 படகுகளுக்கான அனுமதி வழங்கப்பட்டுள்ளமையும், ஒரு மீனவரே அத்தனை அனுமதிகளையும் பெற்றுவைத்துள்ளார் என்பதும் தெரியவந்தது.

இது தொடர்பில் முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழில் நீரியல்வளத்திணைக்கள உதவிப் பணிப்பாளரிடம் கேட்டபோது, முல்லைத்தீவு மாவட்டத்தின் சாலை பகுதியில் கடற்தொழிலில் ஈடுபட 18 படகுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதன் பிரதிகளை முல்லைத்தீவு மாவட்ட கடற்தொழில் நீரியல்வளத் திணைக்களத்துக்கு அனுப்பியுள்ளார்கள். கொழும்பு அமைச்சில் இருந்து வரும் கடற்தொழில் அனுமதியினை நாங்கள் ஒன்றும் செய்யமுடியாது - என்றார்.

(ம-105,ரி3)

## 250 மில்லியன்...

மொன்றை அமைப்பதற்காக இந்தியா மற்றும் இலங்கை இடையில் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

குறித்த ஒப்பந்தம் அலரிமாளிகையில் வைத்து நேற்று கைச்சாத்திடப்பட்டதாக, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள இந்தியத் துணைத் தூதரகம் தெரிவித்துள்ளது.

இலங்கை அரசால் மேற்கொள்ளப்படும் மக்கள் நலன்சார் அபிவிருத்தித் திட்டங்களுக்கு இந்திய அரசால் வழங்கப்படும் உதவிகளின் வரிசையில் இந்தத் திட்டமும் ஒன்றாகும். இந்த வர்த்தக மையமானது வடமாகாணத்தில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மற்றும் பிற தொழில்சார் சேவைகளுக்கான வாய்ப்பை அதிகரிக்கவும், மேம்படுத்தவும் உதவும் என்று தெரிவிக்கப்படுகிறது. (ம)



# கொழும்பில் வெள்ளை வானில் கடத்தப்பட்டு காணாமல் ஆக்கப்பட்ட மாணவர்கள் திருமலை கடற்படை முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமைக்குச் சாட்சி உண்டு

## குற்றப்புலனாய்வுத் திணைக்களம் நீதிமன்றில் அறிக்கை

கொழும்பு, பெப். 22

கொழும்பில் வெள்ளைவானில் கடத்திக் காணாமல் ஆக்கப்பட்ட 11 மாணவர்களில் ஐவர் திருகோணமலை கடற்படைத் தளத்தில் அமைந்துள்ள கன்சைட் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமைக்கான சாட்சிகள் காணப்படுகின்றன என்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் நீதிமன்றத்தில் தெரிவித்தனர். இது தொடர்பாக பலர் சாட்சியங்களை வழங்கியுள்ளனர் என்றும் குற்றப்புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகள் நீதிமன்றத்துக்கு தெரிவித்தனர்.

கொழும்பில் வெள்ளை வானில் கடத்தி காணாமல் ஆக்கப்பட்ட 5 தமிழ் மாணவர்கள் உட்பட 11 பேர் தொடர்பான வழக்குவிசாரணை நேற்றுமுன்தினம் கொழும்பு, கோட்டை நீதிவான் நீதிமன்றில் இடம்பெற்றபோதே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

முன்னாள் அரச தலைவர் மகிந்த ராஜபக்சவின் ஆட்சிக் காலமான 2008, 2009ஆம் ஆண்டுகளில் கொழும்பின் தெகிவளை, கொட்டாஞ்சேனை ஆகிய பிரதேசங்களில் 5 தமிழ் மாணவர்கள் உட்பட 11 பேர் வெள்ளை வானில் கடத்திச் செல்லப்பட்டுக் காணாமல் ஆக்கப்பட்டனர். இது தொடர்பான வழக்கு விசாரணை கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றத்தில் தொடர்ச்சியாக நடைபெற்று வருகின்றது.

இந்தச் சம்பவங்களுடன் இலங்கை கடற்படை புலனாய்வுப் பிரிவுக்கு தொடர்பிருக்கின்றமை கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில், விசாரணைகளை ஆரம்பித்த குற்றப் புலனாய்வுத் திணைக்களம், கடற்படையின் புலனாய்வுப் பிரிவு அதிகாரியான சந்தன பிரசாத் ஹெட்டியாராச்சி உட்பட புலனாய்வாளர்களையும் கைது செய்தது. இந்த நிலையில் இதுதொடர்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற வழக்கு விசாரணையின் போது, அறிக்கையொன்றைச் சமர்ப்பித்த குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தினர், கடத்தப்பட்ட 11 பேரில், ஐந்து பேர் திருகோணமலை கடற்படைத் தளத்தில் அமைந்துள்ள கன்சைட் முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தமை தொடர்பாக சிலர் சாட்சியமளித்துள்ளனர் என்று தெரிவித்தனர்.

மேலும், குறித்த சாட்சியாளர்கள் அந்த முகாம் அமைந்துள்ள இடத்தை குற்றப்புலனாய்வுப் பிரிவினருக்கு காட்டியுள்ளனர் என்றும் அவர்களிடம் மேலதிக விசாரணைகளை நடத்துவதற்கு அனுமதியளிக்குமாறும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் நீதிமன்றில் அனுமதி கோரினர். இந்த வழக்கின் முதன்மைச் சந்தேக நபரான லெப்டினன் கமாண்டர் சந்தன பிரசாத் உட்பட மூன்று சந்தேக நபர்களையும் எதிர்வரும் மார்ச் 6ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவு பிறப்பித்தார். (ம)


# பரபரப்பான ஆட்டத்தில் வென்று இறுதிக்குள் நுழைந்தது வளர்மதி



யாழ்ப்பாணம், பெப். 22
ஆவரங்கால் இந்து இளைஞன் விளையாட்டுக்கழக அணியை வீழ்த்தி இறுதி ஆட்டத்துக்குத் தகுதி பெற்றது புத்தூர் வளர்மதி விளை யாட்டுக் கழக அணி.

அரியாலை 100ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தப்படும் கரப்பந்தாட்டத் தொடரின் அரையிறுதி ஆட்டம், அரியாலை திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்றது.

புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக அணி முதலிரு செற்களையும் 25:20, 25:23 என்று கடும் போட்டியின் மத்தியில் கைப்பற்றியது. மூன்றாவது செற் ஆட்டத்தில், ஆவரங்கால் இந்து இளைஞன் விளையாட்டுக்கழக அணி கடும் சவாலை வழங்கியது. 25:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் ஆவரங்கால் இந்து இளைஞன் விளையாட்டுக்கழக அணி அந்தச் சுற்றை வெற்றி கொண்டது. ஆட்டம் பரப்பான நிலையில், நான்காவது செற் ஆரம்பமானது. புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழகம் ஆதிக்கம் செலுத்தியது. ஆவரங்கால் இந்து இளைஞன் விளையாட்டுக்கழகமும் பதிலுக்கு சிறப்பாட்டத்தை வெளிப்படுத்தியது. ஒரு கட்டத்தில் 22:22 என்ற நிலமை ஏற்பட்டது. இருப்பினும் ஆவரங்கால் இந்து இளைஞன் விளையாட்டுக்கழகத்தினர் சிறிது தடுமாற, 25:23 என்ற புள்ளிகள் கணக்கில் புத்தூர் வளர்மதி விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற செற்கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்குள் நுழைந்தது. (ஒ.23)



## குகதர்சன், ரஜீவ் இணை வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 22
யாழ்ப்பாணப் பூப்பந்தாட்டச் சங்கம் நடத்திய பூப்பந்தாட்டத்தொடரில், 40 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கான இரட்டையர் ஆட்டத்தில் குகதர்சன், ரஜீவ் இணை வெற்றி பெற்றது.

அரியாலை சரஸ்வதி சனசமூக நிலைய உள்ளக விளையாட்டரங்கில் 40 வயதுக்கு மேற்பட்ட ஆண்களுக்கான இரட்டையர் ஆட்டத்தில் குகதர்சன், ரஜீவ் இணையை எதிர்த்து காண்டீபன், குகதாஸ் இணை மோதியது.

முதலாவது மற்றும் இரண்டாவது செற் ஆட்டங்களை குகதர்சன், ரஜீவ் இணை 21:11, 21:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் வெற்றி கொண்டு கிண்ணத்தைச் சுவீகரித்தனர். (ஒ.23)

## 4:0 என்ற கோல் கணக்கில் வென்றது சென்.நீக்கிலஸ்

யாழ்ப்பாணம், பெப். 22
குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக அணியை 4:0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி வெற்றி பெற்றது நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம்.

யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடர் துரையப்பா விளையாட்டரங்கில் இடம்பெற்று வருகின்றது.

கடந்த திங்கட் கிழமை இடம்பெற்ற ஆட்டத்தில் குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென்.நீக்கிலஸ் விளையாட்டுக்கழகம் மோதியது.

ஆட்டத்தின் முதல் பாதியில் சென்.நீக்கிலஸ் வீரர் விக்னேஸ் முதலாவது கோலைப் பதிவு செய்து அணியின் கணக்கை ஆரம்பித்து வைத்தார். பதிலுக்கு குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழகத்தால் கோல் எதனையும் முதல் பாதியில் பதிவு செய்ய முடியவில்லை.

இரண்டாம் பாதி ஆட்டத்திலும் சென்.நீக்கிலஸ் அணி ஆதிக்கம் செலுத்தியது. இரண்டாம் பாதி ஆட்டத்தில் அந்த மேலும் 3 கோல்களை போட்டது. அந்த அணி சார்பில் விக்னேஸ், றொம்சன், சுரேஸ் மூவரும் தலா ஒவ்வொரு கோல்களைப் பதிவு செய்தனர்.

ஆட்டநேர நிறைவில் 4:0 என்ற கோல் கணக்கில் நாவாந்துறை சென்.நீக்கிலஸ் அணி வெற்றி பெற்றது. (ஒ.23)



## வலைப்பந்தாட்டம் யூனியன் வெற்றி

யாழ்ப்பாணம், பெப். 22
அரியாலை 100 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் வலைப்பந்தாட்டத் தொடரில் யூனியன் விளையாட்டுக்கழக அணி கிண்ணம் வென்றது.

அரியாலை சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் கொட் சொட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து யூனியன் விளையாட்டுக் கழக அணி மோதியது.

27:24 என்ற புள்ளிகள் அடிப்படையில் யூனியன் விளையாட்டுக் கழக அணி வெற்றி பெற்றது. சிறந்த வீரங்கனையாக யூனியன் விளையாட்டுக் கழக வீரங்கனை அபிதா தெரிவானார். சிறந்த கோல் தடுப்பாளராக கொட் சொட்ஸ் விளையாட்டுக்கழக வீரங்கனை அமிர்தினி தெரிவானார். சிறந்த கோல் போடுவராக யூனியன் விளையாட்டுக்கழக வீரங்கனை பகிர்தா தெரிவானார். (ஒ.23)

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம் கால்பந்தாட்ட லீக்கின் 75ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றன. இன்று வெள்ளிக்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வேலணை ஐயனார் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து குப்பிளான் குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

★★★

நவாலி தென்றல் விளையாட்டுக்கழகம் வடக்கு மாகாண ரீதியாக நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் விளையாட்டுக்கழக மைதானத்தில் மின்னொளியில் இடம்பெற்று வருகின்றது. இன்று வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நாவலர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து சித்தி விநாயகர் விளையாட்டுக்கழக அணி மோதவுள்ளது.

வடமராட்சி கல்வி வலய பாடசாலைகளுக்கு இடையிலான 16, 18, 20 வயதுக்கு உட்பட்ட பெண்களுக்கான வலைப்பந்தாட்டப் போட்டிகள் இன்று வெள்ளிக்கிழமை கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிமுதல் நடைபெறவுள்ளது. (ஒ.23, 422)



## ஆவரங்கால் மத்தியும் இறுதிக்குத் தகுதி

யாழ்ப்பாணம், பெப். 22
அரியாலை 100 ஆவது சுதேசிய திருநாட் கொண்டாட்ட விழாவை முன்னிட்டு யாழ்ப்பாண மாவட்ட ரீதியாக நடத்தும் கரப்பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டத்துக்கு ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி தகுதி பெற்றது.

அரியாலை திருமகள் சனசமூக நிலைய மைதானத்தில் இடம்பெற்ற அரையிறுதியாட்டத்தில் ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து மட்டுவில் மோகனதாஸ் விளையாட்டுக்கழக அணி மோதியது.

5 செற்களைக் கொண்டதாக இறுதியாட்டம் இடம் பெற்றது. ஆவரங்கால் மத்திய விளையாட்டுக்கழக அணி 25:11, 25:20, 25:20 என்ற நேர் செற் கணக்கில் வெற்றி பெற்று இறுதிக்குள் நுழைந்தது. (ஒ.23)

# இலங்கை கிரிக்கெட் சபையின் புதிய உறுப்பினர்கள் தெரிவு



இலங்கை கிரிக்கெட் சபையின் உறுப்பினர்களைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் இடம்பெற்றது. இதில் புதிய தலைவர், உப தலைவர், செயலர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இதில் உப தலைவராகச் தெரிவு செய்யப்பட்ட கே. மதிவாணன் யாழ்ப்பாணம் பருத்தித்துறையைச் சேர்ந்தவர் ஆவார். இவர் வடக்கு மாகாண துடுப்பாட்டச் சங்கத்தின் தலைவராவார்.

இலங்கை கிரிக்கெட் சபையின் புதிய தலைவராக சாமி சில்வாவும், உப தலைவர்களாக ரவின் விக்ரமரத்னவும், கே. மதிவாணனும், செயலராக மொஹான் டி சில்வாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

சாமி சில்வா 27 மேலதிக வாக்குகளைப் பெற்று இலங்கை கிரிக்கெட் சபையின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்டார். இவருடன் போட்டியிட்ட ஜெயந்த தர்மதாச 56 வாக்குகளை பெற்று தோல்வியடைந்தார்.

இதேவேளை, ரவின் விக்ரமரத்ன 82 வாக்குகளையும் கே. மதிவாணன் 80 வாக்குகளையும் பெற்று இலங்கை கிரிக்கெட் சபையின் உபதலைவர்களாக தெரிவு செய்யப்பட்டனர். இவர்களுடன் உபதலைவர் பதவிக்காக போட்டியிட்ட அமைச்சர் அர்ஜூன ரணதுங்க 72 வாக்குகளைப் பெற்று தோல்வியடைந்தார்.

மொஹான் டி சில்வா 96 வாக்குகளைப் பெற்றுச் செயலராக தெரிவாகியுள்ளார். இவருடன் போட்டியிட்ட நிசாந்த ரணதுங்க 45 வாக்குகளைப் பெற்று தோல்வியடைந்தார்.

## கிரிக்கெட் யாப்பு மாற்றியமைக்கப்படும் ஹரின் பெர்னாண்டோ திட்டவட்டம்



முன்னாள் இலங்கைக் கிரிக்கெட் வீரர்களான சங்ககார, மஹேல ஜெயவர்த்தன, அரவிந்த டீசில்வா ஆகியோர் நேற்றுமுன்தினம் விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோவிடம் இலங்கைக் கிரிக்கெட் சபைக்கான யாப்பை மாற்றியமைக்குமாறு கோரி மனு ஒன்றை கையளித்திருந்தனர்.

ஆனால் நேற்றைய தினம் இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபைக்கான புதிய உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர். எனினும் இது குறித்து ஹரின் பெர்னாண்டோ தெரிவிக்கையில்; இலங்கை கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை யாரை வேண்டுமானாலும் மாற்றியமைத்துக் கொள்ளட்டும். ஆனால் முன்னாள் கிரிக்கெட் வீரர்கள் சமர்ப்பித்த மனு மூன்று வாரங்களுக்குள் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்படும் என அவர் தெரிவித்தார்.

## ஒரே நாளில் சுருண்டது தென்னாபிரிக்கா அணி

இலங்கை-தென்னாபிரிக்கா அணிகளுக்கிடையிலான இரண்டாவதும் இறுதியுமான டெஸ்ட் போட்டி நேற்று போர்ட் எலிசபெத்தில் ஆரம்பமானது. இதில் இலங்கை அணியின் பந்து வீச்சுக்கு ஈடுகொடுக்க முடியாமல் ஒரே நாளில் சுருண்டது தென்னாபிரிக்கா அணி.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்கா அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக எல்கர், மர்கரம் களமிறங்கினர். அணி 15 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது முதலாவது இலக்கை இழந்தது. எல்கர் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 150 ஓட்டங்களுக்குள் 6 இலக்குகளை இழந்து அணி தடுமாறியது. அதிகபட்சமாக டிகுக் 86 ஓட்டங்களையும், மர்கரம் 60 ஓட்டங்களையும் பெற்றனர். இலங்கை அணியின் பந்து வீச்சுக்கு முகம் கொடுக்க முடியாமல் 222 ஓட்டங்களுக்குள் சகல இலக்குகளையும் இழந்து தென்னாபிரிக்கா அணி.

பந்து வீச்சில் பெர்னாண்டோ, ரஜித தலா 3 இலக்குகளையும், டி சில்வா இரண்டு இலக்குகளையும், கருணாரத்தே ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு இலங்கை அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக கருணாரத்னே, திரிமன்னே களமிறங்கினர். அணி 25 ஓட்டங்களை எடுத்திருந்த போது கருணாரத்னே 17 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து பவிலியன் திரும்பினார். இணைந்தார் பெர்னாண்டோ. அவர் வந்த வேகத்திலேயே ஓட்டமெதனையும் பெறாது நடையைக் கட்டினார். மென்ரிஸ் 16 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அணி நாள் முடிவில் 3 இலக்குகளை இழந்து 60 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. திரிமன்னே 25 ஓட்டங்களுடன், ரஜித ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழக்காது களத்திலிருக்க ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.





## மே.இ தீவுகள் புதிய சாதனை

மேற்கிந்தியத்தீவுகள் - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் இடம்பெற்று வரும் ஒருநாள் போட்டியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணி சிறப்பாகத் துடுப்பெடுதாடி வெற்றி பெற்றிருந்தது.

எனினும் போட்டியில் வெற்றி பெறவிட்டாலும் மேற்கிந்தியத் தீவுகள் அணி புதிய சாதனை ஒன்றைப் படைத்துள்ளது. இடம்பெற்ற முதலாவது ஒருநாள் போடடியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி 23 ஆறு ஓட்டங்களை அடித்தது. இதில் கிறிஸ் கெய்ல் தனியொருவராக 12 ஆறு ஓட்டங்களை அடித்திருந்தது குறிப்பிடத்தக்கது. ஒருநாள் போட்டியில் ஒரு அணியின் அதிகபட்ச ஆறு ஓட்டங்களாக இது வாக பதிவாகியுள்ளது.

இதற்கு முன்பு 2014 ஆம் ஆண்டு மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிராக நியூசிலாந்து அணி 22 ஆறு ஓட்டங்கள் அடித்ததே சாதனையாக இருந்தது.





## பழி தீர்க்கும் இங்கிலாந்து

இங்கிலாந்து அணி மேற்கிந்தியத்தீவுகளுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டு விளையாடி வருகின்றது. நடைபெற்று முடிந்த டெஸ்ட் போட்டியில் மேற்கிந்தியத்தீவுகள் அணி இங்கிலாந்து அணியை வீழ்த்தி தொடரையும் கைப்பற்றியிருந்தது. இரு அணிகளுக்குமிடையிலான 5 ஒருநாள் போட்டிகள், இரண்டு ரி-20 போட்டிகள் இடம்பெறவுள்ள நிலையில், நேற்றுமுன்தினம் முதலாவது ஒருநாள் போட்டி இடம்பெற்றது. இதில் இங்கிலாந்து அணி 6 இலக்குகளால் வெற்றி பெற்றது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற மேற்கிந்தியத்தீவுகள் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. அந்த அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக கிறிஸ் கெய்ல், காம்பெல் களமிறங்கினர். அணி 38 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது காம்பெல் 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்து வெளியேறினார். இணைந்தார் ஹோப். இருவருக்குமான இணைப்பாட்டமாக 131 ஓட்டங்கள் பகிரப்பட்டன. அதிக பட்சமாக கிறிஸ் கெய்ல் 12 ஆறு ஓட்டங்கள், 3 நான்கு ஓட்டங்கள் அடங்கலாக 135 ஓட்டங்களையும், ஹோப் 64 ஓட்டங்களையும், பிராவோ 40 ஓட்டங்களையும் பெற்றனர். அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துப்பரிமாற்றங்களில் 8 இலக்குகளை இழந்து 360 என்ற இமாலய ஓட்ட எண்ணிக்கையைக் குவித்தது.

பந்து வீச்சில் ஸ்ரோக்ஸ், ரஷிட் தலா 3 இலக்குகளையும், வோக்ஸ் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்கு 361 ஓட்டங்கள் என்ற இமால இலக்கை நோக்கிக் களமிறங்கிய இங்கிலாந்து அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களாக ரோய், பிறிஸ்ரோ களமிறங்கினர். இவர்கள் இருவரும் சிறப்பான ஆரம்பத்தை அணிக்கு அமைத்திருந்தனர். அணி 91 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது பிறிஸ்ரோ 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். வந்தார் ரூட். இருவரும் அதிரடியாகத் துடுப்பெடுத்தாடி சதம் கடந்தனர். ஒவ்வொரு இலக்குகளும் சராசரியாக 100 ஓட்டங்களுக்கே இழக்கப்பட்டன. 3ஆவது இலக்கு இழக்கப்படும் போது அணி 321 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. ரோய் 123 ஓட்டங்களுடனும், ரூட் 102 ஓட்டங்களுடனும், மோர்கன் 65 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்தனர். அணி 48.4 பந்துப்பரிமாற்றங்களில் 4 இலக்குகளை மாத்திரமே இழந்து 364 ஓட்டங்களைப் பெற்று 6 இலக்குகளால் அதிரடி வெற்றியைப் பெற்றது.

பந்து வீச்சில் ஹோல்டர் 2 இலக்குகளையும், தோம்ஸ், பிஸ்கோ தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர். ஆட்டநாயகனாக இங்கிலாந்து அணியின் வீரர் ரோய் தெரிவு செய்யப்பட்டார்.

## ஒருநாள் போட்டியில் 3ஆவது துரத்தியடிப்பு

மேற்கிந்தியத்தீவுகள் - இங்கிலாந்து அணிகளுக்கிடையில் இடம்பெற்ற முதலாவது ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து அணி அபார வெற்றி பெற்றது. 360 ஓட்டங்களை மேற்கிந்தியத்தீவுகள் அணி குவித்திருந்தது. அதனை வெற்றிகரமாக துரத்தியடித்திருந்தது இங்கிலாந்து அணி. இது ஒருநாள் போட்டி வரலாற்றில் வெற்றிகரமான 3ஆவது துரத்தியடிப்புச் சாதனையாகும்.

2006ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு எதிராக 435 ஓட்டங்களைத் துரத்தியடித்து தென்னாபிரிக்கா அணி வெற்றி பெற்றதே ஒருநாள் போட்டியின் முதல் சாதனையாகும். 2016ஆம் ஆண்டு ஆஸ்திரேலியாவுக்கு எதிராக தென்னாபிரிக்கா அணி 372 ஓட்டங்களைத் துரத்தியடித்து வெற்றி பெற்றது 2ஆவது சாதனையாக இருந்தது.

# உலகக் கிண்ணத்தில் பாக். துரத்தியடிப்போம்

## சுனில் கவாஸ்கர் புத்திமதி



பாகிஸ்தான் அணியுடன் மோதுவதைத் தவிர்ப்பதைக் காட்டிலும் அந்த அணியுடன் மோதி உலகக் கிண்ணப் போட்டியிலிருந்து அவர்களைத் துரத்தியடிப்பதே சிறந்தது என்று சுனில் கவாஸ்கர் தெரிவித்தார்.

புல்மாவா தாக்குதலையடுத்து பல்வேறு தரப்பினர்களிடம் இருந்து பல்வேறுபட்ட கருத்துக்கள் வந்த வண்ணமுள்ளன. முன்னாள் கிரிக்கெட் வீரர்கள், சமூக ஆர்வலர்கள், இந்திய ரசிகர்கள் என்று ஏராளமானோர் பாகிஸ்தானுக்கு எதிராக கருத்துக்களை முன்வைத்த வண்ணம் உள்ளனர். இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையும் பாகிஸ்தான் அணியை உலகக் கிண்ணக் கிரிக்கெட் போட்டியிலிருந்து நீக்குமாறு பன்னாட்டுக் கிரிக்கெட் சபைக்கு கடிதம் அனுப்பவுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில் சுனில் கவாஸ்கர் தெரிவிக்கையில், நான் என்றுமே நாட்டின் பக்கமே நிற்பேன். ஆனால் பாகிஸ்தான் அணியுடன் உலகக் கிண்ணத்தில் விளையா டாமல் தவிர்த்து விட்டால் அவர்களுக்கு இலகுவாக 2 புள்ளிகள் கிடைத்து முன்னேறி விடுவார்கள். நாம் அதனை விடுத்து அவர்களுடன் உலகக் கிண்ணத்தில் மோதி அவர்களை தோற்கடித்து துரத்தியடிப்பதே சிறந்த வழி. இரு நாடுகளுக்கிடையிலான பிரச்சினையை பன்னாட்டுக்கிரிக்கெட் சபை கவனத்தில் எடுக்காது. எனவே இந்தியக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையின் முயற்சி தோல்வியிலேயே முடிவடையும். எனவே அவர்களுடன் உலகக் கிண்ணத்தில் மோதி துரத்தியடிப்பதே சிறந்த வழி - என்றார்.

**ஆள்கள் தேவை**

எரிபொருள் நிரப்பு நிலையத்துக்கு ஆள்கள் தேவை.
இருபாலாரும் விண்ணப்பிக்கலாம்.

076 138 0212/ 076 316 6060

அதிர்ஷ்ட கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 533
வர்ணம் : ஊதா
சீட்டிழுப்பு திகதி: 2019.02.21
இன்றைய ஜக்பொட் பரிசு
ரூ. 65,317,140/-
வெற்றி இலக்கங்கள்
47 59 64 75 C

ராசி அதிர்ஷ்டம்
திகதி 21.02.2019 வெற்றி வாரம் 2462 வர்ணம் கபிலம்
இடபம்
வெற்றி இலக்கங்கள் 10 37 47 53
வெள்ளிக் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 000, 000/=
22.02.2019ம் திகதி வெள்ளிக் கிழமை நீல நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
Web: www.dlb.lk

ஜயோதா
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 1546 சீட்டிழுப்பு திகதி 21.02.2019
வெற்றி இலக்கங்கள்
21 27 34 58 L
ரூ 26 , 750, 924/=





# இம்முறை லாரியஸ் விருது ஜோகோவிக், ஒசாகாவுக்கு

ஒவ்வொரு ஆண்டும் விளையாட்டுத் துறையில் சிறப்பாகச் செயற்படும் வீர, வீராங்கனைகள், அணிகள், அமைப்புகள் ஆகியவற்றுக்கு உயரிய விருதான லாரியஸ் விருது வழங்கப்பட்டு வருகிறது. இந்த விருது 2000ஆம் ஆண்டு முதல் மொனாக்கோவைச் சேர்ந்த லாரியஸ் அக்கடமி வழங்கி வருகின்றது. இந்த ஆண்டும் கடந்த ஆண்டில் சிறப்பாக செயற்பட்டவர்களுக்கான விருது வழங்கும் விழா கடந்த திங்கட்கிழமை மொனாக்கோவில் இடம்பெற்றது.

இதில் சிறந்த வீரருக்கான விருதை ரென்னிஸ் நட்சத்திர வீரரான செர்பியா நாட்டின் நோவக் ஜோகோவிக் தட்டிச்சென்றார். இந்த விருதை வெல்வதற்கான பட்டியலில் பிரான்ஸ் கால்பந்து அணியின் நட்சத்திர வீரர் கிளியான் பாப்பே, கென்யாவை சேர்ந்த மரதன் ஓட்ட வீரர் எலியட் கிபோகேஜ், அமெரிக்க கூடைப்பந்து வீரர் லெப்ரான் ஜேம்ஸ் ஆகியோரும் இருந்தனர். இவர்கள் அனைவரையும் பின்தள்ளி 4ஆவது முறையாக இந்த விருதை தட்டிச்சென்றார் ஜோகோவிக்.

முழங்கை காயத்துக்கு அறுவை சிகிச்சை மேற்கொண்டு களத்துக்கு திரும்பிய ஜோகோவிச் இறுதியாக ஆஸ்திரேதிரேலியா பகிரங்க ரென்னிஸ் தொடரின் ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவின் கிராண்ட் ஸ்லாம் சம்பியன்பட்டத்தையும்வென்றிருந்தார். இது குறித்து ஜோகோவிச் தெரிவிக்கையில், “கடந்த ஆண்டு எனக்கு நம்ப முடியாத வகையில் சிறப்பாக அமைந்திருந்தது. காயத்தில் இருந்து திரும்பிய நிலையில் விம்பிள்டன், அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் பட்டம் வென்றதை என்னால் என்றும் மறக்க முடியாது. விருதை வென்றது மகிழ்ச்சியாக உள்ளது. லாரியஸ் அக்கடமி வழங்கி வரும் ஆதரவுக்கு மிக்க நன்றி” -என்றார்.

சிறந்த வீராங்கனைக்கான விருது அமெரிக்காவின் ஜிம்னாஸ்டிக் வீராங்கனையான சிமோன் பில்ஸுக்கு வழங்கப்பட்டது. கடந்த ஆண்டு நடைபெற்ற உலகச் சாம்பியன்ஷிப் தொடரில் 4 தங்கம், ஒரு வெள்ளி, ஒரு வெண்கலப் பதக்கம் வென்று சிமோன் பில்ஸ் சாதனை படைத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிறந்த அணிக்கான விருதை உலகக் கிண்ண கால்பந்தில் சம்பியன் பட்டம் வென்ற பிரான்ஸ் அணி தட்டிச் சென்றது. திருப்பு முனையை ஏற்படுத்தியவருக்கான விருதை, யப்பான் ரென்னிஸ் வீராங்கனை யான நவோமி ஒசாகாவுக்கு வழங்கப்பட்டது. கடந்த ஆண்டு அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடரின் சம்பியன் பட்டத்தை நவோமி ஒசாகா, செரீனா வில்லியம்ஸை வீழ்த்தி பட்டம் வென்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

21 வயதான ஒசாகா கடந்த மாதம் இடம்பெற்ற ஆஸ்திரேலிய பகிரங்க ரென்னிஸ் போட்டியிலும் சம்பியன் பட்டம் வென்று கிரான்ஸ் லாம்ட் பட்ட பெற்ற முதல் யப்பானிய வீரர் என்பதும் குறிப்பிடத்தக்கது. லாரியஸ் விருதை பெறும் முதல் யப்பானியர் என்ற பெருமையையும் இப்போது ஒசாகா பெற்றுள்ளார்.

விதிவிலக்கான சாதனை வீரர் விருதை கென்யா நாட்டின் மரதன் ஓட்ட வீரர் எலியட் கிபோகேஜ் பெற்றார்.



# காலிறுதிக்கு ஹாலப் முன்னேற்றம்

மகளிருக்கான டுபாய் ரென்னிஸ் சம்பியன் தொடர் ஐக்கிய அரபு ராஜ்ஜியத்தில் இடம்பெற்று வருகிறது. இதில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஒற்றையர் பிரிவில் 3ஆம் நிலை வீராங்கனையான ருமேனியா நாட்டு வீராங்கனை சிமோனா ஹாலப், உக்ரைன் நாட்டு வீராங்கனை சுரேன்கோவை எதிர் கொண்டார். இதில் ஹாலப் 6:3, 7:5 என்ற நேர் செற் கணக்கில் சுரேன்கோவை வீழ்த்தி வெற்றி பெற்று காலிறுதிக்கு முன்னேறினார்.

இவர் காலிறுதியில் சுவிஸ் நாட்டு வீராங்கனையான பெலிண்டா பென்சிக்கை எதிர் கொள்கின்றார்.

# அப்ரிடியை முந்தினார் கெய்ல்

பன்னாட்டு கிரிக்கெட் போட்டியில் அதிக ஆறு ஓட்டங்கள் அடித்தவர்கள் பட்டியலில் மேற்கிந்தியத்தீவுகளின் வீரர் கிறிஸ் கெய்ல் முதல் இடத்துக்கு முன்னேறினார்.

இங்கிலாந்துக்கு எதிரான முதலாவது ஒருநாள் போட்டியில் கிறிஸ் கெய்ல் 12 ஆறு ஓட்டங்களை விளாசியதன் மூலம் அவர் இந்தச் சாதனையைப் பெற்றுள்ளார்.

முன்னர் பாகிஸ்தான் கிரிக்கெட் வீரர் அப்ரிடி இந்தச் சாதனைக்கு சொந்தக் காரராக இருந்தார். அவர் 476 ஆறு ஓட்டங்கள் அடித்து அந்தச் சாதனையை தன் வசம் வைத்திருந்தார். கடந்த இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் கெய்ல் 488 ஆறு ஓட்டங்கள் அடித்தன் மூலம் அந்தச் சாதனையை முறியடித்தார்.

**மரண அறிவித்தல்**

**மாணிக்கம் தர்மலிங்கம்**



மண்டைதீவைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கம் தர்மலிங்கம் நேற்று (21.02.2019) வியாழக்கிழமை இறைபதமடைந்துவிட்டார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்
“வேல் பவனம்”
முதலாம் வட்டாரம்,
அல்லைப்பிட்டி கிழக்கு,
அல்லைப்பிட்டி.

(cs 23503) (13)

077 102 8000 , 077 815 0401

**போட்டிப் பரீட்சை வகுப்புகள்**

சகல பரீட்சைகளுக்குமான சகல வினாத்தாள்களுக்குமான வகுப்புக்களும் நடைபெறும்.
பிரதி ஞாயிறு
9.00 → 3.00 மணிவரை
SLAS
SLEAS
LLB
வரி மதிப்பீட்டாளர்
நீதிமன்ற பதிவாளர்
புள்ளி விபரவியலாளர்
பல்கலைக்கழக விசேடகற்கை உளச்சார்பு
சனி 11.00 மணி → 2.00 மணிவரை
தொடர்புகளுக்கு
076 688 3394
யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 22.02.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.